
கல்கி
KALKI 15.4.84 ரூ 1-20
இல்லறம் எனும் நல்லறம்
இலவச இணைப்பு



ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் ஒன்றுதான், அதன் ஒப்பற்ற 3-வழிச் செயலால் வியர்க்குருவை தடுக்கிறது, முறியடிக்கிறது.

OBM-2515 TM

ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் ஒன்றில் தான், சிறப்புமணம் பெற்ற மருந்துக் கலவை அடங்கியுள்ளது—அது, மூன்று தீவிரமான வழிகளில் செயல் படுகிறது.

- **தடுத்தல்**

  இதன் பாக்டீரியோஸ்டாடிக் செயல், பாக்டீரியா கிருமிகள் பெருகுவதை தடுக்கிறது.

- **நிவாரணம்**

  சுகந்த மணமுள்ள ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர், வியர்வையை உறிஞ்சுகிறது, இதமளித்து விரைவான நிவாரணம் தருகிறது.

- **செயல்**

  ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் ஒப்பற்ற கோர்டோனிடிக் செயல் உள்ளது: அது, பாதிக்கப்பட்ட சருமத்தை விரைவாக மாசு மருவற்றதாக்குகிறது.





குடும்பம்
முழுவதற்குமான
பாதுகாப்பு

Johnson & Johnson

ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர்- வேர்க்குருவிலிருந்து உங்களுக்கு சிறந்த பாதுகாப்பு.



கோவி. மணிசேகரன் எழுதும்
வேங்கைக் குமரி
கல்கி
ஏப்ரல் 29 இதழில்
ஆரம்பமாகிறது



நல்லவர்களான பொல்லாத தமிழர்கள்

அடியார்



அடியார்

''மூத்த சகோதரர் கட்சியைச் சேர்ந்தவர்'' என்று வர்ணித்தது பாகிஸ்தான் டைம்ஸ், அடியார் அந்நாட்டுக்குச் சென்றிருந்தபோது! (Elder brother's party) 'அதபி ஸிநோபி மேளா' என்ற அமைப்பின் அழைப்பின் பேரில் பாகிஸ்தானில் 21 நாட்கள் அரசவிருந்தாளியாகச் சுற்றுப்பயணம் செய்தார் அடியார். ''அங்குள்ள மக்கள் மிகவும் சுதந்திரமாக இருக்கிறார்கள். ராணுவ ஆட்சி நடப்பது மாதிரியாகத் தெரியவே இல்லை'' என்று கூறும் அடியாரை அங்குள்ள மக்கள் ஆச்சர்யத்துடன் கேட்டது: ''உங்கள் இந்தியா ஏன் எங்களிடம் வீண் சண்டைக்கு வருகிறது?''

பாகிஸ்தானில் தமிழர்கள் ஆங்காங்கு வாழ்கிறார்கள் என்றாலும் தமிழைப் பற்றி — தமிழர்களைப் பற்றி அறிந்த தமிழர் அல்லாத பாகிஸ்தானியர்களும் இருக்கவே செய்கின்றனர்.

டாக்டர் அல்லானா:

பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத். அங்குள்ள இக்பால் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் அல்லானா.

இவர் சிந்து மொழிக்கும் திராவிட மொழிகளுக்கும் உள்ள ஒற்றுமையை ஆராய்பவர். சிதம்பரம் நடராசரின் நடனம் போலவே சிந்து மாநிலத்தின் நாடோடி நடனமும் இருப்பதாகக் கூறுகிறார்.

தமிழ் இலக்கணம் போலவே சிந்து மொழியின் இலக்கணமும் இருப்பதாகவும் சொல்கிறார்.

அவரது வீட்டில் நடராஜர் சிலை இருக்கிறது. தமிழ்நாட்டிற்கு அவர் வந்த போது சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினர் அளித்த அன்பளிப்பு தான் அந்தச்சிலை.

அடுத்த ஆண்டு —இஸ்லாமாபாத்தில் அவரது பல்கலைக் கழகத்தில் மொழி மாநாடு நடப்பதாகவும்— அதற்குத் தமிழகத்திலிருந்து மொழி அறிஞர்களை அழைக்கப் போவதாகவும் கூறினார்.

நாதர் கம்பராணி:

சிந்து மாநில மொழியை விடத் தமிழுக்கு மிகவும் நெருக்கமாய் இருப்பது பராஃவி — அல்லது புரோஹி என்ற மொழி! இந்த மொழி வழங்கும் மாநிலம்— பலூச்சிஸ்தான்!

இந்த மொழி பேசுவோருக்குத் தமிழ் மொழி தங்களது சகோதர மொழி என்பது தெரிந்திருக்கிறது. அதனால் தான் கராச்சியில் புரோஹி மொழிக்காரர் என்னிடம் வந்தார்.

''நீங்கள் தமிழ் மொழி பேசுபவரா?''

''ஆம்!''

''நான் எனது புரோஹி மொழியில் பேசுகிறேன். புரிகிறதா கூறுங்கள்.''

—என்று சொல்லிவிட்டு அவரது மொழியில் பேசத் தொடங்கினார். ஆரம்பத்தில் ஒன்றும் புரியவில்லை. கூர்ந்து கவனித்த போது— தொலைதூரத்தில் திருநெல்வேலி மொழி பேசினால் ''பாதி புரிந்தும் பாதி புரியாததுமாக''க் கேட்குமே அதுபோல் அந்த புரோஹி மொழிப் பேச்சு இருந்தது.

பலூச்சிஸ்தானத்திலுள்ள குவெட்டா நகரத்துப் பல்கலைக்கழகத்திலுள்ள புரோஹி மொழிப் பேராசிரியரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவரது பெயர் — நாதர் கம்பராணி! பெயர் கூடத் தமிழ்ப் பெயர் போலவே இருக்கிறது. அவர்—புரோஹி மொழி பற்றிய இரண்டு நூல்கள் பரிசளித்தார். அந்த நூல்களில் ''திராவிட மொழிகளுக்கும் புரோஹி மொழிகளுக்குமுள்ள ஒற்றுமை'' பற்றி நிறைய எழுதப்பட்டிருக்கிறது.



டாக்டர் அல்லானா



ஜாமீர் ஜாபரி!

''தமிழர்கள் நல்லவர்கள் அதேசமயம் பொல்லாதவர்கள்'' என்று கூறியவர் ஜாமீர் ஜாபரி! ராணுவ அதிகாரிதான்! நகைச்சுவை எழுத்தாளர்!

மலேசியாவில் தமிழர்களின் இராணுவத்திற்குத் தலைமை வகித்தவர். தமிழர்களைப்பற்றிக் கூறும்போது அவரது குரலில் உற்சாகம் மேலிடுகிறது:



நாதர் கம்பானி



- எப்போதும் சிரித்த முகமாய் இருப்பார்கள் தமிழர்கள்! அதிகாரிகளைக் கண்டால் ஒரு விதமான சோகம்!

- எப்போதும் சாதுவாய் இருப்பார்கள்! கோபம் கொண்டால் அடக்க முடியாது!

ஜாமீர் ஜாபரி



- நூற்றுக்கு நூறு சதவீதம் உண்மையாக உழைப்பார்கள். மேலதிகாரி பொய்யன் என்றால் தகராறு செய்வார்கள்.

மலேஷியாவில் (அப்போதைய மலாயாவில்) இருந்த தமிழ் இராணுவப் பிரிவின் தலைவராக ஒரு பிரிட்டிஷ்காரர் இருந்தார். அவருக்குக் கை கொஞ்சம் நீளம்.

இராணுவ வீரர்களின் பங்கீட்டு உணவை (ரேஷனை) திருடிவிட்டார் ஒருமுறை! தமிழர்கள் கலகம் செய்தார்கள். பிரிட்டிஷ் அதிகாரி நீக்கப்பட்டார். அந்த இடத்தில் என்னைப் போட்டார்கள். நான் பயந்து நடுங்கிக் கொண்டே சென்றேன்; அவர்கள் எல்லாம் இந்துக்கள்; நான் முஸ்லிம்!



என்ன செய்வார்களோ—என்று அஞ்சினேன். ஆனால் நான் நியாயமான அதிகாரி என்று அறிந்ததும் எனக்குச் செல்லப் பிள்ளைகளாகத் தமிழ் வீரர்கள் மாறினார்கள்.

தமிழ் இராணுவ வீரர்களுக்காக ''ஜவான்'' என்ற பெயரில் தமிழ்ப் பத்திரிகை ஒன்று நடத்தினோம். அதற்கு ஆசிரியர் நான்தான். எனக்குத் தமிழே தெரியாது.

கணபதி என்ற தமிழர் எனக்கு உதவியாக இருந்தார். நான் இந்துஸ்தானியில் கூறுவதைப் புரிந்து கொண்டு அற்புதமாக அந்தப் பத்திரிகையைக் கொண்டு வருவார்.

நம்பிக்கை — பரிபூரணம் (Perfection) இவற்றுக்கு மறுபெயர் உண்டு என்றால் அது தமிழர்களே!


பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமாபாத்தில் இப்படி ஒரு குரல் ஒலித்தது கேட்டு என் உடல் புளகாங்கிதம் அடைந்தது.

அடுத்த வாரம்


எதிர்க்கட்சிகள் மாநாடு எதற்காக?

—அலசல்


நான் வெளிநாட்டுக்குப் போய் மந்திரியம்தம் பண்ணப் போறேன்!
உள்நாட்டுப் பூசல்




ஐயயோ! அநியாயம்! அக்கிரமம்! சவான் மாதிரி பேசாத மக்களுக்கு 'தேசிய' மொழிச்சட்டத்தைத் திணித்திட்டார்!.. எனக்கு நல்லா தெரியும்!.. நான் தானே அப்ப சபாநாயகர்!



கல்கி

1984 ஏப்ரல் 15
மலர் : 42 இதழ் : 37
ரக்தாஷி சித்திரை 3



நிமிர்ந்த நெஞ்சும் உயர்ந்த பார்வையும்

நேயர்களுக்குப் புத்தாண்டு வாழ்த்துக்கள். ''ரக்தாஷி'' என்ற பயங்கரமான பெயரைக் கொண்டிருந்தாலும் 'மெத்த மழையும், நல்ல விளைச்சலும் இந்த ஆண்டில் உண்டு' என பஞ்சாங்கம் பலன் கூறுகிறது. 'அப்பாடா, பிழைத்தோம்!' என்று திருப்திப்பட்டுப் பெருமூச்சு விடுவதற்குள், 'வேந்தர் பகைத்து ஒருவரை ஒருவர் கோபப் பார்வையுடன் நோக்குவர்' என்றும், அடுத்த வரி பயமுறுத்துகிறது! ஜியாவும், பிரதமரும் ஒருவர் மீது ஒருவர் தொடர்ந்து கோபப்பார்வை வீசிக் கொள்ளலாம்; ஆனால் ருஷ்யா பக்கம் என்னவோ நேசப்பார்வைதான் நீடிக்கும் என்று நம்ப சோயுஸ்—11 வழிவகுத்திருக்கிறது.

ராகேஷ் சர்மா — இன்று ஒவ்வொரு இந்தியனின் உதட்டிலும், உள்ளத்திலும் இடம் பெற்றுள்ள வீரன். ரவிஷ் மல்ஹோத்ராவுக்கும் இந்தப் பெருமையில் சமமான பங்கு உண்டு. மல்ஹோத்ரா இந்தப் பயணத்தில் இடம் பெறவில்லை என்றாலும் இருவருமே பயணத்துக்கு முன்னேற்பாடாகச் சமஅளவில் எடுத்துக் கொண்ட முயற்சியும், முனைப்பும்தான் இன்று வெற்றிச் சிகரத்தில் அவர்களையும் பாரத தேசத்தையும் நிறுத்தியுள்ளன. நமது வாழ்த்துக்களுக்கு இரு வீரர்களும் நன்றிக்கு ருஷ்ய நாட்டவரும் உரியவர்களாகிறார்கள். ஸோயுஸ்—11, விண்வெளி விஞ்ஞானக் கூடமான சல்யூட்டுடன் இணைந்தது; பிரதமர் தலைநகரிலிருந்து விண்வெளியுடன் தொடர்பு கொண்டு ராகேஷ்சர்மாவுடன் பேசினார்; சர்மா நடத்தும் ஆய்வுகள் இந்தியாவின் நீர்வளம், நிலவளம், கனிவளம்; கடல்வளம் முதலியவற்றைக் கணிக்க உதவும்; நம் தேசத்தில் அநாதி காலமாகப் பயிலப்பட்டு வரும் யோகாசனங்களை ராகேஷ் விண்வெளியில் செய்து பலா பலன்களைக் கணிக்க விஞ்ஞானிகளுக்கு உதவுவார் என்பன போன்ற தகவல்கள் நம்மைப் பூரிப்படையச் செய்கின்றன; பெருமிதத்தால் நெஞ்சு நிமிர்ந்து தலை உயரப் பார்க்கும் நாம் சற்றுப் பார்வையைத் தாழ்த்தினோமானால் இங்கு நிலவுகிற அவலங்களையும் காண்கிறோம்!

விண்வெளி வீரருடன் பேசும் பிரதமர் அஸ்ஸாம், பஞ்சாப் பிரச்னைகள் தீரப் பேச்சுவார்த்தைகள் நடத்துவது எப்போது? மாவீரர்கள் என்று ரவிஷையும், ராகேஷையும் போற்றும் இந்தியர்கள், பங்களூரில் பட்டப் பகலில் பகிரங்கமாக ஒரு மருத்துவமனையில் கொலை நடந்தபோது கோழைகளாகிப் பயந்து ஒதுங்கியது எதனால்? உலகமெல்லாம் யோகாசனப் பயிற்சியைப் போற்றும்போது நமது பள்ளிகளில் பிள்ளைகளுக்கு அது ஏன் போதிக்கப் படுவதில்லை? சோயுஸ் திரும்ப பூமி மட்டத்துக்கே வந்து விடும்; ஆனால் விண்வெளியில் சஞ்சரிக்கும் நம்நாட்டு விலைவாசிகள் கைக்கெட்டும் உயரத்துக்கு வருவது எப்போது? இந்திய — ருஷ்ய நல்லுறவு பலப்படுகிறதேயொழிய இந்திய ஒருமைப்பாடு நாளுக்கு நாள் பலவீனமடைந்து வருகிறதே? நிலவள, கனிவள, ஆராய்ச்சி தேவைதான், ஆனால் இங்கே மக்களின் வாழ்க்கை வளம்பெற வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிவது என்று? ரவிஷும் ராகேஷும் காட்டிய உழைப்பார்வத்தை இந்தியக் குடிமகன் ஒவ்வொருவனும் பின்பற்றுவானா?

இதுபோன்ற கேள்விகளைச் சந்திக்க அஞ்சும் தலைவர்கள் சோயுஸை விட்டுப் பார்வையைத் தாழ்த்துவதில்லை; நம்மையும் தாழ்த்த அனுமதிப்பதில்லை!

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

அபிமானவல்லி

அத்தியாயம் 24
போர்க்களம்

ஆதித்தனுடைய படைபலம், முன்னேறி வரும் மார்க்கங்கள், போர்த் தந்திரங்கள், வியூக அமைப்பு முதலியவை பற்றி முன்கூட்டியே அறிந்திருந்ததாலும் படையெடுப்பை எதிர்த்து வெற்றி கொள்ளச் சிறந்த மாற்றுப் போர்த் திட்டங்களை வகுக்க முடிந்திருந்ததாலும் எப்படியும் சோழனை முறியடித்துப் புறமுதுகிடச் செய்யலாம் என்று நம்பி இருந்தார் பல்லவேந்திரர்.

ஆனால் அபராஜிதனுக்குப் பெரும் ஏமாற்றமே காத்திருந்தது. அவன் சற்றும் எதிர்பாராத திசைகளில் எதிர்ப்பே இல்லாத பகுதிகளில் சோழரது பெரும் சேனை பல அணிகளாகப் பிரிந்து விரைவாக முன்னேறியதுடன் பல்லவ வீரர்களை ஆங்காங்கே சுற்றி வளைத்து நாலு திசைகளிலிருந்தும் தாக்கித் துவம்சம் செய்தன. பின்வாங்கவும் முடியாமல் முன்னேறவும் விடாமல் திமர் திமுரென்று ஆங்காங்கே முளைத்துப் பாய்ந்து குதறிய எதிரிகள், முன்கூட்டியே பல்லவ நாட்டுக்குள் மாறு வேடங்களில் ஊடுருவி இருக்க வேண்டும் என்று புரிந்தது. தப்பினோம் பிழைத்தோம் என்று சில படைப் பகுதியினர் வந்த வழியே திரும்பி ஓட்டமெடுத்த போது பாலங்கள் தகர்க்கப் பட்டும் நதிகள் உடைப்பெடுத்தும் நெற்களஞ்சியங்கள் தீக்கிரையாகியும் முன்னேற்றத்தைத் தடை செய்ததுடன் அவர்களைத் திகைப்பிலும் துயரத்திலும் ஏன் பீதியிலும் கூட ஆழ்த்தின.

இவ்வாறு நிலைகுலைந்து போன படை வீரரை ஒன்று திரட்டி 'வெற்றி அல்லது வீர மரணம்' என்று முழக்கம் செய்து உற்சாகமூட்டி பல்லவ மன்னன் அபராஜிதன் தானே தலைமை தாங்கி நடத்திச் சென்றான். மன்னனே முன்வந்து தைரியம் கூறவும் அதுவரை அஞ்சியதற்காக வெட்கியும் புதிதாக வெறி கொண்டும் அணி திரண்டது. அவனைப் பின்பற்றியது.

பட்டத்து யானை மேல் கம்பீரமாக அமர்ந்திருந்தான் அபராஜிதன். கதிரவனின் ஒளிக்கதிர் பட்டு அவன் கவசங்கள் பளபளத்தன. வாள் சக்கராயுதமாகச் சுழன்ற போது, 'இன்னொரு சூரியன் இங்கு உதித்தானோ' என்ற மயக்கத்தை உண்டு பண்ணியது. ஒரு சிறிய சோழ சைனியத்தின் நடமாட்டத்தை முன்னணி வீரர் உதவியால் அறிந்ததும் வீர கர்ஜனை புரிந்தான். அவனுடைய ஹுங்காரமே பல்லவ வீரருக்கு அசாதாரணத் துணிவையும் ஊக்கத்தையும் அளித்தது. ''எப்போது வேங்கைப்புலி நுழை நரியாக மாறிவிட்டதோ அப்போதே அது தன் அழிவைத் தேடிக் கொண்டு விட்டது. நரியின் தந்திரம் சிறிது நேரம் வெற்றி பெறுவது போல் தோன்றலாம். ஆனால் சிங்கத்தின் முன் அதன் பலம் எம்மாத்திரம்!'' என்று யானை மீது ஆஜானுபாகுவாகக் கேடயமும் வாளும் ஏந்தி நின்று தன் வீரரை நோக்கி இடி முழக்கம் செய்தான். அவர்கள் சிலிர்த்துப் பொங்கி, ''ரிஷபக் கொடியோன் வெல்க'', என வாழ்த்தொலி எழுப்பவும் சங்கங்கள் முழங்கின, முரசங்கள் அதிர்ந்தன. ஹோவென்ற பேரிரைச்சலுடன் ஆவேசமாகப் பாய்ந்து வரும் பல்லவ சேனையைப் பார்த்து அந்தச் சிறிய சோழப் படை திகிலடைந்து திரும்பி ஓடவும் பல்லவ வீரர்கள் மேலும் துணிவு பெற்றவர்களாக விரட்டிச் சென்று மான் மீது தாவும் சிங்கம் போல் தாக்கி நிர்மூலமாக்கினர். அபராஜிதனின் வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகளில் ஒன்று கூடக் குறி தப்பவில்லை. அம்பறாத்தூணியில் அம்புகள் தீர்ந்தபோது வேல் பாய்ச்சி சோணாட்டுக் குதிரை வீரர்களையும் காலாட்படையினரையும் அழித்தான். கரை புரண்ட மகிழ்ச்சியோடு பல்லவ சேனை ஆர்ப்பரித்தது.

அபராஜிதன் இந்தக் குதூகலத்தில்தானும் பங்கு பெறுவது போல் வெளிப் பார்வைக்குக் காட்டிக் கொண்டானே தவிர உள்ளூர அவன் இந்தச் சிறு வெற்றிக்கு முக்கியத்துவம் தரவில்லை. பல்லவர் பெரும்படை பல இடங்களில் படுதோல்வியுற்றுப் பரிதவித்துக் கொண்டிருப்பதாக அவனுக்குச் செய்தி எட்டியிருந்தது. மடிந்தவர்கள், படுகாயமுற்று மருத்துவ முகாம்களுக்குத் தூக்கிச் செல்லப்பட்டவர்கள் தவிர வேறு பலர் சுற்றி வளைக்கப்பட்ட போது செயலிழந்து ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு நூற்றுக் கணக்கில் சரணடைந்திருந்தார்கள் என்றும் அவனுக்குத் தெரிந்திருந்தது. இப்போது அபராஜிதனின் ஒரே நோக்கம் ஆதித்தனை எப்படியாவது போரில் சந்திப்பது ஒன்றுதான். எதிர்கொண்டு, நேருக்கு நேர் யுத்தத்துக்கு அறைகூவல் விட்டு அவனைத் தன்னால் வென்று விட முடியுமானால் மட்டுமே பல்லவ குலத்தின் மானத்தைக் காப்பாற்ற இயலும். காஞ்சி, சோழனின் வடதிசைத் தலைநகராக மாறாதிருக்க இது ஒன்றே கடைசி உபாயம். சோழப் பெரும் படை வென்றாலும் ஆதித்தன் தனிப்பட்ட முறையில் தன்னிடம் தோல்வி கண்டால் பல்லவ நாட்டின்

கி.ராஜேந்திரன்



ஒரு பகுதியை மட்டும் விட்டுக்கொடுத்துத் தற்காலிகப் போர் நிறுத்தத்துக்கும் சமாதான உடன்பாட்டுக்கும் முயலலாம். பின்னர் திரிபுவனியின் திருமணத்துக்கும் வழிவகுத்து நட்பை நிரந்தரமாக்கிக் கொள்வதும் சாத்தியமாகலாம். ஒருவேளை ஆதித்தனிடம் தான் தோல்வியுற நேர்ந்தால் தான் சங்கடம். ஆனால் அதுவே தனது வீர மரணமாக முடியுமானால் இந்தப் பெரும் அவமானத்தினிடையில் ஒரு பெருமையும் நிலைக்கும்... இவ்வாறெல்லாம் யோசித்துத்தான் ஆதித்தனைச் சந்திக்கத் துடியாய் இருந்தான் அபராஜிதன். எனவே தன்னால் முறியடிக்கப்பட்ட சோழப்படைப் பகுதியில் சிறைப்பட்ட சிலரைப் பிடித்து உலுக்கி விசாரிக்கச் செய்தான். எந்தத் திக்கில் எத்துணை படை பலத்துடன் ஆதித்தன் முன்னேறி வருகிறான் என்பதை அறிய முயன்றான். கேள்விகள் பதில்களைப் பெற்றுத் தராத போது சாட்டைகள் பேசின. சித்திரவதைகள் தொடர்ந்தன. ரணகளத்தில் காயங்களையும் அவற்றின் வலி வேதனைகளையும் தாங்கலாம்; உயிரையும் விடலாம். ஆனால் கொல்லாமல் கொல்கிற இந்த உபாதைகளை அவர்களால் பொறுக்க முடியவில்லை. ஆதித்தன் வரும் திசையையும் அவனைச் சூழ வரும் அணியின் விவரங்களையும் ஒளிக்க வேண்டிய அவசியம் இருப்பதாகவும் அவர்கள் உணரவில்லை. எப்படியிருந்தாலும் பல்லவனின் தோல்வி உறுதி என்று நம்பியதால் நாத்தளர்ந்தனர்.

திருநெல்வேலி மதுரை ரோட்டில் லாட்டரிச் சீட்டு விற்பனை விநோதமானது. 'சார்! லாட்டரி சீட் பத்து பைசாதான்' என்று கூறுகிறார்கள். லாட்டரிச் சீட்டுக் கடையைச் சுற்றி மக்கள் கூட்டம் கூடுகிறது. பத்து பைசா வீதம் பத்து பேரிடம் காசை வசூலித்து பதிலுக்கு டோக்கன்கொடுக்கிறார்கள். பின் பத்து டோக்கன்களை டப்பாவில் போட்டுக் குலுக்கி ஒரு டோக்கனை மட்டும் எடுக்கிறார்கள். அந்த டோக்கனுக்குரிய நம்பர் யாரிடம் இருக்கிறதோ அவருக்கு ஒரு ரூபாய்ப் பரிசுச் சீட்டுப் போகும். மீதி ஒன்பது பேரும் ஏமாற வேண்டியதுதான்!

—எஸ். முகம்மது யூசுப்.



அந்தத் திக்கிலே விரைந்தான் அபராஜிதன். இரு நாழிகைப் பயணத்தில் தொலைவில் வெண்கொற்றக் குடை பளபளப்பதையும் புலிக்கொடிகள் பட்டொளி வீசிப் பறப்பதையும் காண முடிந்தது. பட்டத்து யானை தும்பிக்கை உயர்த்திப் பிளிறியது கேட்டது. மகிழ்ச்சியால் அவன் மனம் துள்ளிய அதே நேரத்தில் ஆதித்தனும் யானை மீது ஆரோகணித்து வரும் அபராஜிதனைப் பார்த்து விட்டான். அவன் உள்ளத்தை விசனம் கவ்வியது; இதயம் உறைந்தது!

பட்டத்து யானைகள் இரண்டும் கண்டாமணி ஒலி எழுப்பி ஒன்றையொன்று ஓட்டமும் நடையுமாக நெருங்கின. ''பிரபோ! யானைகள் ஒன்றையொன்று தாக்கிக் கொள்ளப் போகின்றன'' என்று எச்சரித்தான் குலாந்தகன். இரு மத்தகஜங்களின் முகபடாங்களும் டணர் என்று மோதின. யானைகள் பின் வாங்கின. மீண்டும் மோதிக் கொண்டன. ''குலாந்தகா! ஒதுக்கிப் பக்கவாட்டில் செலுத்து'' என்றான் ஆதித்தன். ''பகை, பட்டத்து யானைகளிடையே இல்லை; மன்னர்களிடையே தான்!''

''பிரபோ தங்கள் ஆற்றல்கள் நான் அறியாதவை அல்ல. ஆனால் அபராஜிதனும் சகல ஆயுதங்களையும் பிரயோகிப்பதில் கைதேர்ந்தவன் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அலட்சியம் வேண்டாம்'' என்றான் குலாந்தகன்.

'அலட்சியமா? அவமானமல்லவோ என்னை ஆட்டிப் படைக்கிறது?' என்று நினைத்துக் கொண்டான் ஆதித்தன். 'திருப்புறம்பயம் போருக்குப் பின் எவ்வளவு பெருந்தன்மையுடன் நடந்து கொண்டான் பல்லவேந்திரன்! அவனிடம் பகைமை பாராட்டி எதிர்த்து வெற்றி கொள்ளவல்லவா வந்திருக்கிறேன் நான்!'

யானைகள் பக்கவாட்டில் அருகருகே நெருங்கிய போது ''நண்பரே!'' என்று உரக்க அழைத்தான் அபராஜிதன். ஆதித்தன் உடல் குறுகிப் போனது. ''புலி நரியானது எப்படி? நட்பு பகையானது எங்ஙனம்? திருப்புறம்பயம் போருக்குப் பிறகு சோழநாடு முழுவதையும் உமக்கே வெகுமதியாக அளித்துத் திரும்பியதற்கு நல்ல கைம்மாறு இது!''

சீண்டி விடப்பட்ட சோழனுக்கும் உடலில் சூடேறியது. மனத்தையும் உசுப்பி விட்டுக் கொண்டு பற்களை நறநறத்தான். படை வீரர்களின் ஆரவார முழக்கங்கள்; வாட்களும் கேடயங்களும் ஒன்றோடொன்று மோதும் ஒலிகள்; முரசங்கள், தாரை, தப்பட்டைகளின் சத்தம் — அனைத்தையும் மீறி அவன் குரல் கணீரென்று கேட்டது.

''எமக்குரிய நாட்டை எம்மிடமே அளித்ததன் பெயர் வெகுமதியா? ஏதோ உமது சொத்தை எங்களுக்குத் தானமாக வழங்கியது போல் பேசுவது உமது இறுமாப்பு! அதற்காக நன்றியை வேறு நீங்கள் எதிர்பார்ப்பது வேடிக்கை! இருப்பினும் பத்தாண்டுக் காலம் பொறுத்திருந்தேன். இன்று சோழரின் அறுநூறு ஆண்டு

வெள்ளிப்
பதக்க
அன்பளிப்பு!



பத்தாண்டு முடிந்து புத்தாண்டு பிறந்தது!
சித்திரை வெள்ளி நிலா உலா!

ஸ்ரீராம் வழங்கும் வெள்ளிப் பதக்கங்கள்!

ஞாயிறு, ஏப்ரல் 15-ம் தேதி மட்டுமே.

கடந்த 10 ஆண்டுகளில் உங்களது ஸ்ரீராம் ஸ்தாபனம் பெருமையளிக்கும் விதத்தில் வளர்ச்சி கண்டிருக்கிறது. தற்போது வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 25,000க்கு மேல். பட்டுவாடா செய்யப்படும் தொகையோ 9 கோடி ரூபாய்க்கும் அதிகம்.

வாடிக்கையாளர்களின் முழு நம்பிக்கையும், ஸ்தாபனத்தின் ஒப்பற்ற நேர்மையுமே இந்த வளர்ச்சியின் பின்னணி...

எமது 11-வது புதிய ஆண்டில், ஏப்ரல் 15, சித்ரா பௌர்ணமியன்று புதிதாக சீட்டுகளில் சேரும் எல்லோருக்கும் தெய்வீக வெள்ளிப் பதக்கங்களை அன்பளிப்பாகத் தர முன்வந்துள்ளோம். இந்த அன்பளிப்பு எங்களது எல்லா அலுவலகங்களிலும் உண்டு.

ரூ. 5,000 சீட்டு குரூப்புகளுக்கு 5-கிராம் வெள்ளிப் பதக்கமும், மற்ற குரூப்புகளுக்கு 10-கிராம் வெள்ளிப் பதக்கமும் அளிக்கிறோம்.

எமது புதிய சீட்டு குரூப்புகள்:

ரூ.	125 x 40 மாதங்கள்	ரூ. 5,000
ரூ.	200 x 25 மாதங்கள்	ரூ. 5,000
ரூ.	200 x 50 மாதங்கள்	ரூ. 10,000
ரூ.	250 x 40 மாதங்கள்	ரூ. 10,000
ரூ.	400 x 25 மாதங்கள்	ரூ. 10,000
ரூ.	625 x 40 மாதங்கள்	ரூ. 25,000
ரூ.	1000 x 50 மாதங்கள்	ரூ. 50,000 (டாக்டர்கள் குரூப்)
ரூ.	1250 x 40 மாதங்கள்	ரூ. 50,000
ரூ.	1000 x100 மாதங்கள்	ரூ. 1,00,000 (எக்ஸிக்யூடிவ் குரூப்)

(நுழைவுக் கட்டண விகிதங்கள் தனி)

- நீங்கள் பல சீட்டுகளில் சேரலாம். பல வெள்ளிப் பதக்கங்களைப் பெறலாம். இந்த அரிய வாய்ப்பு ஞாயிறு, ஏப்ரல் 15 அன்று மட்டுமே (காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை எல்லா அலுவலகங்களிலும் உண்டு).
- இந்த வெள்ளிப் பதக்கங்கள் பூஜை அறையிலோ, பணப் பெட்டியிலோ வைத்துப் பாதுகாக்க உகந்தது.
- ஸ்ரீராம் மேலும் பல இணையற்ற ஆதாயங்களை வழங்குகிறது. குறித்த நேரத்தில் உங்கள் தேவைக்குப் பணம். தனிப்பட்ட இன்முகச் சேவை. பகிரங்க ஏலம். அதிக டிவிடெண்டுகள். ஓராண்டிற்குப் பின் கடன் வசதி.

மீண்டும் அழைக்கிறோம், வாருங்கள்!

ஸ்ரீராம்
சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் (பி) லிட்.

பதிவு அலுவலகம்:
123, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-1
போன்: 21401/21402

கிளைகள்:
- தி.நகர்: 54, வடக்கு உஸ்மான் ரோடு, சென்னை-17 (போன்: 446688)
- அண்ணாநகர்: ஏ-7, அண்ணா நகர் (கனரா பாங்க் அருகில்) சென்னை-102
- மயிலாப்பூர்: 21, கிழக்கு மாட வீதி, சென்னை-4
- மவுண்ட் ரோடு: 137, மவுண்ட் ரோடு (மின் வாரியம் எதிரில்), சென்னை-2
- பெங்களூர்: 142, கே.எச். ரோடு, டபிள் ரோடு, பெங்களூர்-27 (போன்: 223637)



ஸ்ரீராம் கைராசி, உங்களது பணராசி!

ADWAVE/SCI/2621

அடிமை வாழ்வுக்குப் பழி வாங்க வந்திருக்கிறேன்!''

''பழி வாங்கத் துடிப்பவன் வீரத்தைக் காட்ட வேண்டும்; வஞ்சனையையல்ல!''

''நஞ்சிலே தோய்ந்த வஞ்சியொருத்தியை தஞ்சை அரண்மனைக்குள்ளேயே தந்திரமாய்க் குடிபுகுத்திய பல்லவேந்திரருக்கு 'வஞ்சனை வேண்டாம்' என்று அறிவுரை வழங்க என்ன அருகதை இருக்கிறது?''

''வார்த்தைகள் போதும்; வாளை உருவுங்கள்'' என்றான் அபராஜிதன். யானையைப் போரிட வசதியாகப் பக்கவாட்டில் அருகே கொண்டு நிறுத்தினான் குலாந்தகன். 'டணார் டணா'ரென்று அனல் பொறி பறக்க வாட்கள் மோதின. ஒன்றை ஒன்று உரசின. மின்னின. பிரிந்தன. மீண்டும் மோதின!

அபராஜிதன் மாவீரன் தான் என்றாலும் போர்க் கலையின் நுணுக்கங்களை அறிந்தவனெனினும் வயது கூடியிருந்தாலும் அண்மைக்காலமாக அமைதிச் சூழலில் மென்மையான வாழ்க்கை நடத்தியிருந்தாலும் சீக்கிரமே சோர்வுற்றான். பிடி நழுவ, கையிலிருந்து வாள் பிரிந்து சக்கர வட்டமாகச் சுழன்று தொலைவில் போய் விழுந்தது. உடனே வேல் ஒன்றை எடுத்து வீசினான். நல்லவேளையாகச் சரேலென்று யானையைத் திசை திருப்பி மன்னனைக் காத்தான் பாகன். கழுத்தோரமாகத் தோலைக் கீறிச் சென்றதற்கு மேலாக ஆபத்து ஏதும் விளைவித்து விடவில்லை ஈட்டி. என்றாலும் காயம் ஏற்படுத்திய எரிச்சலால் விளைந்த கோபம் உந்த குலாந்தகனிடம் 'ஆஹா'காரத்தை எழுப்பிய ஒரு காரியத்தைச் செய்தான் ஆதித்தன். ''நன்றி, குலாந்தகா!'' என்று கூறி முடித்த கையோடு, அம்பாரியின் விளிம்பில் ஏறி, பல்லவேந்திரனின் யானையைக் குறிவைத்துத் தாவி, அபராஜிதன் அமர்ந்திருந்த அம்பாரிக்குள்ளேயே குதித்து, அதே வீச்சில் பல்லவனை ஒரு குத்துவிட்டுச் சரித்தான். இதைச் சற்றும் எதிர்பாராத பல்லவேந்திரன் சிரமப்பட்டுச் சமாளித்து நிமிர்ந்து இடையிலிருந்து குத்துவாளை உருவிக் கொண்டான். ஆதித்தனும் சிறிய குத்திட்டியை எடுத்துக்கொள்ள இருவரிடையேயும் துவந்த யுத்தம் நடந்தது. தன்னிடமிருந்த அங்குசத்தின் ஒரே வீச்சில் பல்லவேந்திரரின் யானைப் பாகனை மண்ணைக் கவ்வச் செய்து விட்டு அவனிருந்த இடத்துக்குத் தாவி அமர்ந்தான் குலாந்தகன். யானை அதிகமாக அசையாதவாறு கட்டுப்படுத்தினான்.

யானை மீது அம்பாரிக்குள் இரு மன்னர்களும் போராடுகிற இந்த விசித்திரத்தைக் கண்டு படை வீரரும் பகை மறந்து திகைத்து நோக்கினர். ஒருசமயம் அபராஜிதன் மீது ஆதித்தன் விழுவதும் மற்றொரு சமயம் ஆதித்தனை அபராஜிதன் வீழ்த்துவதுமாகத் துவந்த யுத்தம் நடந்தது. வீரர்கள் இந்த இருவரிடையே நடக்கும் இச்சண்டை, சரித்திரத்தின் போக்கையே நிர்ணயிக்கப் போவதை உணர்ந்தவர்களாய் ஆர்வமுடன் தத்தமது மன்னர்களை வாழ்த்தியும் கைக்குவித்தும் ஆரவாரித்தனர்.

ஒரு கட்டத்தில் அபராஜிதனிடமிருந்த குத்துவாள் தெறித்து எட்டத்தில் போய் விழ, நிராயுதபாணியான அவன் புன்னகைத்தபடியே, ''நண்பனே! இதுதான் சமயம். தயங்காமல் என்னை எளிதாகக் கொன்று விடலாம்!'' என்று சீண்டினான். ''தயவுசெய்து சிறைப்படுத்தி அவமானத்துக் குள்ளாக்காதே!'' நிராயுத பாணியைக் கொல்லவும் விரும்பாமல் சிறைப்படுத்தவும் முடியாமல் ஆதித்தன் தவிப்பதை உணர்ந்த குலாந்தகன் தன் இடுப்பிலிருந்த குத்திட்டியை எடுத்து ''பிரபோ!'' என்றழைத்து வீசினான். அதை லாகவமாகப் பற்றிப் பல்லவேந்திரனிடம் எறிந்தான் ஆதித்தன். யுத்தம் தொடர்ந்தது. குறுகிய அந்த இடத்தில் குத்துவாள் சண்டை போடுவது சிரமம் மட்டுமல்ல, ஆபத்தும் அதிகம் என்பதை அனைவருமே அறிந்திருந்தனர். இரு சிங்கங்கள் பிடரி மயிரைச் சிலிர்த்துக் கொண்டு மோதுவது போல் அவர்கள் ஒருவர் மீது ஒருவர் பாய்ந்து புரண்டார்கள். கவசங்கள் ஒன்றன் மீது ஒன்றுபட்டு உலோக ஒலி எழுப்பின. போரின் உக்கிரம் கணத்துக்குக் கணம் அதிகமாகி, ஆதித்தனின் பின் கழுத்தில் குத்துவாளை இறக்கும் முயற்சியில் அபராஜிதனின் கரம் உயர்ந்த போது கண்ணிமைக்கும் நேரத்தில் இடைவெளியில் புகுந்து அவனது தோளுக்கும் கழுத்துக்கும்இடையே கவசத்ினூடே காணப்பட்ட இடைவெளியில் குத்துவாளை ஆழமாய்ப் பிடிவரை இறக்கினான் ஆதித்தன். அம்பாரியின் விளிம்பில் மடிந்து விழுந்த பல்லவேந்திரனின் உடல் மறுபடி நிமிரவில்லை. அவன் அடிக் கழுத்தில் ஆழப்பதிந்திருந்த கத்தியின் மணிகள் பதித்த பிடி அனைவரும் காண சூரிய ஒளியில் வானவில்லின் வர்ண ஜாலம் காட்டியது.

''ஐயோ!'' என்று அலறினர் பல்லவ வீரர்கள்.

''வெற்றிவேல், வீரவேல்!'' என்று முழங்கினர் சோழப் படையினர்.

மூச்சிறைக்கச் சில நொடிகள் மட்டுமே நின்ற சோழன், கடமையுணர்ந்து மடிந்து கிடந்த உடலைப் பரிவோடும் பண்போடும் தூக்கி அம்பாரியின் அடித்தளத்தில் நீட்டிக் கிடத்தினான்.

மெல்லக் கண் திறந்து, ''நண்பரே!'' என்றான் பல்லவேந்திரன்.

''அன்பரே'' என்று கண்ணீர் உகுத்தான் சோழன்.

''கைது செய்யாமல் வீர சொர்க்கம் அளித்ததற்கு நன்றி... பழி தீர்ந்ததல்லவா? இனிப் பகையும் மடிந்ததல்லவா?''

''ஆம் பிரபோ! இந்தக் கணத்தில் நமது அறுநூறு ஆண்டுக் கால ஜன்மப்பகை தீர்ந்து போயிற்று. நம்மிருவரது நெருங்கிய நட்பு மேலும் உறுதி பெற்றது!''

''நண்பா ஒரு வரம்'' என்றான் அபராஜிதன். மூச்சுத் திணறியது அவனுக்கு.

''சொல்லுங்கள்'' என்று குனிந்து காது கொடுத்து உன்னிப்பாய்க் கேட்டான் ஆதித்தன்.

பலவீனமான குரல் ஒலித்தது: ''என் செல்ல மகள் திரிபுவனி உன் மனைவி. அவளுக்குப் பிறக்கும் உன் மகன் உனக்குப் பின் சோணாட்டின் அரசன்!''

''புரிகிறது அன்பரே'' என்று தானே பேசி அவனுக்கு வேதனையைக் குறைத்தான் ஆதித்தன். ''இனி பல்லவ தேசம் என்பதாக ஒன்றிராது. ஆயினும் காஞ்சியை வட திசைத் தலைநகராகக் கொண்டு ஆளும் எதிர்காலச் சோழ மன்னன் உடலில் பல்லவ ரத்தம் தான் ஓட வேண்டும்! பல்லவ குலத்தில் பிறந்த ஒருத்தியின் தாய்ப்பால் அருந்தி வளர்ந்தவனாய் அவன் இருத்தல் வேண்டும்! இது தானே உமது கோரிக்கை?''

'ஆம்' என்றது மெலிதான ஒரு புன்னகை.

''தந்தேன் வரம்'' என்றான் ஆதித்தன்.

''ஆதித்தா! மாவீரனும் மனச்சாட்சி உள்ளவனுமாகிய உன்னால் கொல்லப்பட்டு வீர சொர்க்கம் புக நேர்வது என் பாக்கியம்'' என்றான் அபராஜிதன். அமைதி நிலவிய முகத்தில் மூடிய கண்கள் பின்னர் திறக்கவேயில்லை.

(தொடரும்)

விசேஷ பரிசுகளுடன்


டெபாசிட் சேகரிப்பு விழா!

(15-3-1984 முதல் 14-7-1984 வரை)


22% வட்டி வழங்கப்படுவதுடன்
V. I. P. BRIEF CASE
அன்பளிப்பும் வழங்கப்படும்.

மற்றும் மேற்படி காலத்தில் டெபாசிட் செய்பவர்கள் ஒவ்வொருவரும் விசேஷ பரிசு போட்டியில் கலந்துகொள்ளும் வாய்ப்பை பெறுவார்கள். சென்னை கிளையில் டெபாசிட்தாரர்கள் முன்னிலையில் நடைபெறும் பரிசு போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு

முதல் பரிசு
கலர் TV
(அல்லது ரூ. 10,000/- ரொக்கம்)




இரண்டாவது பரிசு
குளிர் சாதனப் பெட்டி
(அல்லது ரூ. 5000/- ரொக்கம்)



மூன்றாவது பரிசு
வாஷிங் மெஷின்
(அல்லது ரூ. 4000/- ரொக்கம்)



நான்காவது பரிசு
பிளாக் & ஒயிட் TV
(அல்லது ரூ. 3000/- ரொக்கம்)



கவர்ச்சிகரமான வட்டி விகிதங்களில் பிக்சட் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன

1-வருடம்	2-வருடங்கள்	3-வருடங்கள்	5-வருடங்கள்
17%	18%	19%	22%

பாலாஜி மோட்டார் & ஜெனரல் பைனான்ஸ்

(Hire Purchase Financiers for Motor Vehicles)

சென்னை : 91, உஸ்மான் ரோடு (சிவா-விஷ்ணு கோயில் அருகில்)
தி. நகர், சென்னை-600 017 போன் : 447186, 442218

பெங்களூர் : 24/1-A, மார்கோஸா ரோடு (10வது கிராஸ்)
மல்லேஸ்வரம், பெங்களூர்-560 003 போன் : 366971

திருச்சி : 22, மதுரை ரோடு (முதல் மாடி) திருச்சிராப்பள்ளி-620 008

பாண்டிச்சேரி : 11, செரு தெரு (கனரா வங்கி எதிரில்) பாண்டிச்சேரி-605 001

தஞ்சாவூர் : எண் : 2 & 3, முதல் மாடி, ஜி. ஏ. கனால் ரோடு,
தஞ்சாவூர்-613 100 போன் : 1626

திருவண்ணாமலை : 14/A, ஆனைக்கட்டி தெரு, திருவண்ணாமலை-606 601 போன் : 483

பட்டுக்கோட்டை : 9-A, தலையாரி தெரு, பட்டுக்கோட்டை-614 601 போன் : 453

டெபாசிட்தாரர்களை அறிமுகம் செய்பவர்களுக்கும் அன்பளிப்பு வழங்கப்படும்.

அது என்ன லாசர் விஷன்?

சென்னை அண்ணாசாலையில் 'பிலிப்ஸ்' கம்பெனியார் ஏற்பாடு செய்துள்ள 'ஷோ – ஷாப்' வெறும் விற்பனைக் கூடமாக மட்டுமில்லாமல், அருமையான காட்சிக் கூடமாகவும் அழகு படுத்தப்பட்டிருக்கிறது.

இங்கேயுள்ள சில பொருள்களை நாம் விலைக்கு வாங்க முடியாது. உலகின் பல் வேறு பகுதிகளில் தயாராகும் 'பிலிப்ஸ்' கருவிகளையும் விளக்குகளையும் பார்வைக்காக வைத்திருக்கிறார்கள்.

ஒரே அளவு வெளிச்சத்தைத் தருகின்ற மெர்க்குரி ஆவி விளக்குகளை விட சோடியம் ஆவி விளக்குகள் தான் அதிக மணி நேரங்கள் வேலை செய்யும். முன்னது 5000 மணி நேரம். ஆனால் சோடியம் ஆவி விளக்கு 15000 மணி நேரம். குறைவான மின்சாரத்தைச் செலவிட்டுக் கூடுதலான வெளிச்சம்பெறுவது எப்படி? ஆர்ஜெண்டா ஸுப்பர்லாக்ஸ் பல்ப், நாற்பது வாட்ஸ் சக்திதான். ஆனாலும் மற்ற அறுபது வாட்ஸ் பல்புகள் தருகிற அதே அளவு ஒளியைப் பெறலாம். வீடுகள் முதல் விற்பனை நிலையங்கள் வரை – ஏன் விளையாட்டு அரங்கங்களைக் கூட விளக்குகளின் மூலம் எப்படி அழகு படுத்துவது என்பதைப் புரிந்து கொள்ள இந்த ஷோ–ஷாப் ஒரு நல்ல ஏற்பாடுதான்.

'ஹாலோஜன் ஸ்பாட் லைட்' என்று ஒரு கருவி. அசப்பில் பார்த்தால் காமிரா மாதிரி இருக்கிறது. இதிலிருந்து வருகிற வெளிச்சம் படுகிற பகுதியில் ஒரு வண்ணப் படம் இருந்தால் கூட, வித்தியாசமான கன பரிமாணம் தெரிகிறது. விற்பனை அரங்குகளில் காட்சிப் பொருள்களை விளம்பரப்படுத்த ' இந்த விளக்குகள் பெரிதும் உதவும். மியூஸியம், கோவில்கள் போன்ற இடங்களில் கூடக் கலைச்செல்வங்களை நுணுக்கமாகப் பார்த்து மகிழ இந்த வகை விளக்குகள் பயன்படலாம். இப்போதைக்கு இந்த ஹாலோஜன் விளக்குகள் இந்தியாவில் தயாராகவில்லை என்றாலும் சீக்கிரமே 'பிலிப்ஸ்' தயாரித்து விற்பனை செய்யக் கூடும்.

ஹாலண்டில் தயாரான லாஸர் விஷனைப் பற்றிச் சொல்லியாக வேண்டும். டெலிவிஷன், வீடியோ பரம்பரையில் லாஸர்விஷன் மூன்றாவது தலைமுறை....

பதிவு செய்யப்பட்ட காட்சிகளை நம்முடைய விருப்பப்படி பிரேம் பிரேமாகவும் பார்க்கலாம்; ஓடும் திரைப்படமாகவும் காணலாம்; ஸ்லோ மோஷன் ஆகவும் அதையே படிப்படியாகப் பின்னோக்கிச் செலுத்தியும் காண வசதியுள்ள ஒரு சாதனம் இது. வேடிக்கையானது மட்டுமில்லை. கல்விக் கூடங்கள், மருத்துவ ஆய்வுகள் போன்றவற்றுக்கு பெரிதும் பயன் படும்.


லாஸர்விஷன் பதிவு, வழக்கமான வீடியோ டேப்பில் இல்லை. கிராமபோன் தட்டு மாதிரிஅமைப்பில் சுழலக் கூடிய அலுமினியத் தகடுதான். கனமான பிளாஸ்டிக் பூச்சு உண்டு. கைபட்டோ அல்லது வேறு எதனாலோ சாதாரணமாகக் கீறல் விழுந்து விடாத அளவு பாதுகாப்பாகத் தயாரிக்கப் பட்டுள்ளது. ஒலியும் இரண்டு சானல்களில் பதிவாகியுள்ளது. விருப்பப்படி எந்தச் சானல் ஒலியையும் கேட்க வசதியுண்டு. கிராமபோன் தட்டுக்களைப்போல் இதில் கோடுகள் எதையும் பார்க்க முடியாது. வெறும் ஒளிக்கதிர்ப் பதிவுகள்தான். பத்து லட்சம் தடவைகள் போட்டுப் பார்த்தாலும் இந்த ஒளித் தட்டுக்கள் கெட்டுப் போகாது. லாஸர் ஒளிக்கதிரே ஊசி முனை போல் பயன்படுவதால் ஒளித்தட்டில் தேய்மானம் இடையாது!

-சுப்ரபாலன்

லாசர் (LASER)

கதிர் வீச்சின் மூலம் ஒளியைப் பெருக்குதல் என்னும் பொருளில் அமைந்த சொற்றொடரின் முதல் எழுத்துக்களின் தொகுப்பே லாஸர் என்பது. (LIGHT AMPLIFICATION BY STIMULATED EMISSION OF RADIATION.) சர்ஜரி தகவல் தொடர்பு, தொழில் துறை இவற்றில் இன்று 'லாஸர்' பெரும் பங்கு வகிக்கிறது.

✕ 'ஷோ-ஷாப்'



இவர்களுக்கு இந்த வருடம் எப்படி?



ஜோதிடர் கணேசன்
சொன்ன பலன்:

பிரதமர் இந்திராகாந்தி

19.5.84 வரை குரு தசை நடைபெற்று வருகிறது. எதிரிகள் உண்டு. ஆனாலும் சமாளிக்கக் கூடிய யோகம் உள்ளது. கு . ஆட்சியாய்த் திகழ்வதினால் பயப்படும்படி எதுவும் ஏற்பட்டு விடாது. இந்தஆண்டு எதுவும்குறைவு ஏற்படாது. இதர கட்சிகள் பற்றிக் குறை சொல்லியவண்ணம் இருப்பார்கள். 6—க்குரிய குரு 11—ல் சஞ்சரிப்பதினால் எதிரிகளின் பலத்தைத் தொடியில் தெரிந்து கொள்வார்.

முதல்வர் எம். ஜி. ஆர்.

இவர் ஜாதகப்படி கிரஹங்கள் மிக நல்ல முறையில் அமைந்துள்ளன. தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில் வேறு எந்தக் கட்சியும் ஆளத் தகுதியில்லை. அவர் ஜாதகப்படி. கோச்சாரரீதியாக சனி உச்சம், குரு தனுசுவில் ஆட்சி பெற்றுள்ளபடியினால் அவரை எந்த மாறுதலுக்கும் உட்படுத்தாது. மகரத்தில் சூரியன், புதன் இருப்பதினால் தான் எடுத்த முடிவு சரியானது என்பதைச் சாதிக்கும் அளவுக்கு கிரஹ பலம் காணப்படுகிறது. உடல் நலம் குறைவு படாது. மனத்துக்குப்பட்டதைநிறைவேற்றுவார்.

மு. கருணாநிதி

புதன் தசை நடைபெற்று வருகிறது. சந்திர லக்னத்திற்கு புதன் 12—ல் மறைந்துள்ளார். மேற்படி புதனை எந்தசுபக்கிரஹமும்பார்வையிடவில்லை. பழைய நிலைக்கு வர இயலாது. ஏதேனும் பிரச்சினையைக் கிளறி விட்டுக் கொண்டே இருப்பார். தனுசுவில் குரு சஞ்சரிக்கிறார். அதுவும் சரியில்லை. இவ்வருடக்கடைசியிலிருந்து தான் ஓரளவுக்கு நல்ல காலம் ஆரம்பமாகும்.

மொரார்ஜி தேசாய்

20.8.86 வரை சனி தசை சம்பூர்ணம் இவருக்கு. இரண்டு கிரஹங்கள் உச்சம் ஆயினும் சனி ஆயுஷ்காரகன். அவருடைய இறுதிப் பகுதி நடைபெற்று வருகிறது. 19.12.84 வரை எந்த மாற்றமும் நடைபெறாது. புதனும், சுக்ரனும் செவ்வாயும் 8—ல் இருப்பதால் குரு மாற்றத்திற்குப் பின் தான் நிலைமை சொல்ல வேண்டும். மீண்டும் பழைய நிலைக்கு வருவது சிரமம்.

வாஜ்பாயி

கோச்சார ரீதியாக சனி தன் சொந்த வீட்டில் இருந்து அவரின் தசை நடைபெறுகிறது. 1984—ம் வருடம் இவருக்குப் பெரும் யோகத்தைச் செய்யாதாயினும் கெடுப் பலன்கள் இல்லை. மிகப்பிரசித்த பெரும் நிலைக்கும் வர இயலாது. எதிர்ப்புகள் இருந்துவரும். நல்ல திருப்பங்கள் இல்லை.

ஜாதகங்கள், மணிமேகலை பிரசுர வெளியீடான ''புகழ் பெற்றவர்களின் ஜாதகங்கள்'' என்ற புத்தகத்திலிருந்து.

தொகுப்பு:

எஸ். சந்திரமௌலி

புகைப்படம்:

ஜெய்மோகன்



✕ ஜோதிடர் கணேசன்

வியர்க்குருவிலிருந்து நிவாரணம் பெற டால்கம் பவுடர் போதாது, நைஸில் வேண்டும்.







HTB-GLL/8808

நைஸில் உபயோகியுங்கள்

வியர்க்குருவினின்று விரைவில் நிவாரணம் பெறுங்கள்.

2 நிற டப்பாக்களில் கிடைக்கிறது. 'நீலம்', 'சந்தனம்'.

நைஸில், மருந்துக்கலவையுள்ள பவுடர் ஆகும். வியர்க்குருவின் எந்தவிதத் தொல்லையிலிருந்தும் உடனடியாக நிவாரணம் அளிப்பதற்கென்றே விசேஷமுறையில் தயாரிக்கப்பட்டதாகும். டால்கம் பவுடர்களைப் போலன்றி, பிரச்சினை மோசமாவதனின்றும், பரவுவதனின்றும் எதிர்த்துக் காக்கிறது இது.

1. அளவுக்கு மீறிய வியர்வையைத் தடுக்கிறது.
2. வியர்வையை உறிஞ்சுகிறது. 3. துர்நாற்றம் ஏற்படுத்தும் கிருமிகளை அழிக்கிறது. 4. சருமத்திற்கு இதமளிக்கிறது.

உடல் நலத்தின் உறைவிடம்

க்ளாக்ஸோ

மலைக்கனல்

நா. பார்த்தசாரதி

அத்தியாயம் 1

முன்னே நடக்க வழியோ இடமோ இல்லை என்று ஆகிற போது பின்னால் திரும்ப வேண்டி நேர்வது தவிர்க்க முடியாதது. மேலே ஏறுவதற்கு உயரமோ, சிகரமோ இல்லாத போது கீழே இறங்க வேண்டியதைத் தவிர வேறு வழியேயில்லை. படியேறுவதைப் போல் படியிறங்குவது அத்தனை சிரமமான காரியமில்லைதான். ஏறுவதற்கு ஆன நேரத்தில் பாதி நேரத்திற்குள் கீழே இறங்கி விடலாம். நினைவுப்பாதையில் படியிறங்கித் திரும்பிப் பின்னோக்கி நடப்பதும் அப்படித்தான். கழிந்து போனவற்றை நினைந்து உருகுவதற்குத் தமிழில் அழகான சொற்றொடரே இருக்கிறது. 'கழிவிரக்கம்' என்று எத்தனை பொருத்தமாகப் பெயர் வைத்திருக்கிறார்கள்.

அவனுக்குத் தன்னுடைய மனத்துக்குள் அந்தரங்கத்தில் ஏதோ வேகமாக வற்றிக் குறைந்து கொண்டிருப்பது போல் ஓர் உணர்ச்சித் தவிப்பு. குறைந்து கொண்டிருப்பது என்னவென்று சரியாக நினைக்கவும் சொல்லவும் தெரியவில்லை. ஆனால் உருவெளித் தோற்றத்தில் அது ஒரு காட்சியாக மட்டும் தெரிந்தது. மிகவும் மங்கலாகக் கனவுக் காட்சி போல் தெரிந்தது.

ஒரு பெரிய அகல் விளக்கில் எண்ணெய் வற்றித் திரி தன்னையே எரித்துக் கொண்டு பின்னோக்கி நகர்வது போல் மனவெளியில் காட்சி. எரிப்பதற்கு வேறு எதுவும் இல்லாத போது தானே தன்னை எரித்துக்கொண்டு மடியும் சுபாவம் நெருப்பினுடையது.

அணைகின்ற சுடர் – அவிகின்ற நெருப்பு– என்ற நினைப்பு அச்சானியமாகவும், பயமாகவும் இருக்கிறது. அப்படி எண்ணத் தொடங்கும் போதே நெஞ்சை ஏதோ இறுக்கிப் பிழிவது போலிருக்கிறது. இழப்பதை விட இழக்கப் போகிறோம் என்ற நினைப்பு மிகவும் பயங்கரமானது. கொடூரமானது. விட்டுவிட்டுக் கொலை செய்யக் கூடியது. அடைவனவும், இழப்பனவும் சேர்ந்ததுதான் வாழ்க்கையோ என்று கூடத் தோன்றுகிறது. அடைந்ததை எல்லாம் ஒவ்வொன்றாக நினைத்தால் இழக்கப் போகிறோம் என்ற நினைப்பே அச்சுறுத்துவதாக இருந்தது. அவனுடைய கண்களில் மெல்ல மெல்ல நீர் மல்கியது. இப்படி வேளைகளில் அழுவது கூட ஒரு சுகமான ஆறுதலாக – பாரத்தைக் குறைப்பதாக இருக்கிறது. ஒருவேளை அழுகையில் துக்கம் கரைகிறதோ என்னவோ?

நடுநாயகமாக மாட வீதியிலிருந்த அந்தத் தனியார் நர்ஸிங் ஹோமில் ஒவ்வொரு அதிகாலையிலும் எல்லாச் சொகுசு அறைகளிலும் ஏ. ஸி.யை நிறுத்திவிட்டு ஜன்னல் கதவுகளைத் திறந்து வைத்து வெளிக்காற்றைத் தாராளமாக அனுமதித்துச் சுத்தம் செய்த பின் மீண்டும் அரை மணி நேரத்துக்குப் பின் ஜன்னல்களையும் கதவுகளையும் மூடி ஏ. ஸி.யைப் போடுவது வழக்கம்.

அன்றும் அப்போது ஜன்னல்கள் திறந்திருந்தன. ஜன்னலுக்கு வெளியே அறைகளைத் துடைத்துச் சுத்தம் செய்யும் வேலைக்காரி வேறு யாரிடமோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

''இன்னிக்கித் தேரோட்டம். தேர் கிளம்பியாச்சு. வெய்யிலைப் பார்க்காமே வடம் பிடிச்சாங்கன்னாப் பொழுது சாயறதுக்குள்ளாறத் தேர் நிலைக்கு வந்துடும்.''

மிகவும் மங்கலான நினைவுகளோடு கண்களை மூடியபடி படுக்கையில் படுத்திருந்த அவனுடைய செவிகளில் யாரோ கிணற்றுக்குள்ளிருந்து பேசுவது போல இச்சொற்கள் ஒலித்தன.

நோய்ப் படுக்கையில் படுத்திருந்த அவனது மனம் பின்னோக்கிச் சென்றது. நினைவுகள் வந்த வழியே திரும்பி நடந்தன. அவனுக்குள்ளேயும் ஒரு தேரோட்டம் மெல்ல ஆரம்பமாகியிருந்தது.

★ ★ ★

பச்சை வெல்வெட் துணியைத் தாறுமாறாய் உதறி அவற்றினிடையே ஒரு முத்துமாலையைக் கிடத்தினாற்போல் உயரமும் செறிவுமாய்க் கிடந்த மலைத்தொடர்களுக்கு நடுவே பள்ளத்தாக்கு ஒன்றில் அமைந்திருந்தது அந்த ஊர். யாரோ கவியுள்ளம் படைத்தவன் அந்த ஊருக்குப் பெயர் சூட்டியிருக்க வேண்டும். 'எழிலிருப்பு' என்ற பெயர் தேய்ந்து தேய்ந்து கிழடு தட்டி எள்ளிருப்பு என்றும் எலியிருப்பு என்றும் நாளடைவில் விதம்விதமான பாட பேதங்களைப் பெற்றிருந்தது. ஊரைப் பற்றிய பழம் பாடல்களிலும் கோவில் மதில் கல்வெட்டுக்களிலும் ஜமீன் அரண்மனை ரெக்கார்டுகள் – சாசனங்களிலும் தெளிவாக எழிலிருப்பு என்றுதான் இருக்கிறது. புகழ்மிக்க பாரம்பரியத்தைச் சேர்ந்த அந்த ஊர் இசை வேளாளர்கள் அது எழிருப்பு (எழிசை) அல்லது யாழிருப்பு என்



றெல்லாம் தான் அழைக்கப்பட வேண்டுமென்றார்கள். சங்கீதம், கவிதை, நிருத்தியம் என்று கலைத்துறைகளில் புகழ்மிக்க பலர் அந்த ஊரில் தோன்றியிருந்தார்கள். அந்த ஊரில் தோன்றிய பலர் கவிதை எழுதியது ஒருபுறம் இருக்க அந்த ஊரே எழுதப்படாததோர் சுயம்புவான கவிதையாக இருந்தது. இயற்கை விட்டுவிட்டுப் புன்முறுவல் பூப்பது போல் மலைகளில் ஆங்காங்கே வெளேரென்று அருவிகள் சிரித்தன. காற்றில் சந்தனமும் முல்லையும் மணந்தன. வெப்பம் உறைக்காத இதமான மென்குளிர் ஆண்டு முழுவதுமே நிலவியது. அசுத்தமும், தூசியும் சந்தடியும் என்னவென்றறியாத அந்தப் பள்ளத்தாக்கு நகரம், மிகப் பெரிய கோவிலும் கோபுரமும் அதை ஒட்டினாற்போல் படிகமாய்த்தெளிந்த நீர்ப்பரப்பு அகன்ற தாமரைக் குளமும் தேரடியுமாகப் பரம்பரையான தமிழ்நாட்டுச் சிற்றூரின் சாமுத்திரிகா லட்சணங்களை எல்லாம் முதற் பார்வையிலேயே பெற்றிருந்தது. தேரடிக்கு அருகே கோவில் நந்தவனத்துக்கு அப்பால் பெரிய தென்னந்தோப்பின் நடுவே மதிற்சுவருக்குள்ளாக ஜமீன் அரண்மனைகள் இருந்தன.

மதிற்சுவருக்கு வெளியே இருந்த நகரப் பகுதிக்கு வெளிப்பட்டணம் என்றும் உள்ளே இருக்க நகரப் பகுதிக்கு — அதாவது அரண்மனை — அதன் அங்கமானவர்கள் வாழ்ந்த பகுதிகளுக்கு உள்பட்டணம் என்றும் பெயர்கள் ஏற்பட்டு நிலைத்திருந்தன. வெளிப்பட்டணத்து வீதிகள் தெருக்கள் எல்லாம் கோவிலுக்கு இப்பால் அளவாகவும் அழகாகவும் கட்டமைப்போடும் தொடங்கின. தெரு வீடுகள் கோணல் மாணலின்றி நூல் பிடித்த மாதிரி இருந்தன. உள்பட்டணத்தையும், வெளிப்பட்டணத்தையும் கோவிலும் தேரடியும் குளமும் நடுவே இருந்து தனித்தனியே பிரித்தன. தேரடியில் இரண்டு பிரும்மாண்டமான கருங்கல்பாறைகளுக்கு நடுவில் இயற்கைக் குகை போல் அமைந்திருக்க ஒரு பிளவில் பாறையோடு பாறையாகச் செதுக்கப்பட்டிருந்த அநுமார் நகரின் காவற் கடவுளாகவும் சக்திவாய்ந்த வரப்பிரசாதியாகவும் புகழ் பெற்றிருந்தார். அந்தக் குகையில் கோயில் தோன்றியகாலத்திலிருந்து அணையாமல் எரியும் வெண்கல அகண்ட விளக்கு ஒன்று இருந்தது. புயலானாலும் மழையானாலும் வெள்ளமானாலும் இந்த அகண்ட விளக்கு மட்டும் அணைந்ததேயில்லை என்று ஊரில் பெருமையோடும் கர்வத்தோடும் கூறிக்கொள்வார்கள். கதவும் பூட்டும் இல்லாத இந்த மாபெரும் பாறை அநுமார்தான் ஜமீனை ஆளும் வம்சாவளியினரான உடையார்களின் குல தெய்வம்.


அங்கே ஒவ்வொரு ஜமீன்தாருக்கும் முறைப்படி மணந்த பட்டத்து ராணியின் வாரிசுகளைத் தவிர மற்ற வகையில் தொடர்பு கொண்டிருந்த பெண்கள் மூலம் பிறந்த வாரிசுகள் வேறு ஏற்பட்டு ஜமீன் சொத்தைக் கணிசமாகக் கரைத்தார்கள். அசல் பட்டத்து ராணியின் பிள்ளைகள் அடியாட்களின் பலத்தோடும் அதிகார மமதையோடும், மற்ற வகையில் தங்களோடு போட்டிக்கு வந்து சொத்தைக் கரைப்பவர்களை உள் பட்டணத்திலிருந்து துரத்தும் நிகழ்ச்சி ஒவ்வொரு ஜமீன்தாரின் மரணத்துக்குப் பின்பும் சகஜமாக நடக்கும். சொத்துரிமைச் சண்டையில் அசல் வாரிசுகளல்லாதவர்கள் குரூரமாக வெளியேற்றப் படுவார்கள். சமஸ்தானத்துக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் ஏற்பட்டிருந்த ஓர் ஒப்பந்தப்படி பிரிட்டிஷ் போலீஸ் உள்பட்டணத்திற்குள் அழைக்கப்பட்டால் ஒழியத் தானாக நுழையவே முடியாது.


எழிலிருப்பு ராஜா ஏதோ ஒரு வகையில் சம்பந்தம் வைத்துக் கொண்டிருந்த பெண்களின் வாரிசுகளாகத் தோன்றிய ஆண்களும், பெண்களும், உரிமை எதுவும் கொண்டாடாமல் அடிமைகள் போல் உள்

பேங்க் கொள்ளையை மையமாக வைத்து ஒரு ஹாலிவுட் தயாரிப்பாளர் படம் எடுத்தார். இத்தாலியில் அந்தப் படத்தை வெளியிட்டபோது இத்தாலிய விளம்பர ஏஜெண்ட் புது விதமாய் அதற்கு விளம்பரம் செய்தார். ஆகாய விமானத்திலிருந்து ரோம் நாட்டிலிருக்கும் நகரங்களில் அமெரிக்க ஒரு டாலர் நோட்டுக்களை ஆயிரக் கணக்கில் வாரி இறைத்தார். பறந்து வந்த அமெரிக்க டாலர் நோட்டுக்களை எடுக்க இத்தாலியர்கள் விழுந்தடித்துக் கொண்டு ஓடினார்கள். கூர்ந்து கவனித்த போதுதான் தெரிந்தது அது அசல் டாலர் நோட்டல்ல என்று. நோட்டுக்களின் ஒரு பக்கத்தில் வாஷிங்டனின் உருவத்துக்குப் பதிலாக பட கதாநாயகனின் உருவமும், அடுத்த பக்கத்தில் அந்தப் படத்தைப்பற்றிய விளம்பரமும் இருந்தன!

இந்த 'டாலர்' நோட்டுக்களை அசல் என்று எண்ணி ஏமாந்து பெற்றுக் கொண்ட வியாபாரிகள் ஏராளம்! ஏமாற்ற நினைத்த அநேகர் கைது செய்யப்பட்டார்கள். இப்படிப் பட்ட கதைகளுக்கு காது, மூக்கு வைத்து இத்தாலியப் பத்திரிகைகள் நிறைய மசாலா செய்திகளை வெளியிட்டன. வெளிவந்த கதைகள் படத்துக்கு மேலும் விளம்பரம் தேடித் தந்தன!

—ஆர். ராமதுரை.





சின்னஞ்சிறு காயத்தில்கூட அழுக்குப் புகுந்துவிடும்
இதனால் காயம் பெரிதாகும், கஷ்டம் உருவாகும்.

உடனடியாக பாண்ட்-எய்ட் உபயோகியுங்கள்



உலகில் உள்ள தாய்மார்கள் நம்புவது பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள்—அது, காயங்களில் அழுக்குப் புகாமலும், தொற்றிலிருந்தும் காயங்களைப் பாதுகாக்கிறது.

ஆகவேதான் பாண்ட்-எய்ட் முழுப் பாதுகாப்பானதாகும். பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்கில் உள்ள நிரூபணமான ஆண்டிசெப்டிக், காயத்தை ஆற்றுவதற்கு உதவுகிறது. அதிலுள்ள நுண்துளைகள் காயங்களை விரைந்தாற்றிட உதவுகின்றன. ஒட்டிக்கொள்ளாத வசதிமிக்க ஒப்பற்ற அடுக்கு.

காயங்களின் வெவ்வேறு வடிவம் மற்றும் அளவுகளுக்கு ஏற்ப வருகின்றன பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள். பெரிய புண்கள், சிறிய வெட்டுக் காயங்கள், கட்டுப்போட முடியாத இடங்கள், கொப்புளம் மற்றும் சிராய்ப்புகளுக்கு எப்போதும் உங்கள் கைவசமிருக்கட்டும் பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள்.

கைவசம் வைத்திருங்கள் பாண்ட்-எய்ட்
ஏனென்றால், காயங்கள் எங்கும் என்னேரமும் ஏற்படலாம்.

OBM/2514/TM

Johnson & Johnson

பட்டணத்தில் காலந்தள்ளலாம். உரிமை கொண்டாடினுலோ, அசல் வாரிசுகளுக்குச் சரிசமமாக நடக்க முயன்ருலோ உடனே ஆபத்து வரும். நிம்மதியாக வாழ முடியாது.

திருமலைராஜனும் அப்படி ராஜசம்பந்தத்தில் பிறந்தவன்தான். ஆனல் அவன் தன்னைப் பெற்ற தாயின் முகத்தைக் கூடப் பார்த்ததில்லை. அவன் கண்களைத் திறக்கு முன்னே அவள் கண்களை மூடியிருந்தாள். தந்தை யாரென்று வளர்ந்து பெரியவனுகி நினைவு தெரிந்தபின் அவனுக்குச் சொன்னர்கள். ஆனல் அவனுடைய தந்தையை அவன் அருகில் நெருங்கிப் பாசத்தோடு அப்பா என்று அழைக்க முடியாது. விலகி நின்று மற்ற அரண்மனை ஊழியர்களையும், விசுவாசிகளையும் போல் பயபக்தியோடு தான் ஸ்ரீராஜசேகர ரகுநாயக உடையாரை அவன் காண முடியும். ஆனல் அவனுக்குப் பின் பட்டத்து ராணியிடம் அவருக்குப் பிறந்த சின்னக் கிருஷ்ண ராஜ உடையார் என்னும் சின்னக் கிருஷ்ணன் அவருடைய மடியிலேயே ஏறி விளையாட முடியும். அந்த இளமையில் திருமலைராஜன் அதைப் பார்த்துப் பொருமைப்பட்டான். சின்ன வயதிலேயே எது இருந்ததோ இல்லையோ, அவனுக்கு ரோஷமும் சுயமரியாதையும் அளவுக்கதிகமாக இருந்தன. அதனுல் அடிக்கடி குட்டுப்பட நேர்ந்தது. குட்டுப் பட்டுக் குட்டுப்பட்டே வளர்ந்தான் அவன்.

அவனுடைய பதினேழாவது வயதில் காதில் கடுக்கன் அணிந்த உள்பட்டணத்து திண்ணைப் பள்ளிக்கூட வாத்தியாரிடம் அவன் சுதேசிப் படிப்புப் படித்த அதேசமயத்தில் சின்னக் கிருஷ்ணன் சகல ராஜமரியாதைகளுடனும் மதுரையில் ஆங்கிலக் கல்வி கற்ருன்.

அந்த ஏப்ரலில் ஸ்ரீ ராஜ சேகர ரகுநாயக உடையார் காலமான போது சின்னக் கிருஷ்ணனைப் போலவே திருமலைராஜனும் இரகசியமாகத் தன் தந்தையை இழந்தான்.

அதன் பிறகுதான் அநாதையான திருமலைராஜனின் சோதனைகள் ஆரம்பமாயின. திருமலைராஜனைப் போலவே இருந்த வேறு சிலர் பயந்து வெளியேறி விட்டனர். உள் பட்டணத்தில் இமேரென்று சின்னக் கிருஷ்ணனின் அந்தஸ்து உயர்ந்துவிட்டது.

அவன் திருமலைராஜன் போன்றவர்களிடம் பேசுவதே கேவலம் என்று நினைத்து நடந்து கொள்ள ஆரம்பித்தான். ரோஷமுள்ள திருமலைராஜன் சின்னக்கிருஷ்ணனைச் சந்தித்து ஏதோ பேச அவன்கோபத்தில் இவனை 'பாஸ்டார்ட்' என்று திட்டினுன். அதற்கு என்ன அர்த்தம் என்று திருமலைராஜனுக்கு முதலில் புரியவில்லை. மறுநாள் முழுவதும் ஏதோ ஒரு சந்தேகத்தால் உந்தப்பட்டு வெளிப்பட்டணத்தின் பதினெட்டு வீதிகளிலும் சுற்றி இறுதியாக ஓர் ஆங்கிலப் பள்ளிக்கூட வாத்தியாரிடம் கேட்டு அவர் அகராதியைப் புரட்டிப் பார்த்துவிட்டுத் தயங்கித் தயங்கி ''தகப்பனில்லாத அல்லது தகப்பன் பெயர் தெரியாத பிள்ளை''— என்று சொன்னவுடன் ஒரு தீவிர வெறியோடு புயல் வேகத்தில் உள்பட்டணத்தில்



''இந்தப் பத்திரிகையில் ஏதாவது பிழைகள் இருந்தால் அவை யாவும் வேண்டுமென்றே செய்யப்பட்டவை என்பதை எல்லோரும் உணர வேண்டும். தப்பு கண்டு பிடிப்பதையே எத்தனையோ பேர் வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டிருக்கின்றனர். அத்தகைய மனப்பான்மை கொண்ட வாசகர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யவே சில பிழைகளை அனுமதிக்கிறேம்.

''இசபெல்லா தௌண்ட்டி ரிபப்ளிகன்'' என்ற பத்திரிகையில் இந்த மாதிரி ஒரு அறிவிப்பு வெளியாகியிருந்தது.

திருச்செங்கோடு ப. கந்தசாமி.

நுழைந்தான். அந்த வார்த்தையை நினைக்க நினைக்க அவன் உள்ளம் கொதித்தது. முதலில் தான் விசாரித்த பலர், ''அந்த வார்த்தைக்கு அர்த்தம் தெரிஞ்சு என்ன ஆகப் போகுது? விடு... வேற ஏதாவது பேசு''—என்று ஏன் ஒதுங்கினர்கள், தட்டிக் கழித்தார்கள் என்று இப்போது தான் திருமலைராஜனுக்குப் புரிந்தது.

நேரே அரண்மனைக்குப் போய்த் தன் போன்றவர்கள் நுழையக் கூடாதென்று தடுக்கப்பட்டிருந்த ராணியின் அந்தப்புரப் பகுதிக்குள்ளும் நுழைந்து அங்கே தன் தாயுடன் பேசிக் கொண்டிருந்த சின்னக் கிருஷ்ணனை நோக்கி வெடித்துச் சீறினன் திருமலைராஜன்:

''டேய்! சின்னக் கிருஷ்ணு! என்னையாடா பாஸ்டார்டுன்னே? உன்னைப் பெத்த அதே அப்பன்தாண்டா என்னையும் பெத்தான். இன்னிக்கில்லாட்டியும் என்னிக்காவது ஒரு நாள் உன் வாயாலேயே என்னை 'அண்ணே'ன்னு கூப்பிட வைக்கல்லேன்னு நான் ஆம்பிளை இல்லேடா''—என்று அரும்பு மீசையை நீவி விட்ட திருமலைராஜனைக் காவல்காரர்களை ஏவி அங்கிருந்து அப்புறப் படுத்தினர்கள் ராணியும் மகனும்.

அன்ருே அந்தச் சம்பவத்தோடு திருமலைராஜனின் உள்பட்டண வாசம் முடிந்தது. மறுநாள் விடிந்தால் வைகுண்ட ஏகாதசி. நள்ளிரவில் நடுக்கும் குளிரில் அடியாட்கள் மூலம் திருமலைராஜன் உள்பட்டணத்தில் இருந்து கடத்தப்பட்டான். மூர்ச்சையாகிற

வரைக்கும் மூக்கு முகம் தெரியாமல் உதைத்து அவனை வெளியே கொண்டு போய் எறிந்தார்கள் அரண்மனை அடியாட்கள். திருமலை ராஜனுக்குத் தன் நினைவே இல்லை.

சில்லென்று உடம்பில் குளிரும் பனியும் உறைத்து அவன் கண் விழித்துச் சுற்றும் முற்றும் பார்க்க முயன்ற போது உடம்பை அசைக்கவே முடியவில்லை. பூட்டுக்குப் பூட்டு வலித்தது. விழுந்து கிடந்த இடத்திலிருந்தே கண்களைத் திறந்து அந்த மங்கிய இருளில் பார்த்தபோது ருகையில் அநுமார் கோவில் அணையாவிளக்கு எரிவது தெரிந்தது. தேரடிக்கும் அநுமார் பாறைக்கும் நடுவே தான் விழுந்து கிடப்பது தெரிந்தது. தன் பெயரோடு எதிரே கோவில் கொண்டிருக்கும் திருமலை ராஜப்பெருமாள் சந்நிதியின் கோபுர விளக்கு உயரத்தில் தெரிந்தது. கோபுர வாசல் முகப்பில் வைகுந்த ஏகாதசிக் கூட்டத்தின் குரல்களும் சந்தடியும் மெல்ல ஒலிப்பதை அவன் விழுந்து கிடந்த தொலைவிலிருந்தே கேட்க முடிந்தது. அவர்கள் அடித்திருந்த இராட்சத அடிகளில் இறந்து போயிருந்தால் கூட வைகுண்ட ஏகாதசியன்று இறந்த புண்ணியம் தனக்குக்கிடைத்திருக்கும் என்று அவனுக்குத் தோன்றியது. ஒரு கணம் தான் அந்த நினைப்பு நீடித்தது. ஏதோ ஒன்று சாதித்து முடிக்கப்படுகிறவரை தான் இறக்கக்கூடாது என்ற பிடிவாதமும் வாழ வேண்டும் — வாழ்ந்தே ஆகவேண்டும் என்ற வைராக்கியமும் உடனே அடுத்த கணமே தோன்றின. உடம்பிலும், மனத்திலும் ஏதோ ஒன்று திகுதிகுவென்று வேகமாகப் பற்றி எரிவது போல் அவன் உணர்ந்தான். அந்த எரிச்சல், அந்த தவிப்பு அவ்வளவு விரைவில் அடங்கி விட முடியாதென்று அவனது உள்ளுணர்வே அவனுக்குச் சொல்லியது.

எந்தத் தேரடி மண்ணில் தான் வீழ்த்தப் பட்டோமோ அந்த இடத்திலிருந்தே எழுந்து நின்று வாழ்ந்து காட்ட வேண்டும் போல் தவிப்பாயிருந்தது. வீழ்த்தப்பட்ட தன் காரணமாகவே எழுந்திருக்கவேண்டுமென்றும் ஒடுக்கப்பட்ட தன் காரணமாகவே உயர வேண்டுமென்றும் துடிப்பாயிருந்தது. கண்கள் சோர்ந்து போய் மூடின. குளிர்ச்சி உடம்பை அசைக்க முடியாமல் கட்டிப் போட்டிருந்தது. விண்விண்ணென்று இசி வெடுத்து வலித்தது.

அப்போது தாமரைக் குளத்தின் பக்கமிருந்து ஜலதரங்கம் வாசிப்பது போல் ஓர் வளையொலி அவன் பக்கமாக நெருங்கி வருவது கேட்டது. சில விநாடிகளில் அந்த வளையொலியுடன் பூக்களின் கதம்பமான நறுமணத்தையும் அவன் நாசி உணர்ந்தது. மெல்லக் கண் விழித்தால், அந்த நேரத்தின் தேவதையாகிய உஷையே நீராடி விட்டுப் பூக்குடலையோடு அருகே வந்து நிற்பது போல் ஓர் இளம் பெண் நின்றாள். அவளருகே கோவில்களில் எல்லா விளக்குகளையும் இரியிட்டு ஏற்றுவதற்காக எண்ணெய்த் திரியுடன் எடுத்துப் போகும் கைவிளக்கோடு ஒரு முதியவரும் நின்றார். உற்றுப்பார்த்ததில் நந்தவனத்துப் பண்டாரமும் அவர் மகளும் என்று மெல்ல மெல்லப் புரிந்தது. அவர்கள் பதறினார்கள். தனக்கு யாரால், என்ன நேர்ந்ததென்று கோவையாக அவர்களிடம் எடுத்துச் சொல்லக் கூட வரவில்லை அவனுக்கு.

(தொடரும்)

அருள்வாக்கு

கறுப்பு — சிவப்பு அல்லது கதர் போட்டுக் கொண்டு கொடியையும் ஸ்லோகன் அட்டையையும் தூக்கிக் கொண்டு பாதயாத்திரை, சைக்கிள் ஊர்வலம், மாட்டு வண்டி ஊர்வலம் என்று நடக்கும் போது இதில் பகுத்தறிவுக்குச்சேராத எத்தனை விஷயம் இருக்கிறது என்று பார்ப்பதில்லை. அதுவே பஞ்சகச்சம், பரிவட்டம், ஜாலரா, நாமகீர்த்தனம் என்று பஜனை கோஷ்டி போனால் பரிகாசமாகிறது. பொலிடிகல் இன்டிரஸ்ட் (அரசியல் ஈடுபாடு) லேபர் இன்டிரஸ்ட் என்பது போல இந்த லோகத்தை மட்டுமே சேர்ந்த விஷயங்களுக்காக இப்படி ரீஸனை விட்டு விட்டு, மண்ணெண்ணெயைக் கொட்டிக் கொளுத்திக் கொண்டு உயிரை விடுகிற அளவுக்குப் போனால் Martyr (தியாகி) பட்டம் கொடுக்கிறார்கள். அதுவே சாச்வதமான தர்மத்துக்காக மதத்துக்காக விட்டால், ''ஸுபர்ஸ்டிஷியஸ் அசடு'' என்று மட்டம் தட்டுகிறார்கள்.

''நாமே பெரியவர்கள்; நமக்கு Status வேண்டும். நாம் எதற்கும் கட்டுப்படக் கூடாது. இஷ்டப்படி பண்ண வேண்டும். நம் புத்திக்குப் புரிவதற்கு மேலே எதுவும் கிடையாது; எதையும் ஒப்புக் கொள்ள முடியாது; புத்திக்குப் பொருந்தாமலே நாமேகூட அநேகம் பண்ணினாலும் பண்ணுவோம் — ஆனாலும் சாஸ்திரக்காரர்கள் சொல்கிறார்களென்றால் அப்போதுமாட்டோம்'' என்று இந்த ரீதியில் பல பேரையும் நினைக்கும்படியாக்கி இந்த லோகத்தில் நடைமுறை வாழ்க்கையிலும் ஒழுங்கு இல்லாமல், பரலோகத்துக்கும் வழியில்லாமல் ஒரேயடியாகக் குழப்பி வைத்திருப்பதுதான் ஆசாரங்களைக் கைவிட்டிருப்பதன் பலன்.

-ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராசார்ய ஸ்வாமிகள்



உங்களுக்குத் தேவை இவைதான்:
சாந்தமுள்ள மனநிம்மதி
சக்தியுள்ள உணவுகள்.



ஆம். குழந்தைக்கு பாலூட்டத் தயாராகும் நீங்கள் கவனத்தில்கொள்ள வேண்டியது மிக எளிய விஷயம்; மன நிம்மதியோடு பாலூட்டுங்கள். அதிகமாக பால் சுரப்பதற்கு உதவிடும் உணவுகள் அனைத்தையும் உண்ணுங்கள்.

கவலைப்படுவதை நிறுத்துங்கள்

கவலைப்படுவது உங்களுக்குத் தீங்கு விளைவிக்கும்—என்றால், உங்கள் குழந்தைக்கும்தான். கவலைப்படுவதால் உங்களுக்கு நோய் ஏற்பட்டு பால் வற்றிவிடும்.

நோய்ப் பிரச்சனைகள் எதுவும் உங்களுக்கு இருந்தால், அலட்சியமாய் இருந்து விடாதீர்கள்; டாக்டரிடம் செல்லுங்கள் அவரை உங்கள் மூத்த நண்பராய்க் கருதுங்கள்.

ஆரோக்கியமான உணவைத் துவக்குங்கள்:

உடலுக்கு உகந்த ஆரோக்கிய உணவு எது என்பதை அறிந்திட பிரமாதமாக நூல் நிலையத்திற்குச் சென்று புத்தகங்களைப் புரட்டுவதோ, கலோரிப் பட்டியலைப் பார்ப்பதோ அவசியமில்லை. உங்களுக்குத் தேவை பொது அறிவுதான். உதாரணமாக, குழந்தையின் வளர்ச்சிக்கு புரதம் அதிக அளவில் தேவைப்பட்டால் அதை வழங்கக்கூடியவை, உடல் வளர்ச்சியை உருவாக்கும் பால், முட்டை, மாமிசம் ஆகும். அவற்றை நீங்கள் உண்ண வேண்டும்; புரதம் செறிந்த உணவுப் பானங்களை அருந்த வேண்டும். புரதச்சத்தை அதிக அளவில் நீங்கள் பெறுவது, உங்கள் குழந்தையும் பெறுவதாகும்—உங்களிடமிருந்து. மிகவும் முக்கியம் என்னவென்றால் கார்போஹைட்ரேட்டுகள் அதிகம் கூடாது. காரணம் அது பாலின் தரம் மற்றும் அளவைப் பாதிக்கும்.

இதுபோன்ற எளிய நடவடிக்கைகள்கூட, உங்கள் குழந்தை முறையாக முலைப்பால் குடித்திட உதவும். உடல் நிலை மோசமாக பாதிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் உங்கள் குழந்தைக்கு நீங்கள் மாற்றுப்பால் தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஸ்ப்ரே ட்ரை செய்யப்பட்ட அமுல்ஸ்ப்ரே

அமுல்ஸ்ப்ரே–நன்கு சமச்சீராக கலக்கப்பட்ட சத்துக்களுடன் கூடியது—பிரதம தரமுள்ள புரதம், ஜீரணிக்க எளிதான கொழுப்பு மற்றும் கார்போ ஹைட்ரேட்டுகள், சரியாகக் கலந்துள்ள வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள்.

ஏற்கனவே கொதிக்க வைத்த வெதுவெதுப்பான நீரில் அதைக் கலப்பது எளிது. முன்னாலேயே அதை பசைபோல் தயாரிக்கவேண்டிய அவசியம் இல்லை.

சிக்கனமானது

டின்னில் அடைக்கப்பட்டுள்ள குழந்தை உணவுகளில் மிகவும் சிக்கனமானது, அமுல் ஸ்ப்ரே. காரணம், அது இந்தியாவின் 'வெண்மைப் புரட்சிக்கு' முன்னோடியான நவீன பால் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது.

ஆனால் கொதிக்க வைத்த நீர், சுகாதார முறையில் கிருமி நீக்கம் செய்யப்பட்ட பாத்திரங்கள் மற்றும் பால் புட்டிகள் உபயோகித்தலை உறுதி செய்து கொள்ளுங்கள். பால் கலக்கப்படும்போது அதிகம் நீராகி விடுவதை தவிர்ப்பதற்கும், போதுமான ஊட்டச் சத்துக்களை உறுதி செய்வதற்கும் டின்மீது குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை கவனமாக பின்பற்றுக.



அமுல்ஸ்ப்ரே

தாய்ப்பாலுக்கு அடுத்ததுதான்.

இலவசம்! அமுல் வளர்ப்பு வழி—

இதில் அடங்கியுள்ளவை: கருத்தரித்தல், பேறு காலத்திற்கு முன் கவனிப்பு, பிரசவம், தாய்ப்பால் ஊட்டுதல், வெளியில் கிடைக்கும் உணவு வகைகள், லேசான தானிய உணவு தருதல், குழந்தையின் அன்றாடக் கடன்கள், குழந்தையின் வளர்ச்சி, நோய்த் தடுப்பு, முதலுதவி, பொதுவான நோய்கள், நோயுற்ற குழந்தையைப் பாதுகாத்தல் தமிழ், இந்தி, மராத்தி, குஜராத்தி, ஆங்கிலம்; தெலுங்கு மற்றும் மலையாள மொழிகளில்.

உங்கள் பெயர் மற்றும் முகவரியுடன் ரூ. 1.25 தபால் தலை ஒட்டி எழுதுக இம் முகவரிக்கு: தபால் பெட்டி எண் 10124, பம்பாய் 400 001.

விற்பனைக்கு விடுப்போர்:
குஜராத் கோ-ஆப்பரேடிவ் மில்க் மார்க்கெட்டிங் ஃபெடரேஷன் லிமிடெட், தபால் பெட்டி எண் 10, ஆனந்த் 388 001, குஜராத் மாநிலம்.

ASP/AS-TAM7/83

..எங்கள்..

ஜி. நாராயணன்

அந்தப் பையனையே சற்று நேரம் பார்த்தபடி இருந்தார் சடகோபன்.

பையனுக்கு லட்சணம் போறுது...... பார்க்கிறவர்களுக்குப் பக்கத்தில் உட்கார்த்தி வைத்துக் கொஞ்சத் தோன்றுது.... உடல்அமைப்பு அப்படி.... கைகால்கள் குச்சியாக — உயரமாக இருக்தான்.... பெரியமண்டை..... நிறமும் மட்டு... ஆனால், உடம்பில் ஒரு பரபரப்பு...

'அது என்ன.... இது என்ன...?' என்று எல்லாவற்றையும் கேட்டு அறிந்து கொள்ளுகிற ஆர்வம்.....' பளபளவென்று கண்களில் அத்தனை அறிவும் தெரிந்தது...

'முதலில், பையன் கணக்கு நோட்டைச் சிவராமனிடம் எடுத்துப் போனான்........ ' அப்பா...இதைக் கொஞ்சம் பாரு...'' என்று காட்டினான்.

ஒரு சுவாரசியமும் இல்லாமல் சிவராமன் நோட்டை வாங்கினார்.... கண்ணாடியைத் தேடினார்.... எடுத்து மாட்டிக்கொண்டு பார்த்தார்.... ஒரு தரம்... இரண்டு தரம்... பிறகு, நோட்டை நிதானமாக மூடி ப்பையனிடம் திருப்பிக் கொடுத்தார்.... இயலாமை பேச்சில் தெரிந்தது....

''இதெல்லாம் டீச்சர் நடத்தலியா....?''

''...நடத்தினா... ஆனா... புரியல்லே...''

''....புரியல்லேன்னு ஒரு தடவைக்கு ரெண்டு தடவையா கேட்கிறது...''

பையன் பேசாமல் இருந்தான்.

''...பாக்கியெல்லாம் எப்படி வர்றது...? கவாஸ்கரோட டெஸ்ட் ஆவரேஜ் என்ன... அடுத்த வாரம் டி. வி.யிலே என்ன படம் போடப் போறான்... இதெல்லாம் யாராவது சொல்லிக் கொடுத்தா வரது...? கணக்குன்னு மட்டும் 'இதைக் கொஞ்சம் பாரு'ன்னு என்கிட்டே ஏன் வரணும்...?''

பையன் தயங்கினான்...

சடகோபன் உடலில் சூடு ஏறியது... எழுந்து போய் அந்த நோட்டை வாங்கிப் பார்க்க வேண்டும் போல் வந்தது...



எந்த இடம் புரியவில்லை?... இது என்ன மாதிரி கணக்கு...? அல்ஜீப்ராவா?... டைம் வொர்க்கா...? மனம் கடந்து அடித்துக் கொண்டது... இந்தத் தவிப்பெல்லாம் மனைவி முகத்தை ஒரு தடவை கவனித்ததும் சிறிது அடங்கியது... இருந்தும், பையனை அருகில் வரும்படி அழைத்தார்... நோட்டைக் கையில் வாங்கினார்... ஒருமுறை அட்டையை வாஞ்சையோடு தடவினார்... ரொம்பவும் பிரியமான ஒன்று நீண்ட இடைவெளிக்குப் பின் கையில் கிடைத்திருக்கிறது...

ஒவ்வொரு பக்கமாக நிதானமாகப் புரட்டியபடி வந்தார்.

''...அங்கிள்... இதுதான்...''

''...பென்சிலைக் கொடு...''

சடகோபன் கண் முன்னால் ஒரு வகுப்பறை தெரிந்தது... நிறையப் பையன்கள் தெரிந்தார்கள்... கரும்பலகை தெரிந்தது... அல்ஜீப்ராவை மேலேயிருந்து ஆரம்பித்து... 'எக்ஸ்'ம் 'ஒய்'யும் கொஞ்சம் கொஞ்சமாகக் கீழே இறங்கி... பலகை முடிவு வரை வந்து 'படக்' என்று சாக்பீஸ் ஒடிய....

''...கரெக்ட்... இப்படித்தான் டீச்சரும் சொல்லிக் கொடுத்தா...''

''....நானும் ஒரு டீச்சர்தான்...''

''....என்னது...!''

ஆச்சரியப்பட்டது சிவராமன்.

''நாலஞ்சு வருஷம் மாதஸ் டீச்சரா இருந்திருக்கேன்....'' என்றார் சடகோபன். பையனைப்பார்த்து...''சாயந்திரமாவீட்டுக்கு வாயேன்.... கிட்டத்தில்தானே இருக்கு... சொல்லித்தரேன்...'' வெட்கப்படாதே... ம்...'' என்றார். பையன் சந்தோஷமாகத் தலையை ஆட்டினான்.

வீட்டினுள் நுழைந்ததும், ரமா இவர் மீது பாய்ந்தாள்.

''....கணக்கு வாத்தியாரா இருந்தது ஒரு பெருமை... அதைப் போய்ச் சொல்லுவானேன்... அப்புறம், அந்தப் பையனை வீட்டுக்குக் 'கட்டாயம் வா'... சொல்லித் தரேன்'னு...''

''...என்ன தப்பு... ரமா?...''

''...தப்பா...? இப்ப நீங்க நிருக்காட்டுப் பள்ளி ஸ்கூல் வாத்தியார் இல்லே.... அது ஞாபகம் இருக்கா..? ஒரு கம்பெனியில் ஜூனியர் எக்ஸிக்யூட்டிவ். இருக்கிற இடம் டில்லி. அதை மனசில் வைச்சுக்கோங்கோ... போற இடத்தில், வர்ற இடத்தில், உங்க வாத்தியார் பெருமை வேண்டாம்...''

''....அந்தப் பையன் எதையும் சட்டுனு புரிஞ்சுக்கறான்... அந்த மாதிரி குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறதில்.....''

நிறுத்தி விட்டார்... ரமா, இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்தபடி இன்னும் அருகில் வந்தாள்.



''...உங்களுக்கு ஏன் இந்தக் கவலையெல்லாம்... இதை நாளைக்கே ஒரு பார்ட்டியில் சொல்லி மிஸஸ் சிவராமன் சிரிக்கப் போறா... அப்புறம் இந்த டில்லி முழுக்க.... ச்சு....''

சடகோபன் மௌனமாகி விட்டார்.

இந்த டார்ட்டி... டிரஸ்... பொஸிஷன்.. எல்லாம் நாலைந்து வருஷங்களாகத்தான்.... ரமாவைக் கல்யாணம் செய்து கொண்டதும் வந்து ஒட்டிக் கொண்டவை. அதற்கு முன்பு, வாழ்க்கையில் இவ்வளவு அனுபவித்தது இல்லை. பெரிதாக வீடு, வயல், வாய்க்கால்... காவேரி...' கடைக்குப் போனால் – குளிக்கப் போனால் 'சார், சார்' என்று கூடவே வருகிற பையன்கள்... எதிரே பார்க்க நேர்ந்தால் சட்டென்று வேட்டியை இறக்கி விடுகிற மரியாதை.... கல்யாணம் ஆன கையோடு டில்லி வந்தவர் இந்த வாழ்க்கையில் ஒரு கணம் சபலப்பட்டுப் போனார்... ''மாப்பிளே...! ஒன்னுமில்லாத பயலெல்லாம் உச்சாணிக்குப் போயிடறான்... இவ்வளவு படிப்பை வைச்சுண்டு... ம்... அம்மா–அப்பா–ளருன்னு இன்னும் எத்தனை நாள்....''

அவசரப்பட்டு விட்டதாக இப்பொழுது தோன்றுகிறது...

வாத்தியார் வேலையில் ஒரு திருப்தி இருந்தது... தனக்குத் தெரிந்ததை நாலு பேருக்குச் சொல்லிக் கொடுக்கிற திருப்தி....

சட்டென்று அந்தப் பையன் நினைவில் வந்தான்... இங்கே உட்கார்ந்த இடத்திலேயே செய்யலாம்... இந்தப் பையன் மூலமாக இன்னும் ஏழெட்டுப் பையன்களை வரவழைத்து ச் சொல்லிக் கொடுத்தால்....

ஏழெட்டுநாள் ஓடிவிட்டது...

தினம் வீட்டுக்குச் சீக்கிரமாகத் திரும்ப ஆரம்பித்தார் சடகோபன்... முதல் நாள் ரமாவிடம்', '...அந்தப் பையன் வந்தானா?' என்று உற்சாகமாகக் கேட்டார்... அவள் முகத்தைப்பார்த்ததும் உற்சாகத்தை விட்டு விட்டார்...

பொறுக்க முடியாமல் ஒருநாள் ஆபீஸில் சிவராமனிடம் விசாரித்தார்... அவன் கொஞ்ச நேரம் வரை இமைக்காமல் பார்த்தான். நெற்றியைச் சுளுக்கிக் கொண்டான்... ''...ம்... அவனா... வந்து... இப்ப உடம்பு சரியில்லே... சரியாகட்டும்.... அனுப்பறேன்...''

நிஜம் என்றே இவர் எடுத்துக் கொண்டார்.

இரண்டு நாள் கழித்து. சிவராமனைப் பார்க்கிற சாக்கில் அவன் வீட்டுக்குப் போனார்... காப்பி–டிபன் என்று வழக்கமான உபசாரம்...

''...பையன் இல்லியா... வந்தது வந்தோம்... ஏதாவது சந்தேகம் இருந்தால்.... சொல்லிக் கொடுக்கலாம்னு...''

சிவராமன் மனைவி முகத்தைப் பார்த்தார்... அவன் மனைவி இவரைப் பார்த்தாள். '...ஒரு பேச்சுக்குச் சொன்னால், இப்படியா ஒருத்தன் சாக்பீசும் கையுமாக வருவான்...?'

''...அவனோட டீச்சரேடியூஷன் சொல்லித் தரா...''

இவர் எழுந்தார்.. ஊசி குத்தினமாதிரி ஒரு வலியும சோர்வும் மனத்தை அழுத்தின.

வீட்டுக்கு வந்தார்.

அப்படியே சோபாவில் விழுந்தார்.

அந்தப் பையன் இன்னமும் மனத்தில் இருந்தான்... சூடிகை... எதையும் உடனே கிரகித்துக் கொள்ளும் பையன்... அல்ஜீப்ராவைச் சிரமம் இல்லாமல் இவனுக்குப் புரிய வைக்கலாம்.. இன்னும் எத்தனையோ பையன்களுக்கு உதவலாம்!

இங்கே பைல்களைக் கட்டிக் கொண்டு அழ வேண்டியிருக்கிறது ..

படித்த படிப்புக்கும் செய்கிற வேலைக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை... இந்தக் கூட்டல், கழித்தலையெல்லாம் ஒரு எட்டாங்கிளாஸ் பையன் செய்து விடுவான்...!

அத்தனை படிப்பும் – அறிவும் இப்பொழுது யாருக்கும் எந்தவித உபயோகமும் இல்லாமல் போய்விட்டது...புதையல் மாதிரி.... வீணாகி...

உடல் மரக்கிளையில் தொங்குகிற மாதிரி இருந்தது... ஞானத்தை வைத்துக்கொண்டு அலைகிற பிரும்மராட்சஸனாக மாறிய மாதிரி தோன்றியது. ''...நான்தான் சடகோபன்... ஏ ப்ளஸ் பீ இன்டு...ம்... சரியான ஆன்சர் சொல்லு... இல்லாவிட்டால் உன்னை அப்படியே அடித்துத் தின்று...''

பதில் சொல்லுபவன் வரும் வரை நான் இப்படியேதான் கிடக்கப் போகிறேன்.. பக்கத்துக் கிளையில் யார்...? கௌடபாதரா...? ஹா... ஹா...

''...எழுந்திருங்கோ... என்ன இது...? மிஸஸ் பஜாஜ் வீட்டில் பர்த்டே பார்ட்டி இருக்கு... 'கிடுகிடு'ன்னு குளிச்சுட்டுக்கிளம்புங்கோ...''

எதிரே ரமா தெரிந்தாள்.

பிரும்மராட்சஸன் இரும்பவும் சடகோபனாக மாறியது.

எழுந்தது...

ஸ்நானம் செய்யப் போயிற்று...

...அத்தனைக்கும் சேர்த்து..

எழுத்தாளர்: ''என்னோட ஜோக்கை யெல்லாம் படிச்சுப் பார்த்திங்களா எப்படியிருக்கு?''

ஆசிரியர்: ''ரொம்ப உருக்கமா யிருக்கு சார்.''

—கீழை. அ. கதிர்வேல்.





வாய் துர்நாற்றத்தை தடுத்திடுவீர்...
பற்சிதைவை எதிர்த்திடுவீர்

கோல்கேட்டின் நம்பகமான ஃபார்முலா, சிறப்புடன் செயல்பட்டு நீங்கள் பல்துலக்கும் ஒவ்வொரு முறையும் உங்களுக்கு புத்துணர்ச்சிதரும் தூய சுவாசம் அளிக்கின்றது. பற்களுக்கு ஆரோக்கியமும் உறுதியும் தருகிறது.


எப்படி என்றால்...



உணவுத் துணுக்குகள் பற்களுக்கிடையே சிக்கிக் கொள்வதால் துர்நாற்றத்தையும் பற்சிதைவையும் உண்டாக்கும் பாக்டீரியாக்கள் வளருகின்றன.



கோல்கேட்டின் ஒப்பற்ற செயல்புரியும் நுரை ஆழ ஊடுருவிச்சென்று உபாதை தரும் உணவுத் துணுக்குகளையும் பாக்டீரியாக்களையும் அகற்றி விடுகிறது.



பயன்: தன்னம்பிக்கை தரும் இனிய சுவாசம், பற்சிதைவுக்கு எதிராகப் பாதுகாப்பு, உறுதிமிக்க ஆரோக்கியமான பற்கள்.

ஆகவே, சாப்பிட்டு முடிந்தவுடனேயே மறக்காமல் கோல்கேட் டென்டல் க்ரீம் உபயோகித்து பிரஷ் செய்யுங்கள்.

கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும்
பெப்பர்மென்ட் சுவை உங்களுக்கு விருப்பமானது!

துரோகம்

அன்னம்

''நளினி என்பது யார்?'' என்று கேட்டாள் சாயா பூமாவை.

சாயா ரயில்வே ஜங்ஷனில் டிக்கெட் கொடுக்கும் குமாஸ்தாவாக வேலை பார்க்கிறாள். பூமாவின் கல்லூரித் தோழி.

''என்ன விஷயம்?'' என்று விசாரித்தாள் பூமா.

''இன்றைக்கு உன் வீட்டுக்காரர் வந்திருந்தார். 'என்ன வேணும்?' '' என்று கேட்டேன். ஒன்றும். சொல்லவில்லை. உன் ''டூட்டி'' முடிகிற வரை காத்திருந்து விட்டு, அப்புறமாக 'டிக்கெட்' 'ரிசர்வ்' செய்து விட்டுப் போனார்.''

''ஆமாம்... என்னிடம் கூடச் சொன்னார். ஆபீஸ் விஷயமாகத் தான் டில்லிவரையில் போகப் போவதாகச் சொன்னார்.''

''சரி... கூட அந்த நளினி யார்!'' என்று கேட்டாள் சாயா.

நளினி யார்...! பூமாவிற்குத் தெரியாது.. உதட்டைப் பிதுக்கினாள்.

''இப்படி வெகுளியாக இருக்கிறாயே!.. இரண்டு பேராகக் ''கூபே'' ரிசர்வ் செய்திருக்கிறார்கள்... ''கூபே'' என்றால் தெரியுமா?''

''தெரியும்... தனியாக இரண்டு பேருக்கு மட்டும்... நானும் அவரும் கல்யாணம் ஆனவுடன் பார்த்தது.... முதன் முதலாக...''— பூமா ரொம்பவும் வெட்கப்பட்டாள்.

''வெட்கப்பட்டது போதும்..... இப்போது என்ன செய்யப் போகிறாய்?''

''அவர் வெளியில் சுற்றுகிறவர்... நான் தனியாக வீட்டில் இருப்பவள்.... என்றால் அவர் பின்னால் போய்க் காவல் காக்க முடியுமா?''

''இப்படியே இருந்தால் ஒருநாளைக்கு உன் மேல் பெரிய கல்லாகத் தூக்கிப் போடப் போகிறார், பார்!''

''தலைவிதி அப்படியானால் என்ன செய்ய முடியும்?'' என நொந்து கொண்டாள் பூமா.

''நான் ஒரு வழி சொல்கிறேன், கேட்கிறாயா?''

''உம்!''

''நீயும் டில்லி வருவதாக அடம்பிடி...''

''அவர் வேண்டாம் என்றால்...''

''கட்டாயப் படுத்து...

''அப்புறம் உனக்கு ஒரு ஸீட் ரிசர்வ் செய்வார்...

புறப்படும்



போது ''கூபே''யில் நீ!... அந்த நளினி உன் வீட்டில் தனியாக... உன் பாடு கொண்டாட்டம்தான்!'' என்று கண்ணைச் சிமிட்டினாள் சாயா.

''சீ! போடி!'' என்று ரொம்பவும் வெட்கப்பட்டாள் பூமா.

சாரதி இதற்கு லேசில் ஒப்புக்கொள்ளவில்லை. 'அனாவசியச் செலவு' என்றான். 'ஆபீஸ் வேலையாகப் போகும் போது அவளை எங்கேயும் கூட்டிப் போக முடியாது' என்றான். பூமா எல்லாவற்றிற்கும் பதில் தயாராக வைத்திருந்தாள். தான் தன் மருமகன் குமார் வீட்டில் தங்குவதாகவும், அவன் தன்னைக் கூட்டிப் போவான் என்றும் அடம் பிடித்தாள்.

சாரதி கடைசியில் வழிக்கு வந்தான். அன்றே அவளுக்கு ஒரு டிக்கெட் ரிசர்வ் செய்து விட்டு வந்தான்.

பூமா மனதிற்குள் சிரித்துக் கொண்டாள். எப்படித் திட்டம் போட்டு அவனை ஏமாற்றி விட்டோம் என்று.

அன்று அவர்கள் டில்லிக்குப் புறப்பட வேண்டும். ரயில்வே ஸ்டேஷனுக்குக் கிளம்பும் சமயம். ஸாரதிக்கு ஃபோன் வந்தது. அவன் டில்லி டிரிப் ரத்தாகி விட்டது.

''டிக்கெட்டைக் கான்ஸல் செய்ய வேண்டும்!'' என்றான் சாரதி.

''நானும் போகவில்லை!'' என்றாள் பூமா.

''அதெல்லாம் இப்போது முடியாது.... நீ மட்டும் புறப்பட்டுப் போ!... நான் அடுத்த வாரம் வருகிறேன். இப்போது டிக்கெட்டைக் ''கான்ஸல்'' செய்தால் எக்கச்சக்கமாக நஷ்டம் ஆகும்!'' என்றான் அவன் கண்டிப்பாக.

ஸாரதி தன் டிக்கெட்டைக் ''கான்ஸல்'' செய்து விட்டுத் தன் இடத்தையே பூமாவிற்கு மாற்றி வந்தான்.


''யார் இந்த நளினி? வருவாளா, மாட்டாளா?'' என்று கேட்டாள் பூமா இடக்காக—ரிசர்வேஷன் பட்டியலைப் பார்த்தபடி.

''வருவாள்... கட்டாயம் வருவாள்...''

''உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டாள் பூமா, கோபமாக.

''நான்தானே ரிசர்வ் செய்தேன்... என் மானேஜரின் அத்தை... துணையாக இருக்கட்டும் என்று என் கூடத்தான் அனுப்பினார்... எனக்குப் பதிலாக இப்போது நீ துணை!''

நளினியே அப்போது அங்கு வந்து விட்டாள். நடக்க முடியாமல் ஒரு சக்கர நாற்காலியில் — அந்த ஐம்பது வயது முடிந்த பெண்மணியை — உட்கார வைத்துத் தள்ளிக் கொண்டு வந்தார்கள்!



பூமாவின் வீடு. சாரதியின் அரவணைப்பில் சாயா...

''இன்னும் பதினைந்து நாட்களுக்கு நாம் திருட்டுத்தனமாகச் சந்திக்க வேண்டாம்..'' என்றான் சாரதி.

''ஆமாம்... பூமா விடம் பொறுமையை இழந்தபோது நளினியின் வயது என்ன என்று கேட்டு விடுவாளோ என்று பயம்!'' என்றாள் சாயா.

''அதற்கெல்லாம் அவளுக்குச் சமர்த்துபோதாது!'' என்றான் சாரதி.

''சமர்த்து''போருத பூமா வீட்டிற்கு வெளியே காரிலிருந்து இறங்கிக் கொண்டிருப்பது அவர்களுக்குத் தெரியாது. வழியில் உடைப்பு ஏற்பட்டதால் டில்லி ரயில் ரத்து செய்யப்பட்டுப் பூமா திரும்பி வருவது பாவம் அந்தத் ''துரோகி''களுக்கு எப்படித் தெரியும்!

அடேடே அப்படியா!



"அடடே அப்படியா?" என்று நீங்கள் வியக்கும்படியான சம்பவம் என்ன நேர்ந்தது?" என்று வாசகர்களைக் கேட்டிருந்தோம்....

கே. ஆர். கோபாலசாமி வெண்ணம்பள்ளி

ஒருநாள் ஓட்டலில் டிபன் சாப்பிட்டுவிட்டு, சர்வரிடத்தில் பில் கேட்ட பொழுது, "பணம் கொடுத்தாய் விட்டது" என்று சர்வர் கூறினார். யார் கொடுத்தார்கள் என்று புரியாமல் வெளியே வந்த போது "நான்தான் கொடுத்தேன்" என்று என்னிடத்தில் படித்த பழைய மாணவர் ஒருவர் சொன்னார். அடேடே! அப்படியா? என்று வியந்து போனேன்.

வி. ஹரிஹரன், கோவை.

எங்கள் வீட்டிற்கு ஒரு நாள் இரவு திருடன் வந்தான். வீட்டில் உள்ள சாதம், சாம்பார், மற்றும் தயிர், ஊறுகாய் எல்லாவற்றையும் சாப்பிட்டுவிட்டு உண்ட வீட்டுக்கு இரண்டகம் பண்ணாமல் பாத்திரங்களை நன்றாகத் தேய்த்துக் கிணற்றடியில் கவிழ்த்து விட்டுப் போய் விட்டான்!

சித்ராமூர்த்தி, புதுதில்லி

சமீபத்தில் நாங்கள் கோவா சென்றிருந்தபோது மஞ்சள்வர்ணம் பூசப்பட்ட மோட்டார் சைக்கிள்களை நிறையப் பார்த்தோம். விசாரித்ததில், அவையனைத்தும், மோட்டார் சைக்கிள் டாக்ஸிகள் என்பது தெரிய வந்தது. 1 கிலோ மீட்டர் பயணம் செய்ய ஒரு ரூபாய்.





ஆர். கல்யாணி, கள்ளக்குறிச்சி

ஒருசமயம் வங்கியில் பணம் கட்ட நான் ஒருமணி நேரத்திற்கும் மேல் காத்திருக்க நேர்ந்தது. கவுண்டரில் இருந்தவரிடம் சண்டை போட்டு என் மனக்கசப்பைத் தெரிவித்துவிட்டு வந்தேன். சில நாட்களுக்குப் பிறகு அந்தக் கவுண்டர் ஆசாமி என் வீட்டுக்கு வந்தார், என்னைப் பெண்பார்க்கும் மாப்பிள்ளையாக! அடேடே என்று வியக்காமல் இருக்க முடியவில்லை.



டி. அகிலாம்பாள், பம்பாய்

எங்கள் பள்ளியின்மாணவர்களும், ஆசிரியர்களும் மேட்டூர் அணைக்குச்சுற்றுலா சென்ற போது மின்நிலையத்தில் ஒரு ராக்ஷச இயந்திரத்தைப் பார்த்தோம். உடன் வந்திருந்த இன்ஜினியர் ஒருவர் பள்ளத்தில் இருந்த அந்த இயந்திரத்தை எப்படி அங்கு ஸ்தாபித்தார்கள் என்று விளக்கினார். பள்ளத்தை ஐஸ் கட்டிகளால் நிரப்பித் தரைமட்டத்திற்கு உயர்த்தி விட்டு இயந்திரத்தை ஐஸின்மேல் வைத்தார்களாம். ஐஸ் உருக உருக இயந்திரம் மெல்லக் கீழே இறங்கியது. உருகிய தண்ணீரை உடனுக்குடன் பம்ப் செய்து அகற்றி விட்டனராம். இதைக் கேட்ட நாங்கள் 'அ டே டே அப்படியா?' என்று ஆச்சரியப்பட்டுப் போனோம்.



பி. சேதுராமன், நாக்பூர்.

நண்பனும், நானும் சினிமாபார்க்கச்சென்றோம். தியேட்டரில் தன் ஸ்கூட்டரை வைக்கும்பொழுது ஸ்டாண்டு பையனிடம் என் நண்பன் ரூ. 10-/ஐக் கொடுத்து "முன் சக்கரம்" என்று சொல்லி விட்டு வந்தான். எனக்கு ஒன்றும்புரியவில்லை. இடைவேளை சமயத்தில் நண்பனிடம் இதைப் பற்றி விசாரித்தேன். அவன் "ரூ. 10/- கொடுத்தால், தேய்ந்து போன முன் சக்கரத்தைக் கழற்றி விட்டு,

(தொடர்ச்சி 69ம் பக்கம்)

வாசகர் பங்கு

இல்லறம் என்றும் நல்லறம்



-இலவச இணைப்பு

சிறுசேமிப்பு:

	வட்டி விகிதம்
தபால் தந்தி நிறுவனம்	5½%
வங்கிகள்	5 %

மாதாந்திர வீட்டுச் செலவு போக மீறும் பணத்தை வங்கியில் அல்லது தபால் ஆஃபீசில் சேமிப்புக் கணக்கில் கட்டி வரலாம். பிரதிமாதமும் சிறுதொகைகளையே சேமித்து வரலாம். குறைந்த பட்சம் ஐந்து ரூபாயாவது வங்கிக் கணக்கில் இருக்க வேண்டும். வங்கியில் சேமித்தால் செக் வசதி உண்டு.

ஃபிக்ஸட் டெபாசிட்டுகள்:

வங்கிகள் – 2 வருடம் -6½%, 3–5 வருடம்-8%
5–க்கு மேல் - 11%.
தபால் தந்தி நிறுவனம் – 3–5 வருடம் 9%
5–க்குமேல் 15%.
தனியார் நிறுவனங்கள்-அதிகபட்சவட்டி-15%
மூன்றாண்டுகளுக்குக் குறைந்தால் வட்டி கம்மியாக இருக்கும்.

பெருந்தொகையான போனஸ் அல்லது பிறர் திருப்பித் தர வேண்டிய கடன் அலுவலகத்திலிருந்து ஓய்வு பெறுகையில்வழங்கப் படும் பி எஃப், கிராசுயிடி போன்றவற்றைத் தொடாமல் ஃபிக்ஸட் டெபாஸிட்டில் போட்டு விடுவது நல்லது. ஆடம்பரங்களுக்குச் செலவாகாமல் உண்மையிலேயே தேவையான சமயத்தில் கைகொடுக்கும்.

தனியார் நிறுவனங்களில் உங்கள்ஃபிக்ஸட் டெபாஸிட்டைப் புதுப்பிக்கப்பட்டால் ஒழிய மூன்று வருடங்களுக்கு மேல் வைத்துக் கொள்ளச் சட்டம் அனுமதிக்காது. நல்ல கம்பெனியாக இருந்தால் தைரியமாக டெபாஸிட் செய்யலாம். ஒருகால் நிறுவனத்துக்கு நஷ்டம் ஏற்பட்டால் உங்களைச் சேர வேண்டிய தொகை முழுதும் கிட்டாமல் போகலாம். வங்கிகளில் ஃபிக்ஸட் டெபாஸிட் செய்தால் அந்த டெபாஸிட்டின் பேரில் வங்கி கடன் வழங்கும்.

ரெக்கரிங் டெபாஸிட்:

மாதாமாதம் ஒரு தொகையைத் தவறாமல் வங்கியில் அல்லது போஸ்ட் ஆஃபீஸில் செலுத்த வேண்டும். ரூ. 5–ல் ஆரம்பித்து 10, 15, 20, 25 ·100 அல்லது 200 வரை கூடக் கட்டலாம். குறிப்பிட்ட கால அளவிற்கு இத்தொகையைக் கட்டி வந்தால் கூட்டு வட்டியும் முதலுமாய்த் திரும்பக் கிடைக்கும்.

ஷேர்:

தனியார் அல்லது அரசு நிறுவனம் பப்ளிக் லிமிடெட் கம்பெனி துவங்கும் போதும் பிரைவேட் லிமிடெட் கம்பெனியை பப்ளிக் லிமிடெட் ஆக மாற்றும் போதும் பொது மக்களிடம் ஷேர்களை (பங்குகளை) விற்பனைக்குக் கொண்டு வருவார்கள். சக்திக்கும், வசதிக்கும் ஏற்ப, இந்த ஷேர்களை 25 அல்லது 50 என்ற எண்ணிக்கையில் வாங்கி வைத்துக் கொண்டால் ஆண்டுதோறும் நிறுவனம் அடையும் லாபத்தில் பங்கு உண்டு. ஒரு ஷேரின் விலை ரூ. 5-முதல் ரூ. 25 வரை இருக்கும். நஷ்டத்தில் நேரடியான பங்கு கிடையாது. ஆனால் உங்கள் ஷேர் மார்க்கெட்டில் மதிப்பிழக்க வாய்ப்பு உண்டு. நல்ல விலை எப்போது கிடைக்கும் என்று பார்த்துக் கொண்டேயிருந்து ஷேர்களை 'சுபாவென்று' விற்றுவிட வேண்டும்.

டிபென்சர்கள்: இவையும் ஷேர்களைப்போல் மார்க்கெட்டில் விலைக்கு வருபவை. கன்வெர்டிபின் டிபென்சராக இருந்தால், அவற்றை 12 அல்லது 18 மாதங்களில் அந்தந்த நிறுவனங்களே ஷேர்களாக மாற்றித் தரும். டிபென்சர்களுக்கு நிலையான வட்டி விகிதம் உண்டு. அவற்றின் விலையும் அதிகம் நூறு ரூபாயில் ஆரம்பித்து 500 வரை கூட போகலாம். ஷேர்களைப் போலவே மார்க்கெட்டில் இவற்றின் விலை நிர்ணயமாகிறது. விற்கும்போது நஷ்டம் ஏற்பட வாய்ப்புண்டு.

ஷேர் அல்லது டிபென்சர் வாங்குவது கீழ் மத்தியதர வகுப்பினருக்கு உகந்தது அல்ல. விஷய ஞானம் உள்ளவர்கள் தான்

சிறு துளி பெரு வெள்ளம்



இதில் துணிந்து இறங்கலாம். ஷேர்களை விற்கும் கம்பெனிகளின் பொருளாதார நிலை மற்றும் அதிலுள்ள டைரக்டர்கள் போன்ற பல விஷயங்களை இவர்கள் அலசுவார்கள். ஷேர்களை வாங்கித் 'தர'வும் விற்றுத்'தர'வும் தரகர்கள் இருக்கிறார்கள்.

ஒரு குறிப்பிடத்தக்க நன்மை டிபென்சர் உரிமையாளர்களுக்கு உண்டு. ஒருகால், கம்பெனி திவால் ஆனால் தங்கள் பங்கைத் திரும்பிப் பெறும் முதல் உரிமை இவர்களுக்கு உண்டு. இவர்களை 'செக்யூர்ட் கிரெடிடர்ஸ்' என்பர். மேலும் சில கம்பெனிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை வாங்கப் பங்குதாரர்களுக்கு விசேஷத் தள்ளுபடி அளிக்கிறது.

யூனிட்ஸ்

இந்திய அரசின் யூனிட்ஸ் நிறுவனம் மத்தியதர குடும்பஸ்தர்களுக்கு உகந்த பல சேமிப்புத் திட்டங்களை வழங்குகிறது. ஒவ்வொரு வருடமும் ஜூலை மாதம் யூனிட்டுகள் குறைந்த விலைக்குக் கிடைக்கும். குறிப்பிட்ட காலத்தில் விலை குறையும், ஏறும். திடீர் உயர்வு, தாழ்வுகள் பொதுவாகக் கிடையாது. மேலும் யூனிட்ஸ் நிறுவனமே உங்கள் யூனிட்டுகளைத் திரும்ப வாங்கிக் கொள்ளும். சராசரி 12.5 சதவிதம் லாபத்தில் பங்கு உண்டு. இந்தப் பணத்துக்கு (ரு. 3500 வரை) வரி விலக்கும் உண்டு. இன்ஷூரன்ஸ் இணைந்த திட்டத்தையும் யூனிட்ஸ் வழங்குகிறது.

ஆயுள் இன்ஷூரன்ஸ்

இது ஒரு நல்ல சேமிப்புத் திட்டமாய் இருப்பதோடு ஒருவரின் எதிர்பாராத மரணத்தால் அவர் குடும்பத்துக்குப் பொருளாதார கஷ்டம் ஏற்படாமல் தவிர்க்கிறது. பிறந்த குழந்தை முதல் 60 வயது பூர்த்தியாகாதவர் வரை யார்வேண்டுமானாலும் இன்ஷூரன்ஸ் பாலிஸி எடுத்துக் கொள்ளலாம். இந்தப் பாலிஸி ஆயுள் முழுதுக்குமான பாலிஸியாக இருக்கலாம் அல்லது 15, 25 வருடங்கள் என்ற காலக் கட்டத்துக்கும் இருக்கலாம். எல். ஐ. ஸி. பாலிஸிகள் வருமான வரி, வெல்த் டாக்ஸ், கிஃப்ட் டாக்ஸ், எஸ்டேட் டூடி, போன்றவற்றைக் குறைக்கப் பெரிதும் உதவுகின்றன. எல். ஐ. ஸி. ஏஜெண்டையும் சார்டர்ட் அக்கவுண்டன்டையும் கலந்தாலோசித்தால் சரியான வழிகளும் முறைகளும் கூறுவார்கள். நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய மற்றொரு விஷயம், குறைந்த வயதில் எடுக்கப்படும் பாலிஸிக்கு ப்ரீமியம் குறைவு.

டெத் கம் டிஸ்எபிலிடி பாலிஸி என்பது விமானம், டாக்ஸி பஸ் ஓட்டுனர்கள் மற்றும் சுரங்கங்களில் பணியாற்றுவோருக்கு மிக உகந்தது. பிறரும் இப்பாலிஸியை எடுத்துக் கொள்ளலாம். இதனால் விபத்தில் ஊனமுறுபவர்களுக்கு மேலும் ப்ரீமியம் கட்டாமலே முழு தொகையும் பாலிஸி காலாவதியாகும் போது கிடைக்கிறது. துரதிர்ஷ்டவசமாக பாலிஸிதாரர் உயிரிழக்க நேர்ந்தாலும் முழுத் தொகை உடனே குடும்பத்தாருக்குப் போய்ச் சேரும்.


ஜனதா பாலிஸி என்பதும் விபத்துக் காப்பு பாலிஸி. இதற்கு ப்ரீமியம் ஆண்டுக்கு 12 ரூபாய் மட்டுமே. ஆனால் வருடா வருடம் புதியதாய் பாலிஸி எடுக்க வேண்டும். விபத்தில் உயிரிழக்க நேர்ந்தால் மட்டுமே பாலிஸி தொகையான பத்தாயிரம் ரூபாய் அளிக்கப்படும்.

ஜெனரல் இன்ஷூரன்ஸ்

வீடுகளைப் பாதிக்கும் தீ, வெள்ளம், புயல் போன்ற இயற்கை, செயற்கை விபத்துக்களைக் கருதி பாலிஸி எடுக்கலாம். இவற்றுக்கு ப்ரீமியம் ரொம்பக் கம்மியே. அன்றாடம் மதிப்பில் உயரும் சொத்துக்களை இவ்விதமாய்ப் பாதுகாப்பதற்குச் சிறிது பணம் செலவானாலும் பாதகமில்லை. வீட்டில் உள்ள பொருள்களை இன்ஷூர் செய்து திருட்டுப் போக நேருமோ என்ற கவலையில்லாமல் இருக்கலாம். சைக்கிள்களைச் சேதத்துக்கும் திருட்டுக்கும் இன்ஷூர் செய்யலாம். கார்கள், ஸ்கூட்டர்கள், மோட்டார் சைக்கிள்கள், இதர வாகனங்களையும் இன்ஷூர் செய்தால், அந்த விபத்தில் உங்கள் வாகனத்துக்கோ அல்லது எதிராளியின் வாகனத்துக்கோ ஏற்படும் சேதத்துக்குக் கூட இன்ஷூரன்ஸ் கம்பெனி செலவை ஏற்கும். இப்போதெல்லாம் இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் பல விஷயங்களுக்கு ஒரே 'பாக்கேஜ் பாலிஸியில்' பாதுகாப்புத் தருகின்றன. இப்பாலிஸிகளுக்குப் ப்ரீமியமும் கம்மி. ஆஸ்பத்திரி செலவுகள் மற்றும் விபத்தினால் ஏற்படும் மரணம் மற்றும் உடல் ஊனம் ஆகியவற்றுக்குக் கூட இன்ஷூரன்ஸ் பாலிஸிகள் உண்டு. உங்கள் ஃப்ரிட்ஜ், டீ. வி., மோட்டார் பம்பு செட்டுகளைக் கூட இன்ஷூர் செய்யலாம். இவை திருட்டுப் போனாலோ பழுதாகிப் போனாலோ இன்ஷூரன்ஸ் தொகை கை கொடுக்கும்.

இன்ஷூரன்ஸ் ப்ரீமியம் கட்ட எல்லோரும் தயங்குகிறார்கள். ஆனால் சற்றுயோசித்துக் கணக்கிட்டால்நமது உடைமைகளின் மொத்த மதிப்பு கணிசமாக இருப்பது தெரியும். சில வருடங்களுக்கு முன்னால் சிறு தொகைக்கு வாங்கிய பொருள் கூட விலைவாசி ஏற்றத்தால் இன்று மதிப்பில் பன்மடங்கு உயர்ந்திருக்கிறது.

தகவல்: ராமச்சந்திரன், பிரஸன்னா



கல்கி



இலவச இணைப்பு

எளிமை + சுத்தம் = அழகு

"இயல்பாகவே 'அழகான பெண்ணாக இருந்தாலும் நேர்த்தியாக ஒப்பனை செய்து கொண்டால் அவள் அழகை அந்த ஒப்பனை இன்னும் எடுத்துக் காட்டும். அதுபோல் தான் வீட்டை அலங்கரிப்பதும். எவ்வளவு தான் சுத்தமாக, பளிச்சென்று இருந்தாலும் அங்கொன்றும் இங்கொன்றுமாய் வைக்கப் படும் அலங்காரப் பொருட்களே உங்கள் இல்லத்தைப் பொலிவுறச் செய்யும். ஆனால் சுத்தம் மிகமிக முக்கியம். தூசியும் ஒட் டடையுமாய்ச் சாமான்கள் வாரி இறைத்துக் கொண்டிருக்கும் வீட்டைப் பளிங்குக் கல்லால் இழைத்தால் கூடப் பலனிருக்காது."

'பளிங்குக் கல்லா? எட்டாத உயரத்தில் பறக்கிறீரே சுவாமி' என்று மனத்துக்குள் முணுமுணுத்தது **திரு. அச்சுத் ஆர் கண்டூர்** காதில் விழுந்து விட்டது போலும்.

"இன்டீரியர் டெகரேஷன் எனப்படும் இல்லங்களை அலங்கரித்தல் பணக்காரக் குடும்பங்களுக்கு மட்டும் தான் உகந்தது என்பது முற்றிலும் தவறான அபிப்ராயம்" என்று ஆரம்பித்தார். "நூற்றுக்கணக்கான வீடுகளுக்கு நான் உள் அலங்காரம் செய்திருக் கிறேன். அவற்றில் பெரும்பாலானவை நடுத்தர வர்க்கத்தினரின் வீடுகள்தான். அவரவர் பட்ஜெட்டுக்குத் தகுந்தவாறு அழகாக அலங்காரம் செய்யலாம்" என்ற திரு. கண்டூர் அலங்கரிக்கப்படாத வீட்டில் யாரும் தங்குவதேயில்லை என்று அபிப்ராயப் பட்டார். "வீட்டில் உள்ளவர்களுக்கும் சூழ்நிலை உற்சாகத்தையும் ஊக்கத்தையும் ஏற்படுத்துகிறது. இதனால் வீட்டை ரம்மிய மாக அழகுபடுத்துவது அவசியம்" என்றார்.

"உதாரணமாக சமையலறையையெடுத்துக் கொள்வோம். இங்கு தான் வீட்டுப் பெண்கள் பெரும்பாலான நேரத்தைக் கழிக்கிறார்கள், அவர்களின் சக்தியும், அதிகமும் செலவாவதும் இங்குதான். இத னால் சமையல் அறை சகல வசதிகளும் உடையதாக இருக்க வேண்டும். ஒரு சிறிய வட்டாரத்துக்குள் குழாய், அரவை மிஷின் அல்லது கல், அலமாரி, அடுப்பு, மேடை, ஃப்ரிட்ஜ் மற்றும் பாத்திரங்கள், அடுக்குத் திறந்த அலமாரி — இவை எல்லாம் அமைந் திருக்க வேண்டும். ஒவ்வொரு சிறிய காரியத்துக்கும் நடந்து நடந்து ஓய்ந்து போகாத வண்ணம் சௌகரியமாய் அமைய வேண்டும் சமையல் அறை. குறிப்பாக வேலைக்குப் போகும் பெண்கள் அலுவலகத் தில் செயல்படச் சக்தியைச் சேமித்துவைத்துக் கொள்ள வேண்டும் அல்லவா?"

"வரவேற்பு அறையை எடுத்துக் கொண் டால், நடுத்தரக் குடும்பங்களில் இதுபல உப யோகங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. அதனால் இவ்வறை நெரிசல் இல்லாமல் பலர் அமர்ந்து அளவளாவ ஏற்ற வகையில் இருக்க வேண்டும். அழகாக இருக்கிறது என்பதற்காகச் சிறிய அறையில் பெரிய சோஃபாவையோ மேஜையையோ வைக்கக் கூடாது. நாற்காலிகள் சாதாரண மரநிறத் தில் இருந்தால் போதும். அவற்றை உட் காரச் சௌகரியமாய், இடைவெளிவிட்டுப் போட வேண்டும். சுவருக்குச் சாதாரண சுண்ணாம்பே போதும். மெல்லிய விளக் கொளி கண்களைப் பாதிக்காமல் குளுமை யாய் இருக்கும். டெலிஃபோன் அல்லது டி. வி. மட்டும் பளிச்சென்ற நிறத்தில் இருந்தால் அதுவே அறைக்குப் பொலிவைக் கொடுக்கும்.

படுக்கை அறையிலுள்ள கட்டில் அவ்வறையின் வாயில் வழியே தெரியாத வண்ணம் இருந்தால் நலம். இங்குள்ள எல்லாப் பொருள்களும் மெல்லிய வண்ணத்

சில எளிமையான அழகுகள்

சில இல்லங்களில் கண்ட எளிமையான அழகுகள்:

அம்மா சீதனமாகக் கொடுத்தபித்தளை அடுக்கும் வெண்கல பானையும் பரணில் தூங்க வேண்டாம். புளியைப் போட்டுப் பளபளவென்று தேய்த்து விட்டு, மண் தொட்டியில் உள்ள குரோட்டன் செடி அல்லது மணிப்ளாண்டை அதற்குள் வைத்து வரவேற்பு அறையில் ஓர் ஓரமாக வைத்தார் ஒருவர்.

முட்டை ஓடுகளில் கோமாளி முகங்களை வர்ணத்தில் வரைந்து வைத்திருந்தார் ஒருவர். வாரா வாரம் புதிய கோமாளி உருவாகிறான் அவர் இல்லத்தில். அவர் குழந்தைகளுக்கும், குழந்தைகளின் பள்ளி நண்பர்களுக்கும் ஒவ்வொரு புதன் கிழமையும் புதிய 'கோமாளியைப்' பார்க்க ஆவல்.

கனமான பழைய புடவையை இரண்டாக்கித் திரைச்சீலையாக மாட்டியிருந்தது ஒரு வீட்டில். இரண்டு ஓரங்களிலும் பார்டர் தெரிந்தது புதுமையாகவே இருந்தது. பட்ஜெட்டில் திரைச்சீலை வாங்கப் பணம் ஒதுக்கும் வரை இந்த யுக்தியைக் கையாள்வதில் தவறில்லையே.

பிரெஷர் குக்கரின் பழைய காஸ்கெட் மீது கனமான காலெண்டர் தாளை ஒட்டிவிட்டு காஸ்கெட்டின் வட்ட வடிவில் பேப்பரைக் கத்தரித்திருந்தார் திருமதி ருக்மிணி பாலகிருஷ்ணன். வெள்ளைத் தாளின் மேல் ஒரு வண்ணப் படம் — செந்தில் முருகனுடையது.

ஒட்டுவதற்கு ஃபெவிகால் மட்டும் வாங்கி எல்லோரும் வீட்டில் செய்யக் கூடியது இது. புன்னகைக்கும் பாப்பாவோ, மலர்ச் செண்டோ, மிக்கி மவுஸோ நமக்கு வரும் வாழ்த்து அட்டைகளிலிருந்து வெட்டி வெள்ளைத் தாள் மீது ஒட்ட உபயோகிக்கலாம். காஸ்கெட்டின் பின்புறத்தை அப்படியே துருத்திக் கொண்டு நிற்கும் வெற்று ஆணியில் மாட்டி விடலாம். அழகான படம், கண்ணாடி, சட்டம் என்று செலவின்றிக் கிடைக்கிறது. அலுத்து விட்டால் வேறு படத்தை மாற்றி ஒட்டிக் கொள்ளலாம்.

நியூட்ராமூல் டின்னின் உள்ளேயிருந்த அலுமினியத் தகட்டை அழகாக வெட்டி எடுத்து அதில் ஆணியால் பல வித படங்களை வரைந்து வர்ணம் தீட்டி, நூலில் கட்டித் தொங்க விட்டால் அழகாக இருக்கும் என்கிறார் நேயர் செ. சண்முகசுந்தரம். குழந்தையின் தொட்டிலுக்கு மேல் கட்டி வைக்கச் சிறந்த விளையாட்டுச் சாமானாக விளங்கும்.

மலர்களுக்கு இருக்கும் வசீகர சக்தி சொல்லி முடியாது. ரோஜா, ஆஸ்டர் என்று மலர் அலங்காரம் செய்யப் பூக்களைத் தேடிப் போக வேண்டாம். நீங்கள் ஒரு இகிபானா நிபுணராய் இருக்க வேண்டும் என்பதும் அவசியம் இல்லை. புல், பூண்டு, காட்டுச் செடிகள் பூக்கள் — இவற்றைக் கொண்டே அழகாக அலங்கரிக்கலாம். ஜூடிகுலான் பாட்டிலில் நீர் நிரப்பி அதில் ஒரு மணி ப்ளாண்ட்டை செருகி வைக்கலாம். தரையில் உதிர்ந்து கிடக்கும் மலர்களை ஒரு பீங்கான் அல்லது கண்ணாடி ஸாஸரில் நீர் நிரப்பி, மிதக்க விடலாம். வெவ்வேறு நிறங்களில் இலைகளைச் சேகரித்துக் காலியான மருந்து பாட்டிலில் நீர் நிரப்பி செருகலாம். ஒரே ஒரு பூ மட்டுமே இருந்தால் அதைத் தட்டின் நடுவே வைத்துவிட்டுச் சுற்றிலும் ஒரே சீராக மாவிலைகளை அடுக்கலாம்.

இயற்கையின் ஒரு சிறு துளியையேனும் உங்கள் இல்லத்தில் புகுத்த முயற்சி செய்யுங்கள். காண்போர் கண்ணுக்கும், மனத்துக்கும் விருந்தாவதோடு உங்கள் ரசிகத் தன்மையையும் வெளிப்படுத்தி வளரச் செய்யும்.

தில் இருந்தால் ரம்மியமான சூழ்நிலை உருவாகும்.

உண்மையான வீட்டு அலங்காரக் கலையென்பது இருக்கும் பொருள்களைக் கொண்டே மேலும் அழகூட்டுவது தானே தவிர புதிதாக வாங்கி வாங்கிச் சேர்ப்பது அல்ல. வீட்டுப் பெண்களும், ஏன் ஆண்களும் கூடத்தான் ரசனையும், கலைக் கண்ணோட்டமும் ஓரளவுக்குப் பெற்றிருந்தால் தாமே வீட்டை அழகுபடுத்திவிட முடியும். நிபுணரை நாடிச் செல்லும் பட்சத்தில் கட்டிடக் கலை அறிந்த நிபுணராய் அவர் இருப்பது நல்லது. பம்பாயில் உள்ள இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் இன்டீரியர் டிஸைனர்களின் அங்கீகாரம் பெற்ற நிபுணர்களுக்கு மதிப்பு அதிகம்' என்ற திரு. கண்டூர் கல்கிக்காக இவ்விதழின் அட்டையில் காணப்படும் அழகிய அறையைப் பிரத்தியேகமாய் அலங்கரித்துத் தந்தார்.



✕ அக்கத் ஆர் கண்டூர்

பேட்டி: ரிக்கி
வண்ணப்படம்: உத்ரா
அட்டையில்: குமாரி மது நிகா

ஓவர்லோட்!
பஸ் ஸ்பிரிங்
உடைந்து விட்டது!

இந்தச் சங்கடங்கள் இல்லாமல் அலுங்காமல், குலுங்காமல் சுகமாக பஸ் பயணம் செய்ய இதோ ஒரு புதிய வசதி!

ஏர் சஸ்பென்ஷன்

இந்தியாவிலேயே முதன் முறையாக சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பெருமையுடன் பஸ்களில் அமைக்கும் புதிய சாதனம்!

வாகனங்கள் ஓடும்போது ஏற்படும் அதிர்ச்சியைத் தாங்கி, கூடுமானவரை பயணிகளைப் பாதிக்காமல் தடுப்பது ஸ்பிரிங்குகள்.


ஆனால் இந்த ஸ்பிரிங்குகள் ஓரளவே அதிர்ச்சியிலிருந்து பாதுகாப்பு அளிக்கும்.


இந்த புதிய 'ஏர் சஸ்பென்ஷன்' சாதனம் ஒரு புரட்சிகரமான தயாரிப்பு. டி.வி.எஸ். குரூப் நிறுவனமான **வீல்ஸ் இந்தியாவின்** (Wheels India) தயாரிப்பு.

இச்சாதனம், வழக்கமாக உள்ள பட்டை ஸ்பிரிங்குகளுக்குப் பதிலாக எல்லா சக்கரங்களுக்கும் பொருத்தப்படுகிறது.

முதன் முறையாக பிரபல K.B. டிராவல்ஸ் சொகுசு பஸ்ஸில் பொருத்தப் படுகிறது. அது அசோக் லேலண்ட் 'வைகிங்' சேஸிஸில் அமைக்கப்பட்ட பஸ்.

விரைவிலேயே எல்லா பஸ்களுக்கும் பொருத்தும் வகையில் தயாராகும்.





பட்டை ஸ்பிரிங்கை விட 'ஏர் சஸ்பென்ஷன்' எவ்விதத்தில் உயர்ந்தது?

- மோசமான ரோடுகளில் பஸ் ஓடும்போது வழக்கமாக ஏற்படும் குலுங்கலைத் தவிர்த்து, பயணத்தை சீராக்குகிறது.
- பஸ்ஸின் உள்ளே ஏற்படும் இட நெருக்கடியால் பஸ் சாய்ந்து செல்லாமல், நேராகவே செல்ல உதவுகிறது.
- வழக்கமாக பஸ்கள் சாலையில் திரும்பும் போது, ஒரு பக்க மாகச் சாயும். அதை இச்சாதனம் தவிர்க்கிறது.
- பஸ்ஸில் பிரயாணிகள் அதிகம் இல்லாமல் காலியாக இருந்தாலும், பஸ் குலுங்காமல் சீராக ஓட இச்சாதனம் உதவுகிறது.
- பஸ்களில் ஓவர் லோடு ஏற்படும் போது ஸ்பிரிங்குகள் உடைந்து போக அதிக வாய்ப்பு உண்டு. அதனால் விபத்து நேரிடலாம். 'ஏர் சஸ்பென்ஷன்' பொருத்து வதால் அம்மாதிரிச் சங்கடம் தவிர்க்கப்படுகிறது.

விபரங்களுக்கு:

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

கோச் டிவிஷன்
211, தெற்கு வெளி வீதி
மதுரை 625001



இம்மை மாறி மறுமை ஆயினும்

இம்மை மாறி மறுமை ஆயினும்
நீஆ கியர் என் கணவனை
யான்ஆ கியர்நின்
நெஞ்சு நேர்பவளே

வெவ்வேறு தலைமுறைகளைச் சேர்ந்த தம்பதிகள் கல்கிக்காக நிகழ்த்திய உரையாடலிலும் இப்பண்பே வெளிப்பட்டது. உரையாடுவோர்:

திரு. கிருஸ்டோபர்
திருமதி கிருஸ்டோபர்
திரு. பிரசன்னா
திருமதி கௌசல்யா

பிரசன்னா: வணக்கம்!

கிருஸ்டஃபர்: வணக்கம், வாங்க! வாங்க! உங்களைச் சந்திக்கிறதுலரொம்ப மகிழ்ச்சி. இது என் மனைவி (திருமதி கிருஸ்டஃபரை அறிமுகம் செய்து வைக்கிறார்.)

பி: இதுதான் கௌசல்யா. என் ஒய்ஃப்.

கி: எல்லோரும் இப்படி உட்காரலாமா? சௌகரியமாக உட்காருங்க. மிஸ்டர் பிரசன்னா... நீங்க...

பி: சார், நீங்க என்னை ஒருமையிலேயே கூப்பிடலாமே, நாங்க இரண்டு பேரும் உங்கள் குழந்தைகள் மாதிரி.

கி: சரி பிரசன்னா. உனக்கு எப்ப கல்யாணம் ஆச்சு?

பி: எனக்கு 1981 ஜனவரில கல்யாணம் ஆச்சு. அப்ப கௌசல்யா பாண்டிச்சேரில வேலையா இருந்தா. நான் பங்களூர்ல இருந்தேன். எனக்கு வயசு 26, அவளுக்கு 21... ('அப்படித்தானே?' என்பதுபோல் கௌசல்யாவைப் பார்க்கிறார்.)

திருமதி கி: என்ன மூணு வருஷத்துக்குள்ள மறந்து போச்சா? சந்தேகத்தோட அவங்களைப் பாக்கறீங்களே?

கௌ: இல்லே, அவர் வேற காரணத்துக்காகப் பார்க்கிறார். கல்யாணம் ஆயி மூணு, நாலு மாசம் எனக்கு டிரான்ஸ்பஃர் கிடைக்கற வரைக்கும் நாங்க பிரிஞ்சு தான் இருந்தோம். நான் லீவு கிடைக்கும் போதெல்லாம் நெய்வேலியில் அம்மா வீட்டுக்குப் போய்டுவேன். கிட்ட இருக்கறதால அது எனக்குச் சௌகர்யமா இருந்தது.

பி: ஆமாம். இவ டிரான்ஸ்ஃபர் வாங்கிக்கிட்ட பிறகு ஒரு டிரிப் ஆஸ்திரேலியா போய் வந்தோம்... அப்பத்தான் எனக்குக் கல்யாணம் ஆன உணர்வே வந்தது. அது வரைக்கும் பெயரளவில் தான்.

கி: ஆஸ்திரேலியா டிரிப்தான் உங்களுக்கு ஹனிமூன்னு சொல்லுங்க. ஆனா, என் ஒய்ஃப் என்னை விட்டுப் பிரிஞ்சு இருந்ததே கிடையாது தெரியுமோ?

திருமதி கி: இந்த 48 வருஷ வாழ்க்கையில நாலு வருஷம் இவர் உத்தியோக நிமித்தமா எங்களை விட்டுட்டுப் போனாரே தவிர, மொத்தம் பதினஞ்சு நாளுக்குத் தான் நான் அவரை விட்டுட்டுப் பிறந்த வீடோ வேறு இடமோ போயிருப்பேன்.

கௌ: நீங்க தேன் நிலவுக்கு எங்கே போனீங்க?

கி: தேன் நிலவாவது...? 1936-ல் கல்யாணம் ஆனவுடன் தனிக்குடித்தனம் ஒரு குக்கிராமத்துல நான் சப் ரிஜிஸ்ட்ரூராக இருந்தேன்.

கௌ: அப்ப உங்களுக்கு என்ன வயசு?

திருமதி கி: பதினெட்டு.

கௌ: உங்களுக்கு பயமா இல்லையா? தனியா, புது இடத்துல, ஒரு புது மனுஷரோட, இவர்னு சேர்ந்து வாழணும்னு?

திருமதி கி: பயமா....? எனக்கு அப்பத் தெரிஞ்சதெல்லாம் சந்தோஷம் ஒண்ணு தான். கடவுளுக்கடுத்தபடி கணவர்தான் எனக்கு. அதனால எங்க மகிழ்ச்சி எந்த விதத்துலயும் குறைஞ்சு போயிடலே.

கி: பிரசன்னா, நீங்க கல்யாணத்துக்கு முன்னாலேயே கௌசல்யாவைச் சந்திச்சுப் பழகினீங்களா?

பி: அவ என் அக்கா மகள்தான்.

திருமதி கி: ஓ, தாத்தா, பாட்டி சின்ன வயசிலேயே ஒங்க இரண்டு பேருக்கும் கல்யாணம் செய்து வைக்கறதா தீர்மானிச்சிட்டாங்களா?

பி: அப்படியும் இல்லே. Ours was an arranged love marriage.

(கௌசல்யா வெட்கப்படுகிறார்.)

கி: அப்ப நிச்சயமா உங்களுக்கு ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்கறதுல 'பிராப்ளமே' இருந்திருக்காது.

பி: நீங்க சொல்றது ஓரளவுக்கு சரி—பிராப்ளம் ஏதுவும் இல்லாட்டாலும் கல்யாணம் ஆயி சேர்ந்து இருக்கும் போது தான் உண்மையான பிரசன்னாவும் கௌசல்யாவும் வெளிப்பட்டாங்க. இவ என்னுடைய வீக் பாயிண்ட் எல்லாம் தெரிஞ்சு வச்சுக்

○ கௌசல்யா இல்லாம ஒரு நாள் கூட இருக்க முடியாது!





○ 1981ல் கல்யாணம் ஆச்சு



○ குழந்தைகளுக்காகவே வாழ்ந்துகிட்டிருந்தோம்

கிட்டதால நான் ஒண்ணும் பண்ண முடியல. (சிரிப்பு) வாஸ்தவத்துல, ரொம்ப பயந்த சுபாவமுடையவளா இருந்தவளுக்கு எப்படி இவ்வளவு தைரியம் வந்ததுன்னு நான் அப்ப ஆச்சரியப்படுவேன். ஆனா அவ ரொம்ப சீக்கிரத்துலேயே என் போக்குக்கு வளைஞ்சு குடுத்துட்டா.

திருமதி கி: அதே அளவுக்கு உங்க கணவர் 'அட்ஜஸ்ட்' பண்ணிக்கிட்டாரா கௌசல்யா?

கௌ: ஓ. தேவைப்பட்டா அவர் சமையல் கூட பண்ணிடுவார். மேலும், அவர் என்னைப் புரிஞ்சுண்டு ஒத்துழைக்கறதால தான் நாங்க கூட்டுக் குடும்பத்துல இருந்தாலும் நான் வேலைக்குப் போய் வர முடியறது.

கி: ஏன் அப்படிச் சொல்றீங்க. கூட்டுக் குடும்பத்துல இருந்தா லேசுஸ் வேலைக்குப் போய் வர வசதிதானே?

கௌ: பல பேர் அப்படி நினைக்கறாங்க. ஆனா அது சரியில்லேன்னு எனக்குத்தோணுது. வீட்டில் இருக்கும் பெரியவங்களை நாள் பூராவும் தனியே விட்டுட்டு சின்னவர்கள் வெளியே போயிடறதால பெரியவங்களுக்கு வீட்டுப் பொறுப்பு அதிகமாயிடறது. 'ஹாய்' ஆக இருக்க வேண்டிய காலத்துல பேரன் பேத்திகளைப் பாத்துக்கற பொறுப்பு, வீட்டு வேலைகளைப் பகிர்ந்துக்கற பொறுப்பு வெளியே சொல்லாவிட்டாலும் ஓரளவு மனக்கசப்பு இருக்கலாம். வேலைக்குப் போகும் பெண்ணுக்கோ, வீடா, வேலையா எது முக்கியங்கற போராட்டம். அதோட, பெரியவங்களை வேலை வாங்கறோமே என்கிற குற்ற உணர்வு. இதையெல்லாம் சொல்லவும் முடியாது. மெல்லவும் முடியாது. கணவனிடம் கொட்டித் தீர்த்துக் கொண்டு, அவன் அளிக்கும் தைரியத்துல தான் வளைய வரணும்.

திருமதி கி: அப்ப உங்களுக்குக் குழந்தை பிறந்தா வேலையை விட்டுடுவீங்களா? அந்த வருமானம் இல்லாம உங்களால சமாளிக்க முடியுமா?

பி: கௌசல்யாவுடைய வருமானம் இல்லாம எங்களால நிச்சயம் சமாளிக்க முடியும். ஆனா, இந்தக் கூடுதல் வருமானத்தால நாங்க எங்களுக்காகச் சில வசதிகளைச் செஞ்சு வச்சுக்க முடியுது.

கௌ: என் வீடுதான் எனக்கு முக்கியம். குழந்தைய வளர்க்க, வேலை எந்த விதத்திலாவது தடங்கலா இருந்தா நிச்சயமா விட்டுடுவேன். ஆனால் பாங்கில இரண்டு வருஷம் வரை லாஸ் ஆஃப் பேயில் லீவ் எடுக்கலாம். அது ஒரு பெரிய நன்மை.

பி: உங்களுக்கு எவ்வளவு குழந்தைகள்?

கி: ஒரு பெண், அவ பிறந்து பத்து வருஷம் கழிச்சு ஒரு பிள்ளை. இரண்டு பேருமே கல்யாணமாகி அமெரிக்காவுல இருக்காங்க.

கௌ: அவங்க இந்தியாவுக்கு வந்து போய்க்கிட்டு இருக்காங்களா? நீங்க அவங்ககூட போய் இருக்கக் கூடாதா?

கி: நாலஞ்சு வருஷத்துக்கு ஒரு தரம் வருவாங்க. ஆனா அடிக்கடி வந்துட்டுப்போகும் போது எங்களுக்கு ஏற்படற வெறுமையை நினைச்சா அவங்க வராததேகூட நல்லதுன்னு தோணுது. அவங்க எங்களை அங்கேயே வந்துடச் சொல்லிக் கடிதம் எழுதிக்கிட்டேதான் இருக்காங்க. நாங்கதான் தயங்கறோம். அங்க போய்த் தங்கின பிறகு ஏதாவது மனஸ்தாபம் ஏற்பட்டா... என்ன இருந்தாலும் ஒருத்தி மருமகள், ஒருத்தர் மாப்பிள்ளைதானே... திரும்பி வருவது என்பது சுலபமான காரியம் இல்லையே.

கௌ: ஒரு அலசரம்னு யார் இருக்காங்க உதவிக்கு?

கி: எனக்கு அவரும், அவருக்கு நானும் தான் உதவி. வேலைக்காரி கூட கிடையாது. நாங்களே வீட்டு வேலையைப் பகிர்ந்துக்கறோம்.

பிர: நீங்களும் என்னைப் போலத்தான் போலிருக்கு... கல்யாணமான இந்த மூணு வருஷத்துல முதல் வருஷம் தான் என்னைப் பொறுத்த வரைக்கும் ரொம்ப சந்தோஷமான காலம். (கௌசல்யாவைப்

பார்த்து) என்ன சரிதானே? (கௌசல்யா வெட்கத்துடன் சிரிக்கிறார்.) அப்பல்லாம் எனக்கு ஏதோ சாம்ராஜ்யமே கிடைச்சுட்ட மாதிரி பெருமையும் பூரிப்புமா இருக்கும்.

திருமதி கி: இப்ப அப்படி இல்லைங்களா நீங்க?

பி: நோ! நோ! சந்தோஷம் இப்பல்லாம் அதிகமாத்தான் இருக்கு – அதுவும் இப்ப நாங்க பெற்றோர் ஆகப் போறோங்கறது தெரிஞ்சப்புறம் எங்களுக்கிடையில பிணைப்பு அதிகமாயிருக்கு. ஆனா முன்னே மாதிரி உற்சாகம் கொப்பளிக்கிறதா சொல்ல முடியாது.

கௌ: இப்பல்லாம் எதுவானாலும், ஆற அமர யோசித்துத்தான் செய்யறோம். என்னால இவரைக் கேட்காம எந்த முக்கியமான முடிவும் எடுக்க முடியாது. நீங்க...

திருமதி கி: நானும் இவர் சொல்லாம முடிவெடுக்கவே மாட்டேன்.

கி: ஆமாமாம். என்னை முடிவெடுக்க வச்சுட்டு ஏதாவது தப்பாப் போச்சுன்னு சொல்லிக் காட்டிக்கிட்டேயிருப்பா. (சிரிப்பு)

கௌ: உங்க மண வாழ்க்கையிலேயே ரொம்பச் சிறந்த கட்டமா எதை நினைக்க றீங்க?

கி: குழந்தைகள் வளர்ந்த பிறகு, நன்றாகப் படித்து நல்ல பெயர் எடுத்த சமயம்தான். அது வரைக்கும் ஒவ்வொரு செயலையும் அவங்களுக்காகவே செய்தோம்.

திருமதி கி: ஆமாம் நாலு வருஷம் நான் இவரைப் பிரிஞ்சு இருந்தது குழந்தைகளுடைய படிப்பை உத்தேசித்துத் தான்.

பி: நாலு வருஷம்! என்னால ஒரு நாள் கூட கௌசல்யாவை விட்டுட்டு நிம்மதியா இருக்க முடியாது. சரி, அதிருக்கட்டும் குழந்தைகளுக்காகவே கிட்டத்தட்ட இருபது வருஷமா வாழ்ந்துட்டு இப்ப அவங்க உங்களை விட்டுட்டுப்போன பிறகு உங்க கவனமெல்லாம் இப்ப திசை திரும்பியிருக்குமே. இதனால உங்க அன்னியோன்னியம் அதிகமாயிருக்கா?

கி: அதில சந்தேகமேயில்லை. ஒருத்தர ஒருத்தர் கொஞ்சம் மறந்து தான் போயிருந்தோம். இப்ப பிரிஞ்சவங்க கூடினா நிலைன்னுவாங்களே – அந்த மாதிரி நிலை எங்களுடையது. அருமை அதிகமாயிருக்கு. இன்னும் சொல்லப்போனா என்னுடைய ஒரே கவலை நான் இவளைக் கடைசிக் காலம் வரைக்கும் விட்டுப்பிரியக் கூடாதேங்கறது தான். ஏதாவது ஒண்ணு ஆயிட்டா... ரொம்ப கஷ்டமில்லையா?... (சற்று உணர்ச்சி வசப்பட்டுப் பேசுகிறார். திருமதி கிருஷ்டஸ்பரின் கண்கள் பனிக்கின்றன. இளம் தம்பதியர் திகைப்போய் ஒரு நிமிடம் மௌனம் சாதிக்கின்றனர்.)


பி: உங்களுடைய தன்னலமற்ற குணம் எங்களுக்கு நல்ல உதாரணம். உங்களை மாதிரி பெரியவங்க கிட்ட நாங்க கத்துக்க வேண்டியது நிறைய இருக்கு.

கௌ: நீங்க எங்களை மாதிரி இளைஞர்களுக்கு என்ன அட்வைஸ் கொடுக்க விரும்பறீங்க?

கி: விட்டுக் கொடுக்கிற மனப்பான்மை தாம்பத்தியத்துல ரொம்ப முக்கியம். ஒருத்தரோட அன்புல மற்றவருக்குப் பரிபூரண நம்பிக்கை இருக்கணும். இந்த விஷயத்துல இம்மியளவு கூட சந்தேகம் இருக்கக் கூடாது. இப்பண்பு இரண்டு பேருக்குமே இருந்தா எதையும் சமாளிக்கலாம்.

திருமதி கி: குழந்தைங்க பிறந்தப்புறம் தான் உண்மையான போராட்டங்களே ஆரம்பிக்கும். அவங்க நல்லதுக்காக எதையும் தியாகம் செய்யத் தயாராய் இருக்கணும். அன்பு, தியாகம், சத்தியம் இந்த மூணுதான் ஒளியமயமான தாம்பத்திய வாழ்க்கைக்குத் தேவைகள்.

புகைப்படங்கள்: அமர் ப்ளாஷ்



முட்டை வேகும்போது தண்ணீரில் ஒரு ஸ்பூன் உப்பைப் போட்டு வேக வைக்கவும். வெந்ததும் குளிர்ந்த நீரில் முக்கியெடுத்தால் உரிப்பது சுலபம்.

தயிரில் சிறிய தேங்காய்த்துண்டு ஒன்றைப் போட்டு வைத்தால் தயிர் இரண்டு நாட்கள் வரை கெடாமல் இருக்கும். 'அந்தத் துண்டு தேங்காய் இருந்தால் ஒருநாள் சமையலுக்கு வருமே?' என்று கேட்கிறீர்களா? அதுவும் வாஸ்தவம்தான்!

—ஆர். அரிகோபி.



சிக்கன பட்ஜெட்



மஞ்சுளா ரமேஷ்

தேதி 18 — காலை மணி 9.30.

''இதென்ன கன்றாவி குழம்பு? உப்பு மில்லே, உறைப்புமில்லே. இத மனுஷன் தின்பானா...?''

''என்னை என்ன பண்ணச் சொல் றீங்க? துவரம்பருப்பு தீர்ந்து போச்சு. கறிகாய் போன ஞாயிற்றுக்கிழமை வாங் கினதுதான். சமையலுக்கு என்னஇருக்கு. இல்லேன்னு கேக்கறது கிடையாது...''

''நீ சொல்லித் தொலைக்கறது தானே...?''

''எங்கே? காலையில எழுந்தவுடனே பேப்பரு. அப்புறம் ஷேவிங், குளியல், சாப்பாடு... நான் சொல்றதுக்கு வந்தா இதுக்குள்ளயா ஆயிடுத்துன்னு ஒரு சண்டை... பருப்பு விலை, உப்பு விலை'ன்னு பேப்பரைப் பாத்துப் படிக்கறீங்க...''

''சரி, சரி, உன் ராமாயணத்தைக் கேக் கறத விட இந்த அம்மா, அப்பா இல்லாத குழம்பைச் சாப்பிட்டுட்டுப் போலாம்.''

என்ன? இந்த உரையாடல் எல்லாம் எங்கேயோ கேட்ட மாதிரி இருக்கேன்னு பாக்கறீங்களா? எல்லாம் நம்ம வீட்டுக் கதைதான். பஞ்சப்பாட்டு கம்யூனிசம்



மாதிரி. எல்லார் வீட்லேயும் சமமாதான் இருக்கு. இதுக்கு உங்க வீடு என்ன எங்க வீடு என்ன?

இதுல யாரைச் சொல்லியும் குத்தமில்லே. பருப்பு கிலோ பத்து ரூபாய். தேங்கா யெண்ணெய் முப்பத்தியாறு ரூபாய். என் னத்தை வாங்கி எப்படிக் குடித்தனம் நடத்துவது?

ஆனால் ஒன்று. இப்படிச் சண்டை போட்டுக் கொண்டு விட்டை ரணகளமாக் குவதை விட திட்டமிட்டுச் செலவு செய்ய லாம். ஒன்றாந்தேதி வாங்கிய சாமானில் பத்து தேதி வரை ஜமாய்த்து விட்டுப் பதி னைன்றாந்தேதி காலை குருக்ஷேத்திரத்தில் இறங்க வேண்டாம்.

சரி. ஒன்றாந்தேதி என்ன செய்வது?

விலைவாசி ஏறித்தான் இருக்கிறது. சம்ப ளம் இதற்குத் தகுந்தாற் போன்று 'ஜில்' லென்று ஏறவில்லை. எனவே இரண்டையும் வைத்துக் கொண்டு திட்டமிடலாம்.

அத்தியாவசியமான செலவுகள் ஒருபுறம்—

அவசியமான செலவுகள் இரண்டாவது பக்கம் —

திடீரென்று வந்து விடும் செலவுகள் மூன்றாவது—

சேமிப்பு நாலாவது—

இப்பொழுது இருக்கும் நிலைமைக்குச் சேமிப்பாவது ஒன்றாவது என்று முணு முணுக்காதீர்கள். அதைக் கடைசியில் பார்த்துக் கொள்ளலாம்.

அத்தியாவசியமான செலவுகளில் சாப் பாட்டுச் செலவு, குழந்தைகளின் பீஸ், போக்குவரத்து முதலியவை அடங்கும். நம் வீட்டிற்கு 'ஒரு நாளைக்கு எவ்வளவு அரிசி, பருப்பு, காய்கறிகள் ஆகிறது என்று கணக்குப் போட்டுப் பாருங்கள். பிறகு லிஸ்ட் போடுங்கள்.

● அரிசியே சாப்பிட்டுக் கொண்டிருந்தால் மாவுச் சத்து மட்டும் சேரும். ரேஷனில், கோதுமை, மைதா போடுகிறார்கள். அதை டப்பாவில் போட்டு வீணடிப்பதையோ, இல்லை வாங்காமலே விட்டு விடுவதையோ நிறுத்தி வாங்கி உபயோகிக்கலாம். மைதா வாலே எத்தனையோ பலகாரங்களைச் செய்ய லாம். கற்றுக் கொடுக்கப் புத்தகங்களா இல்லை?

இப்போது பாருங்கள். அரிசியின் உப யோகம் பாதியாகக் குறைந்ததா?

● பருப்புக் குழம்பு தான் தினமும் செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை. கறி, ரசம், வற்றல்குழம்பு போன்றவை செய்ய லாம். வாரத்திற்கு இரண்டு நாள் பருப்பை உபயோகித்தால் போதும். கறிகாய்களில் தான் சத்து அதிகம். தினமும் ஒரு காயை வாங்கிக் கறி சமைத்தால் போதும்.



- கூடிய வரை 'கேஸ்' ஸ்டவ்வும், குக்கரும் உபயோகிப்பது நல்லது. குக்கர் இல்லையென்று சொல்லாதீர்கள். எப்படியாவது வாங்கிவிடுவதனால் பாதிக்குப் பாதி எரிபொருளை, நேரத்தை மிச்சப்படுத்தலாம். கறிகாய்கள் குக்கரில் வெந்து போவதால் சத்தும் வீணாவதில்லை.

- குழந்தைகளின் பள்ளிச் செலவுகளை இந்தக் காலத்தில் கட்டுப்படுத்த முடியவில்லைதான். பீஸ் என்பது அத்தியாவசியமானதுதான். ஆனால் மற்றச் செலவுகளைக் குறைக்கலாம். அவர்கள் கூடியவரை வெளியே சாப்பிடாமல் பார்த்துக் கொள்ளலாம். சுத்தத்திற்கும் சுத்தம், காசு செலவு மிச்சம். பல கெட்ட வழக்கங்களுக்கு அடிகோலாமல் இருக்கும்.

- போக்குவரத்திற்கென்று என்ன செலவாகிறது? பஸ்ஸில் கூடிய வரை போய்விடுவது நல்லது. ஸ்கூட்டர், கார் உள்ளவர்கள் கூடியவரை ஒரே 'டிரிப்'பாக எல்லாக் காரியங்களையும் முடித்துக் கொள்வது நல்லது. குழந்தைகளைப் பள்ளியில் விட்டுவிட்டு ஆபீசுக்குப் போகலாம். நேரம் ஒத்து வரவில்லையா? வேறு இரண்டு அவசியமான வேலைகளை முடித்துக் கொள்ளலாம். வண்டியை எடுத்தால் குறைந்தது மூன்று வேலையாவது முடிப்பது என்று தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

இந்த இடத்தில் ஒரு ரகசியம். இன்கம் டாக்ஸ் கட்டுபவர்களுக்குத் தேய்மானச் சலுகை (Depreciation) தருகிறார்கள். ஸ்கூட்டர், கார்களுக்கு குறிப்பிட்ட ஆண்டுகள் வரை இந்தச் சலுகை உண்டு. அதையும் தாண்டிப் போக விடாமல், ஸ்கூட்டரையோ காரையோ மாற்றிக் கொள்ளலாம். பழையவைகளைக் கணிசமான விலைக்கு விற்று விடலாம். இதனால் 'ரிப்பேர்' போன்ற பெரிய செலவுகளைத் தடுக்கலாம்.

ஆடிட்டர்களையும் சென்று ஆலோசனை கேட்டால் எந்தெந்த வழிகளில் சலுகைகளைப் பெற முடியும் என்பதைக் கூறுவார்.

அவசியமான செலவுகள்:

இதில் வாங்கியே தீர வேண்டும் என்ற வகையில் துணிமணி, நகைகள், பெரியவர், குழந்தைகளுக்கான ரொம்பன் டானிக், பாத்திரைகள், பர்னிச்சர் இவை வரும்.




துணிகளை எல்லோரும் தான் ஆவலுடன் வாங்குகிறார்கள். ஒரு பிளவுஸ் பீஸுக்காக இருபது கடை ஏறி இறங்கத் தயங்குவதில்லை. ஆனால் நம்மில் எத்தனை பேர் அதைப் பத்திரமாகப் பாதுகாக்கிறோம்? புதுமோகம் போனவுடன் கந்தைத் துணி தான்.

- புடவை, பேண்ட், ஷர்ட்டுகளை சாஃப்ட் சோப்பில் துவைத்து நிழலில் காய வைத்து இஸ்திரி போட்டுக் கட்டலாம். காட்டன் புடவைகளை இரண்டு நாட்கள் கட்டலாம். இஸ்திரி, போட்ட பேண்ட் ஷர்ட்டுகளை மூன்று நாட்கள் உபயோகப்படுத்த முடியும்.

- கூடிய வரை வீட்டில் துவைத்துக்கொள்வதால் துணிகள் சீக்கிரம் கிழிவதில்லை, சாயம் போவதில்லை; லாண்டிரிச் செலவு மிச்சம்.

- குழந்தைகளுக்குப் போஷாக்கிற்கு 'டானிக்' தருவது நல்லது தான். ஆனால் இப்போதைய மருத்துவக் கண்ணோட்டப்படி இயற்கையான முறையில் ஊட்டம் தருவது நல்லது என்ற கணிப்பு வந்திருக்கிறது. ராகி, பார்லி, ஓட்ஸ், கோதுமை போன்றவை சத்துள்ள பண்டங்கள். இவற்றைக் கொண்டு பானம் தயாரிக்கலாம். கடையில் இருபத்தைந்து ரூபாய் கொடுத்து வாங்கி அலமாரியில் அடுக்கினால் தான் பெருமை என்றில்லை.



உடல் ஆரோக்கியமாய் இருந்தாலே பாதி செலவு குறையும். ஆனால் இப்போதெல்லாம் முழு ஆரோக்கியத்துடன் இருப்பவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். எனித்த நிலைமை? காப்பியும், சிகரெட்டும், கார மசாலா உணவுமே இவற்றிற்குக் காரணம். இந்த மாதிரி செலவழித்துவிட்டுக் கடைசியில் டாக்டருக்கும் தருகிறோம். ராகி கஞ்சி கௌரவக் குறைச்சல் என்று பாட்டில்பாட்டிலாகப் பானங்களை வாங்குகிறோம்.

பர்னிச்சர் மற்றும் ட. வி., ப்ரிட்ஜ் போன்றவை வாங்கும் போது எது மலிவாக இருக்கிறது என்று பார்க்காதீர்கள். சிலர்

தள்ளுபடி விலையில் கிடைக்கிறது என்று எல்லாவற்றையும் வாங்குவார்கள். நல்ல, தரமான சாமானாக இருந்தால் அவர்கள் ஏன் தள்ளுபடியில் விற்கிறார்கள் என்று யோசித்துப் பாருங்கள். நீண்ட காலம் வைத்துக் கொள்ள வேண்டிய பொருட்கள் கொஞ்சம் விலை அதிகமானாலும் நல்ல கடைகளில் தரமறிந்து வாங்குங்கள். இதனால் நான்கே மாதங்களில் திருப்பிக் கொள்ளும் ரிப்பேர் செலவு மிச்சமாகும்.

திடீர்ச் செலவுகள்:

''எங்க ஊர்ல மழை. வீடெல்லாம் போயிடிச்சு. ஒரு மாசம் தங்கலாம்னு வந்திருக்கோம்.''

அவர்கள் பாவம்தான். ஆனால் நமக்குச் செலவு. செலவு வைக்கக் கூடியதாக ஏற்பட்டு விடும் சுகவீனம். மிகவும் நெருங்கிய உறவினர் கல்யாணத்தை வைத்துக்கொண்டு பணத்தைக் கேட்பார். அந்த நாளில் அவர் உங்களுக்குச் செய்த உதவிகள் தமிழ்சினிமா பாணியில் மனச்சாட்சியை உறுத்தும்.

இவையெல்லாம் திடீரென்று வந்துவிடும் செலவுகள்தான். இவற்றிற்கென்று கட்டாயமாகச் சம்பளத்தில் ஒரு தொகையை ஒதுக்கி வையுங்கள். அந்த மாதம் இந்த வகையில் ஒன்றும் செலவில்லையா! அதை அழகாகச் சேமிப்பில் போடலாம்.

சேமிப்பதற்கென்று ஒரு தொகையை ஒதுக்குவது மட்டுமே சேமிப்பல்ல. பல்வேறு வழிகளில் பண்டங்களாகச் சேகரிப்பது கூட ஒரு சேமிப்புதான்.

● சம்பள பட்ஜெட்டில் கட்டாயச்சேமிப்பு என்ற ஒன்றை ஏற்படுத்தலாம். உப்பு, புளியிலிருந்து செலவுகளைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டே வந்தால் கட்டாயம் கொஞ்சம் மீதமாகும். அது சிறு தொகையாக இருந்தாலும் 'பேங்கில்' போட்டுக் கொண்டே வந்தால் ஒரு குறிப்பிட்ட தொகை சேரும். அதை வட்டி விகிதம் அதிகம் கிடைக்கும் நம்பகமான கம்பெனிகளில் போடலாம்.

● பணமாக வைத்திருப்பதை விட தங்கமாக அல்லது மனை வீடு போன்றவைகளாக வாங்குவதில் லாபமுண்டு.

● அதே போல மனை, வீடு வாங்க இன்றைக்கு அலுவலகங்கள், கம்பெனிகளில் மட்டுமின்றிப் பல கோவாபரேடிவ் பாங்குகளில் கடனுதவி அளிக்கிறார்கள்.

அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு ஒரு ரகசியம். ''பி. எஃப்'பில் கையே வைக்காமல் இருக்கிறேன்'' என்று பெருமையாகச் சொல்லிக் கொள்வதைவிட, ஒரு குறிப்பிட்ட தொகை சேர்ந்தவுடன் நகை வாங்கலாம்; மனை வாங்கலாம். ஏனெனில் வட்டியைக் கணக்கிட்டால் இதுதான் லாபம்.

கடைசியாக ஒன்று

''நீங்களும் இருக்கீங்களே! பக்கத்து வீட்டு லலிதாவோட ஹஸ்பெண்ட கூட உங்களை மாதிரி பாங்க் மானேஜர்தான். அவங்க வீட்ல கிரைண்டர், ஃப்ரிட்ஜ்னு எதுக்குக் குறைச்சல்?''

அவர்கள் அது வைத்திருக்கிறார்கள். இவர்கள் இது வாங்கியிருக்கிறார்கள் என்று பொருமைப்படுவதும், அதைப் போல வாங்க முயலுவதுமே பாதிச் செலவுகளுக்குக் காரணம். ஒவ்வொருவர் வாழ்க்கை ஒவ்வொரு விதம். அவரவருக்கு இருக்கும் வாழ்க்கையில் எப்படிப் பரிமளிக்கிறார்கள் என்பதில் தான் பெருமை இருக்கிறது.



சீயக்காயுடன் உலர்ந்த எலுமிச்சம் பழத்தோல், உலர்ந்த ரோஜா, இதழ்கள், பச்சைப்பயிறு சிறிதளவு மற்றும் கொஞ்சம் வெந்தயம் ஆகிய வற்றைச் சேர்த்து, தான் செய்து கொண்டு, தலையைக் கசக்கினால், கூந்தல் செழிப்பாக வளரும்.

கல்லில் ஒட்டிக் கொண்டு வரமாட்டேன் என்று அடம்பிடிக்கும் தோசையோடு மல்லுக்கு நின்று பிரித்தெடுப்பது (முழுதாய்) என்பது பெரிய கஷ்டம்தான்! எண்ணெயையும் உப்பையும் சேர்த்துக் கல்லில் தேய்த்துவிட்டு வார்த்தால் தோசையை முழுதாய் நாம் கைப்பற்றி விடலாம்!

-ஆர். அரிகோபி.





✕ பசுமையான பந்தல்

வீட்டுக்கோர் தோட்டம் அமைக்க விரைந்து செயல்படுவீர். அதுவே நாம் செய்யும் நாட்டுக்கோர் நல்ல பணி.

கத்தரிக்காய் கிலோ ஆறு ரூபாய், வாழைக்காய் ஒன்று அறுபது பைசா என்று காய்கறிகளின் விலை விஷம் போல் ஏறியிருந்தாலும் நம்மில் பெரும்பாலானோர் காய்கறி வாங்குவதையும் சாப்பிடுவதையும் நிறுத்தி விடவில்லை. ''விளைவையும் வனப்பையும் அளிக்கும் காய்கறிகளை அவரவர் வசதிக்கேற்ப வீட்டுத் தோட்டத்திலோ, மொட்டை மாடியில் மரப் பெட்டிகளிலோ, தொட்டிகளிலோ சாகுபடி செய்து பயன் பெறலாம்'' என்று உறுதியளித்தார் ஹார்டிகல்சரல் ஆஃபீஸர், **திரு. டி. வேங்கடபதி**

''சிறிது சிரமப்பட்டாலும், விஷயமறிந்து இந்தக் காரியத்தில் ஈடுபட்டால் நிச்சயம் நல்ல பலன் கிடைக்கும். தோட்ட வேலை செய்வது நல்ல உடற்பயிற்சி. மேலும் நம் வீட்டிலேயே பயிர் செய்து அவ்வப்போது பறித்த புதிய காய்கறிகளுக்குக் கொத்தவால் சாவடி தொடங்கி நகர் வலம் வரும் வாடிய காய்கள் ஈடாக மாட்டா. வீட்டுத்தோட்டத்தில் நாலு காய் காய்த்தால் அதனால் கிடைக்கக்கூடிய சந்தோஷத்துக்கு ஈடே கிடையாது என்ற திரு. வேங்கடபதி கல்கி வாசகர்களுக்குச் சில உபயோகமான குறிப்புக்களைத் தந்துள்ளார்:

இடம் தேர்ந்தெடுப்பு:


குறைந்த பட்சம் 6 மணி நேரமாவது நல்ல சூரிய ஒளி படக்கூடிய இடமாகத் தேர்ந்தெடுத்தல் நல்லது.

மண்வகை மற்றும் தோட்டம் தயார் செய்தல்:


நல்ல வடிகால் வசதியுள்ள குறுமண் நிலம் மிகவும் சிறந்தது. மிகவும் களிப்பாக உள்ள நிலங்களில் சம அளவு ஆற்று மணலும், நன்கு மக்கிய தொழு உரம் அல்லது கம்போஸ்ட்டும் கலந்தும், மிகவும் மணற்பாங்கான இடங்களில் சம அளவில் செம்மண் மற்றும் நன்கு மக்கிய தொழு உரம் அல்லது கம்போஸ்ட் சேர்த்து நிலத்தைப் பண்படுத்துதல் அவசியம். வருடம் முழுவதற்கும் 5 பேர் உள்ள குடும்பத்திற்கு வேண்டிய காய்கறிகளை உற்பத்தி செய்யச் சுமார் 5 செண்ட் நிலம் தேவை.

நிலத்தை 3 (அ) 4 முறை நன்கு கொத்தி புல், பூண்டுகள் கற்கள் முதலானவற்றை எடுத்து 500 ச. அடிக்கு அரை டன் அல்லது 1 வண்டி தொழு உரம் (அ) கம்போஸ்ட் இட வேண்டும். பின்னர் பயிர்வகைக்குத் தக்கவாறு பாத்தி அல்லது பார்கள் பிடிக்க வேண்டும். பந்தல் வகைக் காய்கறிகள் மற்றும் தரையில் படரும் கொடி வகைகள் போன்றவற்றிற்கு நன்கு இடைவெளிவிட்டு (5 முதல் 8 அடி வரை – காய்கறிக்குத் தக்கவாறு) குழிகள் எடுத்து, குழி ஒன்றுக்கு

✕ திரு. வேங்கடபதி







✕ மாலை நேரத்தில் தண்ணீர் பாய்ச்சலாம்

✕ கறிப்பட்டை தேடி...

12 கிலோ தொழு உரம் இட்டுத் தயார் செய்ய வேண்டும்.

காய்கறிவகைகள் மற்றும் சாகுபடிக் குறிப்புகள்:

வீட்டுத் தோட்டத்தில் எல்லாவிதமான காய்கறிகளையும் பயிரிட முடியும். சிலவகைக் காய்கறிகள் (வெண்டை, கொத்தவரை, முள்ளங்கி, பீன்ஸ், அவரை வகைகள், கீரை வகைகள் முதலானவை) நேரடியாக விதைகளை ஊன்றியோ (அ) விதைத்தோ உற்பத்தி செய்ய வேண்டும். மிளகாய், கத்தரி, தக்காளி போன்ற ரகங்களை முதலில் நாற்று விட்டுப் பின்னர் 25 முதல் 30 நாட்களில் பிடுங்கி நடவு செய்ய வேண்டும்.

பருவம் :

ஆடிப்பட்டம்	ஜூலை, ஆகஸ்ட்.
தைப்பட்டம்	ஜனவரி, பிப்ரவரி
சித்திரைப்பட்டம்	ஏப்ரல், மே.

மேற்சொன்ன மூன்று பட்டங்களும் காய்கறி பயிரிட சிறந்த பட்டங்களாகும். இவற்றில் ஆடிப்பட்டம் அனைத்து வகைக் காய்கறிகளும் பயிரிட மிகவும் உகந்ததாகும். சித்திரைப்பட்டத்தில் தண்ணீர் வசதி மற்றும் தட்ப வெப்ப நிலையைப் பொறுத்துக் காய்கறிகளைத் தேர்வு செய்தல் அவசியம்.

உரமிடுதல்:

பூசணி ரக காய்கறிகள் தவிர்த்து இதர காய்கறிகளுக்கு நட்ட 25 நாட்களுக்குப் பின்னர் 1 மாத இடைவெளியில் ஒரு சதுர மீட்டருக்கு 50 கிராம் இப்கோ காம்ப்ளெக்ஸ் (10: 26: 26) வீதம் செயற்கை உரமிடுவதால் மகசூல் அதிகரிக்கும்.





× விதைத்தல்

× சரியான பருவத்தில் கத்தரித்தால் நன்றாகத் துளிர்க்கும்.



களையெடுத்தல்:

களையெடுக்காத பயிர் — கால் பயிர் என்பது பழமொழி. இரண்டு அல்லது மூன்று முறை களையெடுத்து, கொத்தி மண் அணைத்தல் அவசியம். 20 (அ) 25 நாட்கள் இடைவெளியில் களையெடுக்கலாம்.

நீர்ப் பாய்ச்சுதல்:

கோடையில் குறைந்த பட்சம் ஒருநாள் விட்டு ஒருநாள் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். மழைக்காலங்களில் மண்ணின் ஈரத்தன்மையை அறிந்து நீர்ப்பாய்ச்சுதல் அவசியம்.

பூச்சி, பூஞ்சாளங்கள்:

பொதுவாக காய்கறிகளில் அசுவனி, தத்துப்பூச்சி, இலைப்பேன், தண்டுப்புழு, காய்ப்புழு, மற்றும் வண்டுகள் முதலானவை தாக்குகின்றன. செடிகளில் ஏற்படும் மாறுதல்களைக் கவனித்து, தோட்டக்கலை அலுவலகத்தில் தெரிவித்து உதவி கேட்கலாம். எந்தவித பாதிப்புக்கு எந்த மருந்து சிறந்தது என்று அங்கு அறிவுரை வழங்கப்படும்.

பயிர் சுழற்சி முறை:

ஒரு பருவத்தில் ஓர் இடத்தில் பயிரிடப்பட்ட பயிரை மறு பருவத்தில் இடம்மாற்றிப் பயிரிடுவதால் மகசூல் அதிகரிப்பதுடன், மண்ணிலிருந்து பரவும் சில நோய்களையும் கட்டுப்படுத்த முடியும்.

இறுதியாக குளிர்ப் பிரதேசக் காய்கறிகளான கோஸ், காலிபிளவர், கேரட், பீட்ரூட், நூல்கோல் ஆகிய அனைத்தையும் கூட சென்னையிலேயே பயிர் செய்யலாம். இதற்கு அக்டோபர் இறுதியிலும் நவம்பர் முதல் வாரத்திலும் நடவு செய்யவேண்டும்.

காய்கறி சாகுபடியை வெற்றிகரமாகவும், லாபகரமாகவும் செய்ய முடியும்.

புகைப்படங்கள்: உத்ரா

× ஹோஸ் பைப் இருந்தால் கஷ்டமில்லை



பழையன கழிதலும்

ம. வே. சிவகுமார்

முழு நீள நாவல்



"ரொம்ப நாளாச்சு எல்லோரும் சேர்ந்து சாப்பிட்டு'' என்றாள் மங்களம் பாட்டி. பழுத்த சுமங்கலி. அதன் பெருமை, மூக்கின் மஞ்சளோடு அலாதியாய்க் கலந்து விட்டிருந்தது. சமையலறை ரொம்பவும் பெரியது. அடுப்பு வைத்திருக்கும் மேடை ஒரு மூலையில் சின்னப் பையன்கள் ஒளிந்து விளையாடுகிற மாதிரி ஒண்டியிருந்தது. கல்யாணப் பந்திமாதிரி பாய் போட்டுக் கிட்டத்தட்ட முப்பது பேர் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். மங்களம் பாட்டி 'ரொம்ப நாளாச்சு எல்லோரும் சேர்ந்து சாப்பிட்டு' என்று சொன்னதற்கு 'ஆண்கள் எல்லோரும்' என்றுதான் அர்த்தம். அவர்கள் சாப்பிட்டுப் போன எச்சில் தட்டில் தான், வீட்டுப் பெண்கள் சாப்பிட வேண்டும். பாட்டி இருக்கும் வரை அப்படித்தான். தாத்தாவின் இலைக்குப் பக்கத்திலேயே பாட்டியும் உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள்.

மூத்தவன் வெங்கடேசன், நாணு என்று அழைக்கப்படும் நாராயணன், குப்பு, சுப்பு, இவர்கள் வீட்டின் பையன்கள். ஒரே மாப்பிள்ளை சுந்தரராஜன் என்னும் சுந்தாச்சு வீட்டோடு இருக்கிறார். அவர் மனைவி போதிய இடைவெளிகளில் குழந்தை பெற்றுக் கொண்டிருக்கிறாள்.

பிள்ளைகளுக்குத் தகப்பன் மேல் இருக்கும் பயம் காரணமாக வீட்டின் முதல் ஆண் என அதோ இலைக்கு முன்னால் ஒரு கையைத் தரையில் செங்குத்தாய் ஊன்றியபடி, மற்றதில் உணவை வைத்து, அவ்வப்போது வெறும் கண்களால், சாப்பிடுகிறவர்களைக் கலங்கச் செய்கிற சிவராமய்யரைச் சொல்லலாம். வீட்டின் குழந்தைகளும் தாத்தா கூடவே சாப்பிட உட்கார வைக்கப்படுவதின் காரணம், சப்தம் இல்லாமல் அழுகை இல்லாமல் தானாகவே சாப்பிடும் அளவுக்கு அதுகளுக்கு சிவராமய்யர் மேல் இருக்கிற நடுக்கம்.

அந்த வீட்டில் பெண்கள் பெயரெல்லாம் முக்கியமில்லை. மூத்தவன் பெண்டாட்டி, அடுத்தவன் பெண்டாட்டி, குப்பு பெண்

டாட்டி, சுப்பு பெண்டாட்டி என்று மட்டுமே பெண்கள் அறியப்பட்டும், அழைக்கப்பட்டும் வந்தனர்.

இந்தக் கூட்டுக் குடும்பத்தின் 'உள்விட்டு நிலவரம்' தெரியாதபடியால் இந்த வீடும், இதில் வசிக்கிறவர்கள் ஒற்றுமையும் அந்தப் பேட்டைவாசிகளின் ஆச்சரியங்களுள் ஒன்றாய் ரொம்ப காலமாக இருந்து வருகிறது.

சாப்பிடும் போது யாரும் சுபாவமாய்ப் பேசிக் கொள்ளவில்லை. மங்களம் பாட்டி மட்டும், ''அவனுக்குக் கத்தரிக்காய் பிடிக்கும் போடு. நிறையத்தான் போடேன். பாத்திரத்திலேயே கூட ஒட்டிக்குமா என்ன?'' என்ற ரீதியில் பேசிக் கொண்டிருந்தாள். மாட்டுப் பெண்கள் பகற்றத்தில் ரசத்தைச் சிந்திக் கொண்டும், பனியன் கருணையில் துடைத்துக் கொண்டும் இருந்தார்கள்.

வீட்டில் ஒரே ஒரு பெட்ரூம் தான் இருந்தது. ஆடி வந்த கட்டில் ஒன்று அங்கே தான் இருக்கிறது.

வெங்கடேசன் டூர் போய் அன்றுதான் திரும்பியிருந்தான். சுப்பு ஆபீஸ் வேலையாக விடிந்ததும் வெளியூர போகிறான். அவனுக்கு மட்டுச் சம்பளம். வெளியூர் போனால் பேட்டா கிடைக்கும். அதனாலேயே அடிக்கடி வெளியூர் போகிற டிபார்ட்மெண்ட்டுக்கு மாறுதல் கேட்டு வாங்கியிருந்தான். நாராயணன் சபரிமலை போய் அன்றுதான் திரும்பியிருந்தான். முதல் முறை. ''கன்னி ஐயப்பனா?'' என்று கேட்கப்பட்டபோதெல்லாம் ''இல்லே சாமி, கல்யாணம் ஆகி குழந்தையெல்லாம் இருக்கு'' என்று ஜோக் கடித்ததைத் தவிர மற்றபடி தீவிரமாய் விரதமிருந்தவன். ஹாலில் சாப்பாடு முடிந்தவுடன் பிரசாத விநியோகம் நடந்தது. விபூதி குங்குமத்திற்கு இருந்த வரவேற்பு பிரசாத நெய்க்கும், அப்பத்திற்கும் இல்லாமல்போய் விட்டது. 'திருப்பதி பிரசாதம் மாதிரி, ஐயப்பன் கோவிலிலும் லட்டு கொடுக்கலாம். டேஸ்ட் நல்லாயிருக்கும்' என்றான் கந்தாச்சு. மங்களம் பாட்டி தனது செயற்கைச் சிரிப்பொன்றை உதிர்த்தாள். இந்த ரக சிரிப்பை அவள் மாப்பிள்ளையின் நகைச்சுவைக்கென ஒதுக்கியிருந்தாள்.

ஹாலில் காலை நீட்டியபடி பேரக் குழந்தைகளுக்குப் பாட்டி கதை சொல்லிக்கொண்டிருந்தாள். இன்னமும் நிறைய இடம் இருந்தது. குழந்தைகள் தூங்கியபின் பாட்டி மாடிக்குப் போவாள். ஆண்கள் அங்கே படுத்துக் கொள்வார்கள். மனைவிகளுக்கு சணவன் காலடியில் சுருண்டுகொள்ள இடம் கிடைத்து விடுகிறது. வீட்டின் ஒரே சயன அறை, ஏதோ ஒரு ஒழுங்கில், ஏதோ ஒரு தம்பதியருக்கு உத்தேசமாய் வாரத்தில் ஒருநாள் கிடைக்கும்.

இது ஆண்களின் ஏற்பாடு. இன்று ஏற்பாடுகள் உடைந்து விட்ட நாள். இருபது நாள் டூர் போய் விட்டு வெங்க





டேசன் இன்று தான் வந்திருக்கிறான். விடிந்ததும் சுப்பு வெளியூர் கிளம்ப வேண்டும். நாராயணன், நாற்பத்தி சொச்சம் நாள் 'சாமி சரணம்' என்று விரதம் முடித்தவன்.

மணி பத்து. சிவராமய்யர் தூங்கப் போயாயிற்று. மாடியில் கூரை வேயப்பட்ட இடத்தில் அவரும், மங்களம் பாட்டியும், வீட்டின் கடைக் குட்டிகளும் தூங்குவது வழக்கம். பெண்கள் அலம்பி விடப்பட்ட சமையலறையின், காய்ந்த இடங்களில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஆண்கள் வெறுமனே உட்கார்ந்து ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். வெங்கடேசன் மெதுவாய் எழுந்து சமையலறைக்குள் எட்டிப் பார்த்தான். 'வாசலுக்கு வா' என கண்ஜாடை காட்டித் திண்ணைக்குப் போனான். அவன் மனைவி நாய்க்கு சாதம் போடுகிற சாக்கில் திண்ணையில் அவனைச் சந்தித்தாள்.

''என்னடி?'' என்றான் வெங்கடேசன்.

''நீங்கதானே கூப்பிட்டேள்? என்னை என்னன்னு கேட்டா என்ன அர்த்தம்?''

''இன்னிக்கு உண்டா?''

''வேற வியவஸ்தை'', கன்னத்தில்இடித்தபடி உள்ளே போனாள்.

சமையலறையில் பெண்களின் சளசளவினூடே நாராயணன் தன் பெண்டாட்டியிடம் பெட்ரூம் விஷயத்தை விவாதித்திருந்தான். மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்க்கலாம் என அவன் மனைவி சொல்லியிருந்தாள்.

குப்பு தூங்கிப் போயிருந்தான். அவன் பெண்டாட்டி பிரசவத்துக்கு ஊருக்குப் போயிருந்தாள். முதல் குழந்தை ராமேஸ்வரன் ஒரு வயது. அரை பக்கெட் தண்ணீரில் குப்புற விழுந்து மூச்சுத் திணறி யாரும் கவனிக்காமல் மூன்று மாதம் முன்னால் செத்துப் போய் விட்டது.

ஆண்கள் அப்படியே உட்கார்ந்திருந்தார்கள். ரொம்ப நேரம் கழித்து வெங்கடேசன் பேச ஆரம்பித்தான்.

''அவன் பாரு நிம்மதியாத் தூங்கறான்''.

''யாரு?'' என்றான் நாராயணன்.

''குப்பு.''

''ஏன்?''

''அவன் பெண்டாட்டி ஊரிலே இல்லே.''

''அதனால.''

''பெட்ரூம் பிரச்னை அவனுக்குக் கிடையாது.''

கொஞ்ச நேரத்துக்கு யாருக்கும் பேசமுடியாமல் போய் விட்டது.

''நான் இருபது நாள் கழிச்சு ஊருக்கு இப்பத்தான் வந்தேன்'' என்றான் வெங்கடேசன்.

''எனக்கு விரதம் முடிஞ்சது அப்பாடான்னு இருக்கு'' என்றான் நாராயணன்.

''அதுக்கு?''

''இல்லே, சொன்னேன்.''

கொஞ்சம் தள்ளிப் படுத்திருந்த சுந்தாச்சு சொன்னான்.

''ஆக்சுவலா எனக்கு ஐம்பது நாளுக்கு மேலாயிடுத்து.''

''ஏன்?''

''ஐ ஹேவ் ரீசன்ஸ்.''

''எல்லாருக்கும்தான் ஏதாவது ரீசன் இருக்கும்'' என்றான் வெங்கடேசன்.

''அதனால?'' என்றான் சுந்தாச்சு.

''இல்லே, சொன்னேன்.''

''இந்த விஷயத்திலே பொதுவா வீட்டு மாப்பிள்ளைகளுக்கு அனுசரிச்சுப் போறதுதான் வழக்கம்.''

''நாலு பசங்களுக்குப் பிறகும் என்ன புது மாப்பிள்ளையா?'' என்றான் வெங்கடேசன்.

''ஏன்? எனக்கென்ன குறைச்சல்?''

''அதெல்லாம் தெரியாது. எனக்கு ரூம் வேணும்'' என்றான் வெங்கடேசன்.

''ஏண்டா அலையறே?''

''எவண்டா அலையறது? நீயா, நானு?''

அந்த க்ஷணம் உறவுகள் மறக்கப்பட்டது. மாப்பிள்ளை சுந்தாச்சுவும், பையன் வெங்கடேசனும் கட்டிப் புரண்டு சண்டை போட்டார்கள். சப்தத்தில் மிரண்டு குழந்தைகள் அலற ஆரம்பித்தன. ஜெபம் சொல்லிக் கொண்டிருந்த மங்களம் பாட்டி, மாலை விழுந்தது தெரியாமல், அகலக் கண்களுடன் வாயையும் பிளந்தவளாய் சண்டையைப் பார்த்தாள். பெண்கள் கையாலோ, புடவைத் தலைப்பாலோ வாயை மறைத்தபடி வெவ்வேறு ஸ்தாயிகளில் கத்திக் கொண்டிருந்தார்கள்.

''என்னடா சப்தம் அங்கே?'' மாடியில் சப்தம் கேட்டுச் சிவராமய்யர் கீழே இறங்கி வந்திருந்தார்.

யாரும் பதில் சொல்லவில்லை.

''தூங்கலே?''

''தோ இப்பத்தான் தூங்கப் போறு'' என்றாள் மங்களம் பாட்டி.

''மணி என்ன?''

பட்டுத் துணிகளில் இருந்து கறைகளை அகற்றுவதற்கு இரண்டு அவுன்ஸ் எலுமிச்சம் பழச் சாற்றுடன், ஒரு அவுன்ஸ் கற்பூரத் தைலத்தைக் கலந்து கறை மீது தடவி, நன்றாகக் கசக்கி, தண்ணீரில் அலசி உலர்த்தவும்.

படிகாரத்தைப் பொடித்து, தெள்ளுப்பூச்சி வாசம் செய்யும் சந்துகளில் தூவலாம். படிகாரம் தெள்ளுப்பூச்சிகளின் ஜன்ம விரோதி. சிறிதளவு 'அயோனியா' வைத்தண்ணீரில்கரைத்து அவசியமான இடங்களில் தெளிப்பதன் மூலம் கொசுக்கடி உபத்திரவத்திலிருந்து ஓரளவு விடுதலை பெறலாம்.

தகவல்: ஆவுடை. ஹரி.






பண்டிகைகள் கொண்டாட...
பந்தியில் பரிமாறிட...
நண்பர்கள் அன்பர்களுக்கு நல்விருந்து அளித்திட
இன்ப நினைவூட்டிட இனிய சுவை சேர்த்திட
அகர்வால் பவன் இனிப்புகளே!
அகர்வால் பவன்
128, கோவிந்தப்ப
நாயக்கன் தெரு.
சென்னை-600 001.
போன் : 21219, 31349.

''பதினொன்று.''

''என்ன சப்தம்?''

''யாரு பெட்ரூம்லே படுத்துக்கறதுன்னு சண்டை.''

''யாருக்கு, யாரோ?''

பயந்தபடி பாட்டி சொன்னாள்.

''மாப்பிள்ளையோட யா சண்டை போட்டான்?''

''ஆமாம்.''

''வெங்கடே, வாடா இங்கே.''

அந்த நாற்பத்தி ஐந்து வயசுப் பையன் வந்தான்.

''அறிவயறியே. வெட்கமாயில்லே?''

மாப்பிள்ளை சுந்தாச்சுவுக்கு ரொம்பவும் திருப்தியாய் இருந்தது. எந்த வார்த்தைக்குச் சண்டைச் வந்ததோ அந்த வார்த்தையை சிவராமய்யரும் சொல்லியாகி விட்டது.

வெங்கடேசன் ஆயுசில் அவ்வளவு வெட்கப் பட்டவன் இல்லை. சிவராமய்யர் அவனையே கொஞ்சம் நேரம் பார்த்துக் கொண்டிருந் தார்.

''பெட்ரூம்தானேடா வேணும்?''

வெங்கடேசன் பதிலொன்றும் பேசவில்லை.

''சரி, பெட்ரூமுக்குப் போடா'' என்றார் சிவராமய்யர். அவன் உள்ளே போனதும் தனியாய் அவனைப் பூட்டி இடுப்பில் சாவியை செருகிக் கொண்டு, சிவராமய்யர் மாடிக்குக் கிளம்பினார். போகும் முன் சுந்தாச்சுவைக் கூப்பிட்டு, ''ஸாரி மாப் பிள்ளே, குட்நைட்'' என்றார்.

கூடத்தில் தனியே படுத்திருந்த வெங்க டேசன் மனைவி அன்றைக்கு ராத்திரி அவ்வப் போது விசித்து அழுதது மற்றவர்கள் தூங்கக் கொஞ்சம் இடைஞ்சலாய் இருந்தது.

அத்தனை பேர் வசிக்கிற அளவுக்கு அது ஒன்றும் பெரிய வீடில்லை. ஒரு வராந்தா, நீளமான ஹால், பெட் ரூம், சமையலறை இவ்வளவு தான். வேண்டாத பெண்டாட்டியாய் வீட்டி லிருந்து தள்ளி வைக்கப்பட்ட கழிப் பிடம். மாடியில் கூரை வேயப்பட்ட அறை. இன்று காலை செத்துப் போன சிவராமய்யர் இங்கே தான் வசித்து வந்தார்.

கோலம் போடப்பட்டிருந்தது. விஷயம் வெளி வருமுன்னரே போடப்பட்ட கோலம். சிவராமய்யருக்கு நான்கு மணிக்குள்ளாகவே வாசல் தெளிக்கப்பட்டாக வேண்டும். உடன் கோலம் போட்டாக வேண்டும். பெரிய கோலமாகவும் இருத்தல் அவசியம். தூக்கம் போதாமல் இடுங்கிய கண்களுடன், மாட்டுப் பெண்கள் விறகை பாய்லரில் செருகி, மேலும் கண்கள் இடுங்கவேண்டும்.

இன்று வெந்நீர் போடுவது நாரா யணன் மனைவியின் முறை. அவள் மூன்றரை மணிக்கு எழுந்து கொண்டாள். இதற்கு அலாரம் எதையும் அவள் நம்புவதில்லை. தூங்கப் போகும் முன் சீக்கிரம் எழுந்திருக்க வேண்டும் என்று நினைப்பாள். கூடவே சிவ ராமய்யரையும் ஒரு தடவை நினைத்துக் கொள்வாள். விழிப்பு காலையில் தானே



வரும். நான்கு மணிக்குள் வாசல் தெளித்துக் கோலம் போட்டாள். தூக்கம் முழுவது மாகக் கலையவில்லை. பாய்லர் அருகில் சாய்ந்து தூங்கிப் போனாள்.

நாராயணன், மனைவி கைகளை விலக்கிக் கொண்டு எழுந்த போது விழித்துக் கொண் டான். அப்புறம் தூக்கம் வரவில்லை. அரை மயக்கத்தில் வாசல் தெளிக்கிற சப்தம் கேட்டது. பாய்லரிடமிருந்து சப்தம் வரு மெனக் கணக்குப் போட்டான். ஆனால் சப்தம் ஏதும் வரவில்லை. நாராயணன் படுக்கையறைக்குள் பார்வையை ஒருதரம் சுழலவிட்டான். அருவருப்பாயிருந்தது. மொத்தம் முப்பது பேருக்கு மேல் அந்த ஒரு அறையில் தூங்கிக் கொண்டிருந் தார்கள்.

பாய்லரிடமிருந்து சப்தத்தைக் காணோம். நாராயணன் எழுந்து கொண்டான். அவன் வேஷ்டியின் நுனி ஒரு குழந்தையின் அடியில் மாட்டிக் கொண்டிருந்தது. கொஞ்சம் தள்ளி மூத்தவன் தூங்கிக் கொண்டிருந்தான். அவன் வேஷ்டி நழுவிக் கீழே கிடந்தது. முழங்கால் வரை டிராயர் போடுவது அந்த வீட்டில் அவசியமாய்ப் போய் விட் டது. நாராயணன் மூத்தவன் வேஷ்டியை அணிந்து கொண்டான். இன்று சம்பளம். கையிலேயே இரண்டாயிரம் வரும். தனி வீடாய்ப் பார்த்துக் கொண்டால் சௌகர் யம். சிவராமய்யர் இருக்கும் வரை முடி யாது. சம்பளத்தை நேரே கொண்டு வந்து நமஸ்காரம் பண்ணிக் கொடுக்க வேண்டும். நகுல, சகாதேவன் மாதிரி வீட்டுச் செலவுக் குப் பணம் கொடுப்பதில் முக்கியமில்லாமல் போய் விட்ட குப்புவின், கப்புவின் குடும் பங்களுக்கும் சேர்த்து நாராயணன் சம்பாதித் துக் கொண்டிருக்கிறான். அவன் எழுந்ததும், வேஷ்டி அணிந்ததும், யாரையும் மிதிக்காமல் இருட்டில் வெளியே வந்ததும், வெளியே பிளந்து வைத்த விறகு தீர்ந்து போயிருந்த தும், புதியதாய் விறகு பிளக்க நாராயணன் கோடாலி தேடியதும் தெரியாமல் ஹாலில் முப்பது பேருக்கும் மேல் இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

'சொத்' என்று காலைப் பேப்பர் வீடுகளில் விழத் தொடங்கியிருந்த நேரம். ஜன்னல் கம்பிகளிடையில் முயல் குட்டிகளைத்தொத்த விட்டாற்போல் பாலிதீன் பால் பாக்கெட் டுகள் தொங்கிக் கொண்டிருந்தன.

''என்னடி?'' என்றான் நாராயணன். பதி லுக்கு அவன் கொட்டாவி ஒன்றை விட் டான்.

''விறகு ரெடி. சீக்கிரம் வெந்நீர் போடு. அப்பாவுக்குக் கோபம் வரும்.''

''வேற என்ன வரும் உங்கப்பாவுக்கு? அதிர்ஷ்டம். உங்களை மாதிரிப் பிள்ளைகளைப் பெத்திருக்கார். வீட்டையே வசியம்பண்ணி வைச்சிருக்கார். நடக்கறது. அத்தனை பையன்களும் சம்பாதிக்கறேளே, எலெக்டிரிக் பாய்லர் வாங்கக் கூடாதோ? கூடாது. எலெக்டிரிக் பில் கட்டணுமே. மாட்டுப்



பெண்களை ஏன்ற சோறு போட்டாப் போதுமே.''

''சப்தம் போட்டுப் பேசாதேடி. யார் காதுலேயாவது விழுந்து தொலைக்கப் போறது.''

''விழட்டுமே.''

நாராயணன் செயலற்று நின்றான். அவள் மெதுவாய் பால் பாக்கெட்டுகளை எடுத்து வந்தாள். அவன் பிடிப்பிடியாய் மெஷினில் காப்பிக் கொட்டையைப் போட அவன் அரைத்துக் கொடுத்தான். மெஷினை ரொம்ப வருஷங்கள் சுற்றியதில் நாராயணனின் புஜத்தசைகள் வலுவடைந்திருந்தன. காப்பிப் பொடியின் வாசனை காலை நேரத்தோடு பொருந்திப் போயிற்று. மூத்தவன் பல் தேய்க்க வந்தான். நாராயணன் வேஷ்டியை இப்போது அவன் கட்டியிருந்தான். டூத்பிரஷ் அவன் வாய்க்குள் புகுந்து வெளிப்பட்ட விரைவில் சங்கீதம் கேட்டது. மூத்தவனின் மோர்னிங்.

''லேட்டாகுமா காப்பி?''

''இப்பத்தான் அரைச்சேன். கொஞ்சம் தூங்கிப் போயிட்டா.''

''ப்ச்.''

''அப்பாகிட்டே சொல்லி கெய்ஸர் வாங்கணும். வெந்நீர் போடறது கஷ்டமாயிருக்காம்.''


''இவ கூடச் சொன்னா. யாரு போய்ச் சொல்றது?''

''நீ!''

''சரிதான்!'' வாயைக் கொப்பளித்துத் துப்பினான். பிரஷ்ஷையே உபயோகித்து நாக்கை வழித்தான். உள்ளே கல்யாணங்களில் மட்டுமே காணக் கிடைக்கின்ற அளவில் பெரிய பித்தளை ஃபில்டரில் சொட்டுச் சொட்டாய் டிகாக்ஷன் இறங்கிக் கொண்டிருந்தது. கிங் சைஸ் ஃபில்டர்.

''பௌடர் காப்பியா வாங்கினா ஆச்சு. எதுக்கு தினம் வறுக்கணும். அரைக்கணும்? பிராணன் போறது ஒரு சுத்துச் சுத்தறதுக்குள்ளே. உனக்கும் நாப்பத்தெட்டு வயசாறதே'' என்றான் நாராயணன்.

காலி ஃப்ளாவரை வேகவைக்கும் போது ஒரு துண்டம் எலுமிச்சை தோலைப் போட்டு வைத்தால் வெள்ளை நிறம் மாறாமல் இருக்கும்.



''நாற்பத்தொன்பது.''

நாராயணன் மனைவி காப்பி கொண்டு வந்தாள். இப்போது வெங்கடேசன் எழுந்து வந்தான்.

''நீ எப்படிடா வெளியே வந்தே?''

''அம்மா, அப்பாக்கிட்டே சொல்லிச் சாவி வாங்கிண்டு வந்து திறந்து விட்டா. பன்னிரண்டு மணி இருக்கும்'' என்றான் வெங்கடேசன். மூத்தவனுக்கு அவனைப் பார்க்கப் பாவமாய் இருந்தது.

காப்பியை எடுத்துக் கொண்டு மாடிக்குப் போன நாராயணன் மனைவி மூன்றாம் நிமிஷம் கீழே வந்தாள். பத்து நிமிஷத்தில் அழுகுரல் கேட்டு அந்தத் தெருவே விழித்துக் கொண்டது.

''என்ன சார்?''

''எங்க அப்பா, சிவராமய்யர் போயிட்டார். அம்மா தூங்கிண்டிருந்தாளாம். அவதலை மாட்டிலே காப்பியை வெச்சுட்டு என் மனைவி எழுப்பியிருக்கா. அம்மா எழுந்துண்டு அப்பாவை எழுப்பப் பார்த்திருக்கா. எழுந்துக்கல்லே. தூக்கத்திலேயே பிராணன் போயிருக்கு.''

''நல்ல ஜென்மம்.''

இதற்குள் சாஸ்திரிகள் வந்திருந்தார். ஆஸ்தான சாஸ்திரிகள். முப்பத்தி ஐந்து வருஷமாய் அவர்தான்.


உள்ளே பெண்கள் பல் தெரிய விகாரமாய் அழுது கொண்டிருந்தார்கள். அழுகை ஓய்ந்த போதெல்லாம் யாரேனும் புதியதாய் வந்து மீண்டும் ஒரு புதிய உற்சாகத்துடன் அழுகை ஆரம்பித்தது.

பெரியவர் உடம்பைக் குளிப்பாட்டும் போது தான் கண்டுபிடித்தார்கள். சிவராமய்யரின் கழுத்தைச் சுற்றி யாரோ கயிற்றை இறுக்கிக் கொலை செய்த அடையாளம் இருந்தது.

இன்ஸ்பெக்டர் சக்திவேல் முகத்தைத் துடைத்துக் கொண்டார். அவர் சர்வீஸில் நிறையக் கொலைகளைப் பார்த்தாயிற்று. கொலை அபூர்வம்! அதுவும் ஒரு தாத்தா. தாத்தாக்கள் அன்பின் வடிவமானவர்கள். இன்ஸ்பெக்டருக்கும் ஒரு தாத்தா இருந்தார். ஏழாவது படிக்கும் போது செத்துப் போய் விட்டார். கிராமத்தில் இருக்கும் போது சட்டையே போட்டு அறியாதவர். மடியில் பேரனை உட்கார்த்தி வைத்துக் கொண்டு மணிக்கணக்கில் வேர்க்கடலை உரித்துக் கொடுப்பார். கதை சொல்லுவார்.

சக்திவேலுக்குச் சிவராமய்யர் பேரன் கிகவின் மேல் நிறைய சந்தேகம் இருந்தது. கொலை நடந்த அன்று, பிரேதம் காட்டுக்குப் போகும் போது யாரோ கிகவிடம் அவன் பூணூல் எங்கே என்று கேட்டார்கள். 'நான் வேஷங்களில் நம்பிக்கையற்றவன்' என்பதாக அவன் கூறியது சக்திவேலுக்குத் தெரியும். நெய்ப்பந்தம் பிடிக்கும் போது கூட அவன் பூணூல் அணியவில்லை. எப்போதாவது கண்ணுக்குக் கண் பார்க்க நேருகிற சந்தர்ப்பங்களில் கிக. சக்திவேலைத் திமி

Money *at Home* Melts



But it Multiplies at KCUB

Money at home just melts away. You don't know how! Avoid unnecessary expenses. Save the money at KCUB and see it grows into a real wealth.

THE KUMBAKONAM CITY UNION BANK LTD

REGISTERED OFFICE KUMBAKONAM 612 001

FOR PROTECTION AND GROWTH



ராகப் பார்க்கிறான் என்று கூடத் தோன்றுகிறது. ஆனால் சக்திவேலுக்கு விசு வயதில் ஒரு பையன் இருக்கிறான். அவன் பார்வையும் கூட அப்படித்தான் இருக்கிறது.

சக்திவேல் மங்களம் பாட்டியை விசாரணை செய்யச் சொல்லியனுப்பினார். அவள் இன்னும் வரவில்லை. வீடு சவச் சடங்குகளும் போலீஸ் சடங்குகளுமாக நாறிக் கொண்டிருந்தது. பத்து நாளுக்கு மேலாகி விட்டது. இன்னமும் துப்பு ஏதும் கிடைக்கவில்லை. அத்தனை பேர் புழங்குகிற இடத்தில் ரேகைகளுக்கு அலைந்தது பிரயோஜனமில்லாமல் போய் விட்டது. உடம்பு கழுவப்பட்டு விட்டதில், சிவராமய்யர் கழுத்திலும் தெளிவாக ஏதும் தெரியவில்லை. குடும்பம், செல்வாக்கு உடைய குடும்பமாகவேறு இருக்கிறது. பல எண்ணங்களின் ஊடே வீட்டின் வெளியே விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர் சக்திவேல்.

பாட்டி மெதுவாய் வந்தாள். அவள் விழுந்து விடாமல் இருக்க ஒரு மருமகள் தாங்கிப் பிடித்து வந்தாள்.

''நமஸ்காரம்மா'' என்றார் சக்திவேல். ''பெரியவர் தவறிப் போயிட்ட துக்கத்திலே இருப்பீங்க. தொந்தரவு செய்ய வேண்டியிருக்கு. மன்னிச்சுக்குங்க. சமீபத்திலே பெரியவரோட வீட்டிலே யாராவது சண்டை போட்டாங்களா?''

''நிறைய பேர் போட்டா. யாரோடெல்லாம் அவர் சண்டை போடல்லே. வயத்துப் பேரன் தான் பாக்கி. ஆனா வீட்டுக்குள் நடக்கறதுக்கெல்லாம் சண்டைன்னு பேரு? சண்டைன்னு போன மாசத்துலே என்னோடேயே போட்டிருக்கார். பையன்களை அதிதமாக் கண்டிச்சிருக்கார். அதுகளும் வரவர எதுத்துக்கறதுகள். சண்டைதான், சமாதானம்தான், வண்டி ஓடிண்டிருந்துது.''

''சாதாரண குடும்பச் சண்டை இல்லேம்மா. பெரிசா சொல்ற அளவுக்கு?''

''தகப்பனாரையோ, தாத்தாவையோ கொல்ற அளவுக்குன்னு சண்டை ஏதும் உண்டா? எனக்குத் தெரிஞ்ச எதுவும் கிடையாது. ஆனா பிள்ளைகளுக்குச் சேர்ந்து இருக்கறது பிடிக்கலே. எலி வளென்னாலும், தனி வளென்னு பார்த்துண்டு போயிடணும்னு துடிச்சுண்டு இருந்துதுகள். வந்த பெண்களுக்குள் ஒத்துமை இல்லே. நல்ல குழந்தைகள்தான்.''

''வேற யாருக்கானும் காரணம் உண்டா? பிள்ளைங்க யாராவது அப்பாவோட சண்டை போட்டாங்களா?'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''இந்த வருஷம் தீபாவளிச் சண்டை ஒண்ணு சொல்றேன். கேட்டுக்கோங்கோ. சிரிப்பேள், இப்படியும் மனுஷா உண்டான்னு. ஏகப்பட்ட செலவு. அத்தனை பேருக்கும் துணி, பட்டாசுன்னு. இவர் 'ஆயி தீவாளி, உங்கப்பன் திவாளி'ன்னு பாடிண்டு உக்காந்துட்டார். வாயாடி சங்கரன்னு ஒருத்தன், உங்களுக்குத் தெரியாது அவனை. அவன் வந்து கனகாரியமா சொன்னான். மூத்தவன் பல்லாவரம் பக்கத்துலே சீப்பா வர்றதுன்னு ரெண்டு கிரௌண்ட் வாங்கிப் போட்டிருக்கான். வீட்டில் யார்கிட்டேயும் சொல்லலே. முழுச்சம்பளத்தையும் மொத்தமா எங்கிட்ட கொடுத்துண்டிருக்கான்னு நாங்க நினைச்சுண்டிருக்கோம். ரெண்டு கிரௌண்ட் வாங்கிப் போட்டிருக்கான். இவருக்குக் கோபம்னு நாள்னு கிடையாது. கிழமைன்னு கிடையாது. அத்தனை பேர் முன்னாடியில் நிக்க வெச்சு மானம் போகிற மாதிரி திட்டிட்டார். ஆச்சு அம்பது வயசு ஆகப்போறது அவனுக்கும். திட்டு கேக்கற வயசா? ஆனா கோபத்தையெல்லாம் முழுங்கிண்டுட்டான். இப்படி முழுங்கின கோபமெல்லாம் யார் கையிலே கயிறு கொடுத்ததோ'' என்றுபடிப் படியாய்க் குரல் உடைந்து அழ ஆரம்பித்தாள்.

சக்திவேலுக்குச் சங்கடமாயிருந்தது. வழக்கமாய் விசாரணைகளில் கண்டிப்பாய் இருந்துதான் அவருக்குப் பழக்கம். ஆனால் இந்தக் கொலை அவருக்குப் புரியவே இல்லை. இந்த வீட்டில் விசுவைத் தவிர யாரிடமும் அவரால் கண்டிப்புடன் விசாரணை செய்ய முடியாது. பிள்ளைகள் ஒவ்வொன்றும் அப்பாவி என்று பார்க்கும் போதே தெரிகிறது. ஆனால் அப்பாவிகள் கொலை செய்யக் கூடியவர்கள். கோழைத்தனமே கூட சமயங்களில் கொலை வெறியைத் தூண்டி விட்டு விடுகிறது.

''இதோ பாருங்கம்மா. கொல்லணும்னு காரணங்கள் இருக்கறவங்க தான் கொல்லப் போறாங்க. வெளி ஆளு யார்கிட்டேயாவது பெரியவரு சண்டை போட்டாருங்களா?''

''வெளி மனுஷா யாரும் அவரைப் பாக்கறது கிடையாது. யாராவது பண்டிகை நாளிலே நமஸ்காரம் பண்ண வர்றதோட சரி. அதைத் தவிர வெளி மனுஷான்னு யாரும் வர்றது கிடையாது. மளிகைக்காரன் வருவான். அரிசிக்காரர் வருவார். அவருக்கு ஒரு கெட்ட பழக்கம். யாருக்கும் அழ வைக்காமல் காசு தர மாட்டார். அதுவும் மளிகைக்காரன் வியாபாரத்தில் பாதி இந்த வீட்டுது. கொடுத்த ரூபாய் காணாது. அய்யரே. மாசம் ஆயிரம் முடங்கிச்சுன்னா நான் வியாபாரம் பண்றது எப்படி? முழுசையும் கொடுத்துடுங்க'ன்னு சொல்லுவான். அவனோடயும் மல்லுக்கு நிற்பார்.''

''அந்த மாதிரி சமீபத்திலே ஏதாவது சண்டை நடந்ததுங்களா?''

''நீங்கதான் சண்டை, சண்டைங்கறேள். வீடுன்னா இது மாதிரி ஆயிரம் இருக்கும். இதுக்கெல்லாம் யாரும் கயத்தை எடுத்துண்டு எங்கேடா கழுத்துன்னு அலைய மாட்டா. இனிமே இந்தாத்திலே என் நிலைமையை யோசிச்சுப் பாருங்கோ.''

''சொல்லுங்கம்மா.''

''இனிமேலும் நான் இந்த வீட்டிலே இருந்தாகணும். மனசுக்குத் தெரியும். என் குடும்பத்திலே ஒருத்தன் கொலைகாரன். நீங்க கண்டுபிடிக்கறேள், இல்லே. யாரு பண்ணினதுன்னு எனக்குத் தெரியவேண்



டாம். சேர்ந்து இருக்கறதுலே ஆயிரம் கஷ்டம் உண்டுதான். ஆனா அதுக்கு இதுவா வழி? நான் தனியா வீடு பாத்துண்டு போறேன்னு ஆம்பிளையாட்டம் யாருக்கும் சொல்ல முடியாமல் போயிடுத்து. பொட்டையாட்டம் கொலை பண்ணத் தோணியிருக்கு. நீங்க யாருன்னு கண்டுபிடிச்சுட்டா ஒரு பின்னே செத்தொழிஞ்சதுன்னு நான் தலை முழுகிடுவேன்.'' அழுதாள் மங்களம்.

மூத்தவன் பெண்டாட்டி காப்பிகொண்டு வந்து கொடுத்தாள். அது குடித்து முடிகிற வரைக்கும் யாரும் பேசவில்லை.

''மருமகளுங்களுக்குள்ளே எப்படிம்மா? அவங்களாலே பிள்ளைகளுக்குச் சண்டை வருமா?''

''அப்படியும் உண்டுதான். அதுகள் நல்ல குழந்தைகள். ஆனால் 'ஆம்படையான் அசடு, பயந்தவன், எல்லோருமாச் சேர்ந்து அவனை ஏமாத்திடுவா'ங்கற அபிப்பிராயம் எல்லா மாட்டுப் பெண்களுக்கும் உண்டு.''

''அவங்களுக்குள்ளே சண்டை போட்டுப் பாங்களா?''

''நிறைய. அல்ப புத்திதான். வீட்டுக்குப் புழங்கறது நீ கொண்டு வந்த பாத்திரமா, நான் கொண்டு வந்த பாத்திரமாங்கற மாதிரி.''

''உங்க பேரன் விசு எப்படிம்மா?''

''அவனுக்கென்ன குழந்தை.''

''அவருக்கு வயசு இருபத்திரண்டு.''

''இருக்கட்டுமே. குழந்தைதான் அவன். அஞ்சு வயசு வரைக்கும் நான் தான் குளிப்பாட்டி விட்டது. நல்ல குழந்தை. இன்னமும் தனக்கு நல்ல வார்த்தை எது இட்டு எதுன்னு தெரியாது.''

''பெரியவரோட விசுவுக்குச் சண்டை ஏதாச்சும் உண்டுங்களா?''

''அதான் சொல்லியாச்சே. சண்டைன்னு ஒண்ணும் கிடையாது. மனஸ்தாபம் நிறைய உண்டு. விசுவுக்கு வர்ற சினிமா அத்தனையும் பார்த்தாகணும். அப்பத்தான் சாபல்யம். காசு கொடு, கொடுன்னு அரிப்பான். அதுலே மனக்கஷ்டம் உண்டு. எல்லோர் முன்னாடியும் தாத்தா கண்டிக்கறது உண்டு. இதுக்கு ரோஷம் ஜாஸ்தி. எங்கிட்டே சொல்லுவான். என்னைத் தாத்தா எத்தனை வேணும்னாலும் திட்டட்டும் பாட்டி. தனியா கூப்பிட்டுத் திட்டச் சொல்லுங்கோ. எல்லார் முன்னாடியும்னா வெட்கம் தாங்கலை பாட்டின்னு அழுவான். இந்த வீட்டுக் குழந்தைகளை யார் யார் கண்டிக்கலாம்னு வியவஸ்தை கிடையாது.''

''அப்படி சமீபத்துல ஏதாச்சும் உண்டுங்களா?''

''சமீபம்னா போன ஒரு மாசத்திலே ஒண்ணும் கிடையாது.''

இப்போது மாட்டுப் பெண்களில் இருவர் பாட்டியின் காலடியில் உட்கார்ந்துகொண்டார்கள். பாட்டியோ, இன்ஸ்பெக்டரோ அதைப் பொருட்படுத்தவில்லை.

''உங்களுக்கும் பெரியவருக்கும் எப்படியம்மா?''

''நாங்க ஒத்துமையா இருந்தோம் அவர் வள்ளுவர் நான் வாசுகின்னு சொல்லிட முடியாது. என் வழியே வேறே. அவர் கோபமாயிருக்கும் போது வாய்க்குப் பூட்டு மாட்டிண்டுடுவேன். அவர் அடங்ினதும் பேச ஆரம்பிப்பேன். எங்கள் சண்டைகள்ளே பாதி நான் யாருக்காவது பரிஞ்சு பேசறதுலே ஜனிக்கும். பிள்ளைதானே பேரன் தானேன்னு ஏதாவது சொல்லுவேன். நான் சொல்லச் சொல்ல அவருக்கு உடுக்கடிக்கிற மாதிரி ருத்ரம் ஏறும். ஆட்டம் தான். கூப்பாடுதான்.'' மங்களம் பாட்டி இதைச் சொல்லும் போது அவளுக்கு லேசாய்ச் சிரிப்பு வந்தது. மருமகள்களும் கூடக் கொஞ்சம் சிரித்துக் கொண்டார்கள்.


''ஒருநாள் சமையல் நல்லாயில்லேன்னு கோபம். குழந்தைகள் உடம்பு சுகமில்லேன்னா நான் சரியாக் கவனிக்கலேம்பார். ஒருத்தியா எத்தனை பேரன், பேத்தியைப் பாத்துக்க முடியும்? தொட்டித் தண்ணியிலே விளையாடும். ஜலதோஷம்னு

வெள்ளிப் பாத்திரங்களைச் சீராக வழங்கும் பெற்றோர்களே!

சற்று யோசியுங்கள்... நீங்கள் ஆசையுடன் ஏகமாய் செலவு செய்து வாங்கும் பாத்திரங்கள் வங்கியில் வைத்துப் பூட்டத்தான் பயன்படும்; அதற்குப் பதிலாக உங்கள் பெண்ணுக்கு உபயோகமான கருவிகளை வாங்கிக் கொடுங்கள். தையல் தெரிந்தால் தையல் மிஷின் வாங்கலாம்.

இவை தவிர ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயம் இருக்கவேண்டிய சாதனங்கள் உண்டு. குறிப்பாகத் தனிக் குடித்தனம் நடத்தப் போகும் இளம் தம்பதியர்களிடம் இந்த 'டூல் கிட்' இருந்தால் நலம். டூல் கிட்டில் இருக்க வேண்டியவை:

சுத்தியல், ஆணிகள், திருகாணிகள், ஸ்பானர், ரெஞ்ச், கட்டிங் பிளையர், ஸ்க்ரூ டிரைவர், குழாய் வாஷர்கள், டெஸ்டர், பல்புகள், செப்பு வயர்–ஃப்யூஸ் மாற்ற, சணல், டுவைன், கத்தரிக்கோல், செல்லோ டேப் மற்றும் இன்ஸுலேஷன் டேப்.



பத்து நாள் மூக்கொழுக நிற்கும். அம்மாக்காரி வேலையா இருந்திருப்பா. தனியாய்க் குழந்தைகளைக் கவனிக்கக்கன்னு யாருக்கும் நேரம் கிடையாது. ராத்திரி கறிவேண்டாம். அப்பளம் சுட்டாப் போறும்னாலும் சுட்டு அப்பளம் சுடணும். அப்படி ஒரு வேலை இந்த வீட்டிலே. மூணு மாசம் முன்னாடி என் பையன் குப்புவோட பின்னே, பத்து வருஷம் கழிச்சு ராமேஸ்வரம் போய்ப் பிறந்த குழந்தை. பேரே ராமேஸ்வரன்னு வைச்சிருந்தோம் - தண்ணி ரொப்பி வைச்ச பிளாஸ்டிக் பக்கெட்டுல குப்புற விழுந்து நேத்து. யாரும் கவனிக்கல்லே, மூச்சுத் திணறிச் செத்துப் போச்சு. இவர் சொல்லுவார் நீதான் கவனிக்கல்லே நீதான் கொன்னுட்டேன்னு. அதையும் கேட்டுக்க வேண்டியதுதான். வெட்கம் கெட்ட பொம்மனாட்டி ஜென்மமாச்சே!'' பாட்டிக்கு இப்போது பெரியதாய் அழுகை வந்து விட்டது. நினைக்கக் கூடாத பல விஷயங்களை அவள் நினைத்து விட்டாள்.

''நான் வர்றேனுங்கம்மா'' என்று இன்ஸ்பெக்டர் சக்திவேல் விடைபெற்றார்.

அந்த வீட்டுக்கு அரிசி சப்ளை செய்கிற அபிராமரெட்டியின் சொந்த ஊர் நெல்லூர். ஆனால் வியாபாரம் எல்லாம் மெட்ராசில் தான். மாதத்தின் முதல் பதினைந்து நாட்கள் அபிராமரெட்டி சென்னையில் இருப்பார். வியாபாரத்தையும் வசூல் விவகாரங்களையும் முடித்துக் கொள்வார். மீதி நாட்களில் நெல்லூரில் வேறு வியாபாரம். சிவராமய்யர் கொலைக்கு முன்பாக ஒரு கடிதத்தை எழுதி அபிராம ரெட்டியிடம் கொடுத்திருந்தார்.

அநேக ஆசீர்வாதங்கள். இந்தக் கடிதம் உங்கள் கைக்கு அரிசிக்காரர் அபிராம ரெட்டி மூலம் வரும். ரெட்டியார் நம்பிக்கையானவர். நம் குடும்பத்திற்கு நல்லதையே நினைக்கிறவர். அவரிடம் நான் சொல்லியிருக்கிறபடி இந்தக் கடிதம் படிக்கப் படுகிற போது நான் இருக்க மாட்டேன்.

மங்களம் நிறைய விஷயங்களை என்னிடமிருந்து மறைக்கிறவள் தான். ஆனால் என்னிடம் அவள் யாருக்கும் சேர்ந்து இருக்கிறது பிடிக்கவில்லை என்று சொன்னாள். எனக்குத் தெரியாமல் வீட்டில் நடக்கிற சண்டைகளைப் பற்றிச் சொன்னாள். என் கண்டிப்பு யாருக்கும் பிடிக்கவில்லை என்றும் சொன்னாள்.

நான் விவரங்களுக்குள் போகப் போவதில்லை. இத்தனை பேர் சேர்ந்து இருக்கிற இடத்தில் யாராவது ஒருத்தர் கண்டிப்பாய் இருக்க வேண்டியது அவசியம். கூட்டுக் குடும்பம் என்கிறது எட்டுக் குதிரை பூட்டின வண்டியாட்டம். ஓட்டுகிறவனுக்குச் சூரியனோட உக்கிரம் வேணும். எனக்கு அத்தனை சாத்தியம் இல்லை அத்தனை உக்கிரம் நம் வீட்டில் யாருக்கும் தாங்காது. அதனால் தான் கண்டிப்பும் கோபமும் இந்த அளவில்.

மொத்தத்தில் சேர்ந்து இருக்கிறது ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது.

ஒருத்தன் நிறைய சம்பாதிக்கிறான். இன்னொருத்தனுக்கு மட்டுச் சம்பளம். ஆனால் எல்லாரும் என் குழந்தைகள். குப்பு சுப்பு படிக்கிற காலத்தில் நான் ரிடையராகி விட்டேன். அதனால் சரியாய் முன்னுக்குக் கொண்டு வர முடியாமல் போய் விட்டது. நான் நிறைய சம்பாதிக்கிறேன். என் தம்பியோடு ஏன் பகிர்ந்துக்கணும் என்கிற கேள்வி யாருக்கோ வந்திருக்கிறது. தானாக வந்ததோ யாரும் சொல்லிக் கொடுத்ததோ எனக்குத் தெரியாது. மூத்தவனுக்கும் கடைசிப் பையனுக்கும் வயசு வித்தியாசம் பார்த்தால் மூத்தவன் தகப்பன் மாதிரி. அப்படித்தான் நினைக்கணும். அப்படித்தான் நடக்கணும். சுப்புவும் குப்புவும் எனக்குப் பிறகு இந்த வீட்டை எடுத்துக்க வேண்டியது. வீட்டுச் செலவுக்கென்று கொடுத்த பணத்தில் கணிசமாய்ச் சேர்த்து வைத்திருக்கிறேன். அதைச் சமமாய் என் பையன்கள் எடுத்துக் கொள்ள வேண்டியது. என் நண்பர் வக்கீல் ஹனுமந்தராவ் எல்லா விஷயங்களையும் நான் சொல்லியிருக்கிறபடி பார்த்துக் கொள்வார்.



உங்களுக்கெல்லாம் இன்னொரு விஷயத்தையும் சொல்லப் போகிறேன். நவம்பர் பதினெட்டாம் தேதி நான் தூங்கிக் கொண்டிருந்த போது ஒரு விஷயம் நடந்தது. நடந்தது மங்களத்துக்குக் கூடத் தெரியாது. நான் கண்ணை மூடிப் படுத்திண்டிருக்கேன். விடியற்காலை மணி நாலு நாலரையிருக்கும். இருட்டிலே யாரோ என் முகத்து மேலே தலைகாணியை வைச்சு அமுக்கினா. பேரக் குழந்தைதான் விளையாடறதுன்னு சந்தோஷமா முழிச்சிண்டா மூச்சு விட முடியாம அமுக்கிண்டிருந்தது. யாருன்னு என்னாலப் பார்க்க முடியாமப் போயிடுத்து. நான்கத்தியிருக்கேன், தள்ளப் பார்த்திருக்கேன். என் கிட்டே பலம் இல்லே. ஆனா வந்தவனுக்கு நான் தகப்பன் என்கிற பலவீனம் போல இருக்கு. பாதியிலே காரியத்தை முடிக்காம ஓடிப் போயிட்டான்.

தம்பி பையன்களை நான் ஏன் படிக்க வைக்கணும்? தனி வீடா இருந்தா வீட்டுக்குன்னு பாத்திரம் பண்டம் சேர்க்கலாமே, சினிமா டிராமான்னு நினைச்ச இடத்துக்குப் போகலாமே, பெண்டாட்டிக்கு மூழம்பூ, பொட்டலம் அல்வான்னு தனியா வாங்கிக் கொடுக்க முடியலியேன்னு ஆயிரம் கஷ்டம் இருந்தாலும் நீங்கள் கொஞ்சம் வருஷம் சேர்ந்துதான் இருக்கணும். குப்புவுக்குப் பிள்ளை பிறந்து தலையெடுக்கிற வரைக்கும். சுப்பு பிள்ளை சம்பாதிக்கிற வரைக்கும். அது இந்தக் குடும்பத்திற்கு நீங்கள் பட்டிருக்கிற கடன்.

நான் கண்டிப்பாய் இருந்து விட்டேன். இல்லையென்றால் இத்தனை வருஷம் ஓட்டியிருக்க முடியாது. ராத்திரியில் என்னைக் கொல்ல வந்தது சொந்தப் பிள்ளையில் எந்தப் பிள்ளையென்று நான் யோசிக்கப் போவதில்லை. அதைப் பற்றி எனக்குத் தெரியவும் வேண்டாம்.



அரிசிக்காரர் அபிராமரெட்டியிடம் நான் செத்துப் போன அடுத்த மாதத்தில் அதே தேதியில் இந்தக் கடிதத்தை இந்த வீட்டில் கொடுக்கச் சொல்லியிருக்கிறேன். இந்த நேரம் வயோதிகமோ வயிற்றில் பிறந்ததோ என்னை ஜெயிச்சிருக்கும்.

எனக்கு ஒரு கடைசி ஆசை உண்டு. என் ஆசைன்னு நீங்கள் எதுவும் செய்ய வேண்டாம். அது உங்கள் கடமைதான். பாட்டி காலம் வரைக்குமாவது சேர்ந்து இருக்கப் பாருங்கள். அப்புறம் பகவான் விட்ட வழி. ஆசீர்வாதம்.

யார் அழவில்லையென்று சொல்ல முடியாது. அதிகமாய் அழுதது என்றால் குப்புவும் சுப்புவும்தான். மங்களம் பாட்டிக்கு நினைத்து நினைத்துப் பொங்கியது. சமையலறைக்குள் போய்க் கதவைச் சாத்திக் கொண்டவள் ரெண்டு மணி நேரம் அழுது வீங்கிய முகத்துடன் கதவைத் திறந்தாள். ஹாலில் மூலைக்கு மூலை எல்லோரும் அப்படியே உட்கார்ந்திருந்தார்கள்.

''என்னடாப்பா பண்ணப் போறேன்?''

அம்மா அம்மாவென்று அரற்றினார்கள். ஒரு நூறு தரம் நமஸ்கரித்தார்கள். ஒவ்வொருத்தரும் மடியில் புதைந்து அழுதார்கள். மங்களம் பாட்டியின் கை எல்லாத் தலைகளையும் சமமாய் வருடிக் கொடுத்துக் கொண்டிருந்தது. பாட்டி காலம் வரை சேர்ந்து இருப்பதென முடிவானது.

''ஆறு ஒண்ணு'' என்றான் நாராயணன்.

''என்னடா?''

''கெய்ஸர் ஒண்ணு வாங்கிடுவோம். பாய்லர்லே வெந்நீர் போடறது கஷ்டம்.''

''வாங்கிட்டாப் போச்சு.''

''இன்னொண்ணு'' என்றான் மூத்தவன்.

''சொல்லேண்டா.''

''காப்பிப் பொடியா வாங்கிடலாம்மா. தினம் வறுத்து அரைக்கிறது கஷ்டமாயிருக்கு.''

''சரிடாப்பா'' என்றாள் மங்களம் பாட்டி. அன்றைக்குச் சாயங்காலத்திற்குள் சற்றே சகஜ நிலை திரும்பியது.

வாசல் தெளிக்கிற வேலை இல்லை. ஒரு வருஷத்திற்குக் கோலம் போடக் கூடாது. நேற்றைக்குக் கெய்ஸர் வாங்கியாயிற்று. இன்னும் இணைப்புக் தரப்படவில்லை. ஃபில்டரில் கடைக் காப்பிப்பொடி இறங்கிக் கொண்டிருந்தது.

அந்த ஹாலில் முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் படுத்துக் கொண்டிருந்தார்கள். நாராயணன் விழித்துக் கொண்டான். பார்வையைச் சுற்றிலும் பரவ விட்டான். கல்யாண வீடு மாதிரியிருந்தது. ஒரு புன்னகையுடன் முகத்தை மீண்டும் தலையணையில் புதைத்துக் கொண்டான். கல்யாண வீடுகளுக்கு என்று தனியாய்ச் சுனை ஏதும் இடையாது. கும்பல் தான் சுனை. கும்பல்தான் அழகு. காலையில் முதல் நினைப்பாய் இன்று கல்யாணம் என்று தோன்றியிருக்கிறது. நாராயணன் எழுந்து கொண்டான். அவன் வேஷ்டி சுப்புவின் பிள்ளைக்குக் கீழ் மாட்டியிருந்தது. நாராயணன் மெதுவாய்த் தூங்கிக் கொண்டிருந்த குழந்தையைத் தூக்கினான். வேஷ்டியை எடுத்துக் கொண்டான். ஒரு முறை முத்தமிட்டான். குழந்தை தூக்கத்தில் முறுவலித்துக் கொண்டது.

வெளியே மூத்தவன் பல் தேய்த்துக் கொண்டிருந்தான். பிரஷ் வாயின் உள்ளே புகுந்து புறப்பட்ட விரைவில் ஒரு சங்கீதம் கேட்டது. மூத்தவனின் மோர்சிங்.

''பாவம் அம்மா'' என்றான் நாராயணன். ''இந்த மாதிரி அப்பா அம்மாவுக்காக ஆயுசு பூரா சேர்ந்து இருக்கணும்.''

''அவசியம்'' என்றான் மூத்தவன்.

நாராயணன் மனைவி குளித்து முடிந்த ஈரத் துண்டுடன் வந்தாள். காப்பி கொடுத்தாள். மாடிக்கும் எடுத்துக் கொண்டு கிளம்பினாள். மங்களம் பாட்டி இப்போது அங்கே தனியாய்த் தூங்குகிறாள். கடைக் குட்டிகள் எல்லாமும் அங்கே தான் தூங்கிக் கொண்டிருக்கின்றன. சற்று நேரத்தில் நாராயணன் மனைவி கத்திக் கொண்டுமாடிப் படியில் இறங்கி வந்தாள். மாடியில், குறைந்த சம்பளம் என்கிற அவமானமும், ஒரே பையன் ராமேஸ்வரன் அரை பக்கெட் தண்ணீரில் குப்புற விழுந்து இறந்த துயரமும், இத்தனை பேர் இருக்கிற வீட்டில் இத்தனை பேர் இருக்கிறதனாலேயே யாரும் கவனித்துக் காப்பாற்ற முடியாமல் போய் விட்டது என்ற எண்ணமும், இதனாலெல்லாம் தனியே போய் விட வேண்டும் என்கிற தீர்மானமும், அதைச் செயல்படுத்த முடியாத பயந்த சுபாவமும் கொண்ட குப்பு, மங்களம் பாட்டியின் கழுத்தில் கயிற்றை இறுக்கிக் கொண்டிருந்தான்!

✦

இல்லறம்

எனும்

நல்லறம்

சிறப்பிதழைத்

தயாரித்து அளிப்பவர்


சிதா ரவி

என்பீல்ட்

மண்ணெண்ணை

பம்பு செட்டுகள்

- உறுதியானவை. நம்பிக்கையானவை. நெடுநாள் உழைப்பவை.
- சிறு விவசாயிகளுக்கு மிக ஏற்றவை: 3 ஏக்கர் வரை– 2 ஹார்ஸ் பவர் பம்பு செட்டு 5 ஏக்கர் வரை-3:4 ஹார்ஸ் பவர் பம்பு செட்டு
- மிக இலேசானவை—நிலம் விட்டு நிலம் எடுத்துச்செல்ல எளிதானவை
- அரசுக் கடன்களுக்கும் மானியங்களுக்கும் அங்கீகாரம் பெற்றவை.



என்பீல்ட்

புல்லெட் மோட்டார் சைக்கிள் அளிப்பவர்கள்

ADWAVE EIA 2404

வேறொரு ஸ்கூட்டரில் உள்ள நல்ல சக்கரத்தை மாட்டி விடுவான். தேய்ந்த சக்கரம் வேறொரு ஸ்கூட்டருக்குச் சென்று விடும்!'' என்றான். இந்தப் புதுவிதமான மோசடியைப் பற்றித் தெரிந்ததும் வருத்தத்துடன் வியப்பும் மேலிட்டது.

வி. பாலகிருஷ்ணன்,
கோமியா பீகார்.

என் கடைக்குட்டி ரவிக்கு (வயது 6) பாட்டி ராமாயணம் சொல்லிக் கொண்டிருந்தாள். (ஆரண்யகாண்டம் — ராமர் மாரீசன்



மானைத் தூக்கிக் கொல்லும் நிகழ்ச்சி). 'ராமரின் குரல் கேட்டதும் சீதை லட்சுமணனைப் போய்ப் பார்க்கச் சொன்னாள். லட்சுமணன் சீதையைத் தனியே விட்டு விட்டுப் போனார்' என்று சொன்னாள் பாட்டி. உடனே ரவி, 'பாட்டி அந்த லட்சுமணன் அசடு. சீதையைக் கூட ஏன் அழைத்துப் போகவில்லை?'' என்றான். தன்னை வாயடைத்துப் போகச் செய்த இந்த நிகழ்ச்சியை என் அன்னை சொன்னதும் நான் அசந்து போனேன்.

ராஜலக்ஷ்மி, புலாவல்.

நான் கடை வீதிக்குச் சென்ற போது இரண்டு முதியவர்களை இரந்த ஆட்டோவில் உட்கார வைத்துப் பாண்டு வாத்தியம் முழங்க ஊர்வலம் விடக் கண்டேன். விசாரித்தபோது தெரிந்தது அது ஓர் அலுவலகத்தின் பிரிவுபசார விழா என்று. ஓய்வு பெற்ற பியூனையும் அந்த அலுவலக மானேஜரையும்தான் அப்படி சரியாசனத்தில் அமரச் செய்து வீதி வலம் வரச் செய்தார்கள்! இது நடந்தது மஹாராஷ்ட்ராவின் புலாவல் என்ற பகுதியில்.

மா. சரஸ்வதி, போரூர்

போரூர் — பெரியகரம் வழியில் பாதையோரம் உள்ள ஒரு கிணற்றில் ஏழு



வயது மகனுடன் குதித்துத் தற்கொலை செய்துகொண்டாள் ஒரு பெண். குழந்தை மட்டும் தெய்வாதீனமாய்க் கிணற்றில் இறங்கிய ''பைப்பை'' கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். இரவெல்லாம் கதறியும் வழிப்போக்கர்கள் பேய், பிசாசு என்று நினைத்து பயந்து அவன் உதவிக்கு வரவில்லை. காலையில் அவ்வழியே சென்ற ஒருவர் குழந்தையை மீட்ட போது அவன் காலில் பாம்பு சுற்றிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். இரவெல்லாம் காலில் பாம்பு சுற்றிய நிலையில் விடாப்பிடியாய்ப் பைப்பைப் பிடித்துக் கொண்டிருந்த இந்தச் சிறு பெண்ணின் கதையைக் கேட்டு அதிசயித்தேன். அவள் தாய் மட்டும் தன் நோக்கில் வெற்றி அடைந்திருந்தாள்.

எல். தனலட்சுமி, பங்களூர்


என் உறவுக்காரப்பெண் ஒருத்தி கல்யாணமாகி இருபது வருடங்களுக்கு மேலான பிறகு தாயான நிகழ்ச்சியைக் கேட்டதும் மகிழ்ச்சியுடன் அவளைக் காணச் சென்றேன். அவள் கூறிய விஷயம் என்னை அடேடே அப்படியா என்று வியக்கச் செய்தது.

திடீரென்று வயிற்று வலி கண்டு டாக்டரிடம் சென்றபோது, வயிற்றில் கட்டி இருக்கிறது என்று அவர் கூற நிபுணரிடம் காட்டி அறுவைச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தனர். ஆபரேஷன் செய்யத் திறந்த போதுதான் தெரிந்தது, வயிற்றில் நாற்பது நாளைய குழந்தை இருக்கிறது என்று. உடனே தையல் போட்டு விட்டார் மருத்துவர். அந்த சிசுவைப் பத்து மாதம் சுமந்து நல்லபடியாக பெற்று எல்லோரையும் மகிழ்வித்தாள் அந்தப் பெண்மணி.





அடேடே அப்படியா!



✕ கிருஷ்ணன் சன்னதி

“அவரோ நீர்?”

ஆனந்தி

பரம பதத்தில் ஆனந்த சொரூபியாய் விளங்கும் ஸ்ரீமந்நாராயணன் மானிடர்களாகிய நம்மை உய்விப்பதற்காகத் தம் நிலையைக் குலைத்துக்கொண்டு இந்தப் பூவுலகத்தில் வந்து திரும்பத் திரும்ப அவதரிக்கிறார். அந்தக் கருணைக் கடலுக்கு நிகராக யாரையேனும் சொல்ல முடியுமா?

'முடியும்' என்கிறது குரு பரம்பரை வைபவம் என்ற வைணவப் பெரியார்களைப் பற்றிய நூல்.

பரம பதம் பூமண்டலம் இரண்டிற்கும் உரிய ஐச்வர்யங்களை உடையவரானதால் **உடையவர்** என்று சிறப்புப் பெற்றவரும், துறவிகளுக்கெல்லாம் தலைவரானபடியாலே **எதிராசன்** என்று பெயர் பெற்றவரும், சரஸ்வதி தேவிக்கே பொருள் கூறி கலைவாணியால் **''ஸ்ரீ பாஷ்யக்காரர்''** என்று அழைக்கப் பெற்றவருமான ராமானுஜ முனிகள் ஒரு பெரிய தியாகம் செய்தார்.

திருக்கோட்டியூர் நம்பி என்ற மகானிடம் உபதேசம் பெற வேண்டுமென்ற அடங்காத அவாவினால் ராமானுஜமுனிகள் அவரிடம் நடையாய் நடந்தார். இலேசில் உபதேசம் கிட்டி விடவில்லை அவருக்கு. பதினெட்டு முறை திருப்பியனுப்பினார் குரு. இவ்வாறு ஆவலைப் பெருக்கிய பின்னர் கடைசியில் மனம் உவந்து உபதேச ரஹஸ்யத்தை வேறு யாருக்கும் சொல்ல மாட்டேன் என்று குருவின் பாதங்களைத் தொட்டுச் சத்தியம் செய்த பின்னர் ''அறிய வேண்டிய எல்லாப் பொருள்களுமே எட்டெழுத்து மந்திரத்தில் அடக்கம்'' என்று கூறி மந்திரோபதேசம் செய்தார் திருக்கோட்டியூர் நம்பி.

மந்திரோபதேசம் பெற்ற உடையவருக்கோ மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. உலக மக்களை உய்விக்க இவ்வளவு அற்புத உபாயம் கிடைத்துவிட்டதே என்று மகிழ்ந்தார். திருக்கோட்டியூர் கோயிலில் இருந்தும், கிடந்தும், நின்றும், கூத்தாடியும் சேவை சாதிக்கும் பரந்தாமனைச் சேவித்துக் கொண்டு விறுவிறு என்று கோபுர விமானத்தின் மீது ஏறினார். போவோர் வருவோரை எல்லாம் அழைத்து, ''ஓம் நமோ நாராயணாய'' என்ற எட்டெழுத்து மந்திரத்தின் பொருளை உரைத்து உபதேசம் செய்தார். 'உய்ந்து போவதற்கு இவ்வளவு எளிய மார்க்கம் இருக்கிறதே. அப்படியும் மனிதகுலம் அஞ்ஞானத்தில் உழல்கிறதே' என்று அளப்பரிய கருணையினால் குருவுக்குச் செய்து கொடுத்த சத்தியத்தை மீறி அனைவருக்கும் உபதேசம் செய்துவிட்டார்.


இதை அறிந்த திருக்கோட்டியூர் நம்பி ராமானுஜரைக் கூப்பிட்டு, ''குருவின் ஆணையை மீறியதற்கு என்ன பலன் என்று தெரியுமா?'' என்று கேட்டார்.

''அடியேன் கொடிய நரகத்தையே அடைவேன்'' என்றார் ராமானுஜர்.

''தெரிந்தும் ஏன் மீறினாய்?''

✕ ராஜகோபுரம்





× ராமானுஜர் கோபுர விமானத்தின் மீது ஏறிநின்று எட்டெழுத்து மந்திரத்தின் பொருளை உரைத்து உபதேசித்தார்.

''இதை உபதேசிப்பதால் நான் ஒருவன் மட்டுமே கொடிய நரகத்தை அடைவேன். உபதேசம் பெற்றவர்கள் அனைவரும் தங்கள் அருளால் நல்ல கதியை அடைவார்கள் அல்லவா? அது போதும்.''

இதைக் கேட்ட திருக்கோட்டியூர் நம்பியின் மனம் குழைந்து போயிற்று. ''இப்படிப் பிறர் வாழ வேண்டும் என்ற உள்ளம் எனக்கு உண்டாகவில்லையே'' என்று வருந்தி ''வாரும் எம்பெருமானாரே! அவரோ நீர்'' என்று அணைத்துக் கொண்டார்.

அன்று முதல் வைணவ சித்தாந்தத்துக்கே ''எம்பெருமானார் தரிசனம்'' என்று பெயர் வழங்கலாயிற்று.

இப்படிப்பட்ட ஒரு தியாகச் செம்மலுடன் தொடர்புடைய தலம் திருக்கோஷ்டியூர். காத்தல் கடவுளான ஸ்ரீ வைகுந்தநாதனை எளியோரின் தெய்வமாக்கிய மகான் ராமானுஜ முனிகள்.

திவ்வியப் பிரபந்தத்தை எடுத்துப் பிரித்தால் திருப்பல்லாண்டுக்குப் பிறகு முதலாவது பாடல், ''வண்ண மாடங்கள் சூழ் திருக்கோட்டியூர்'' என்று தொடங்குகிறது. பெரியாழ்வார் மங்களா சாஸனம் செய்த முதல் தலம். கண்ணனுடைய திரு அவதாரச் சிறப்பைப் பாடத் தொடங்கிய பெரியாழ்வார் திருக்கோட்டியூரையே கண்ணன் கேசவன் நம்பி பிறந்த ஆய்ப்பாடியாக நினைத்துப் பாடியிருக்கிறார்.

காலை எட்டரை மணி. கோவில் திறந்திருக்கிறது. கோபுர வாயிலில் நிற்கும் ஒரு சிலரைத் தவிர கோவிலின் உள்ளே யாரையும் காணவில்லை. கையில் அர்ச்சனைத் தட்டுடன் நெடுநேரம் காத்திருந்த பின்னர் ஒரு ஸ்ரீவைஷ்ணவர் வருகிறார். ''இப்போ வந்துடுவார். போயிடாதேங்கோ'' என்று அபயம் கூறுகிறார். அவரிடம் பேசிக்கொண்டே கோவிலைச் சுற்றிப் பார்க்கும் போது அவர் கூறிய சில விஷயங்கள் துயரமளித்தன. பல கோவில்களில் கேள்விப்படுகிற விஷயத்தையே மடைப்பள்ளி கண்ணனும் கூறினார். கோவிலுக்குப்போதிய வருமானம் இல்லை. பணி செய்வோருக்கு எண்பதும், நூறும் சம்பளமாகத் தரப்படுகிறது. அதுவும் குறிப்பிட்ட தினத்தில் கைக்கு வராது. ''பெருமாளுக்குத் திருவமுது பண்ணி வைக்கிறோம் என்ற ஒரே சந்தோஷம் தான் எனக்கு'' என்று அவர் கூறிய போது கண்ணீர் ததும்பி விட்டது.

ஹிரண்யன் எல்லா உலகங்களையும் ஆண்டு வந்தான். தேவர்கள் மனம் திறந்து பேசக் கூட வழியில்லை. கூடி ஆலோசிக்க இடமே இல்லாமல் தவித்தார்கள். கதம்ப முனிவர் என்று ஒரு ரிஷி தவம் செய்து வந்தார். அவருடைய தவக்கனல் துஷ்டர்களும், அசுரர்களும் அவரிருக்குமிடத்தைச் சுற்றி வெகுதூரம் நெருங்க முடியாமல் தடுத்து வந்தது. தேவர்களுக்கு ஒரு இடம் கிடைத்து விட்டது கூடிப் பேசுவதற்கு. தேவர்கள் கூடி மந்திராலோசனை செய்த இடமாகையால் வடமொழியில் ''கோஷ்டிபுரம்'' என்று பெயர் பெற்று தமிழாக்கம் செய்யும் போது கோட்டியூர் என்று வழங்குகிறது.

இதற்குச் சான்றாகக் கோவிலில் நரஸிம்மமூர்த்தியின் இரண்டு சிலைகள் காணப்படுகின்றன. உருட்டி விழிக்கும் கண்களும், பிடரிமயிரும் நகங்களுமாய் உக்கிரமான கோலம்.

இந்தக் கோவிலில் முதலில் நாம் தரிசிப்பது சிவலிங்கமே. சைவ, வைணவ ஒருமைப்பாட்டுக்குச் சான்று பகரும் அரிய கோவிலாகவும் விளங்குகிறது. நான்கு தளங்களாக இந்தக்

× நரஸிம்மவதம்



கோவில் அமைந்திருப்பதும் ஒரு விசேஷம். பள்ளி கொண்ட பெருமாளாகிய சொக்க நாராயணர் சந்நிதியில் காத்திருக்கும் போது வயது முதிர்ந்த பட்டர்வேகமாகப் படியேறி வருகிறார். பாவம்! மேல்மூச்சு வாங்குகிறது அவருக்கு. இத்தனை நேரம் பொறுமையின்றிக் காத்திருந்த போதிலும் அவரைப் பார்த்தவுடனே "பாவம்! அவசரப்படுத்த வேண்டாம்" என்று தோன்றி விடுகிறது. ஸ்ரீதேவி, பூதேவி சமேதராகப் பள்ளி கொண்ட பெருமாளைத் தரிசித்துக் கொள்கிறோம்.

இரண்டாண்டுகளுக்கு முன்னர் இதே இடத்தில் நின்று வேறு விதமாகத் தரிசனம் செய்து மெய் சிலிர்த்த அநுபவம் நினைவுக்கு வருகிறது. திரை விலகி பெருமாளைச் சேவிக்க காத்திருக்கும் போதுமூன்று செப்பு விக்கிரகங்களை அலங்காரங்களுடன் இவ்யப் பிரபந்தங்களைப் பாடிக் கொண்டே கொண்டு வருகிறார்கள். சந்நிதி முன்பாக வைக்கிறார்கள். கூப்பிய கரங்களுடன்நின்ற கோலத்தில் அவர்களைக் காணும் போதே ஆழ்வார்கள் என்று தெரிந்தது. முதலாழ்வார்கள் என்று கௌரவிக்கப்படுகிற பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரையும் பெருமான் தரிசனத்துக்காக ஏள்ளப் பண்ணியிருக்கிறார்கள் என்பது புரிகிறது. அவர்களுடைய திரு நட்சத்திரங்களான திருவோணம், அவிட்டம், சதயம் ஐப்பசிமாதத்தில் அடுத்தடுத்து வருமென்றும், அதையொட்டியே தரிசனத்துக்கு வந்திருக்கிறார்கள் என்றும் அறிந்து கொள்கிறோம். திரை விலகித் தீபாராதனை நடக்கிறது.

"வையம் தகளியா வார்
கடலே நெய்யாக
வெய்ய கதிரோன்
விளக்காக"

ஏற்றி இறைவனைத் தரிசித்த பொய்கையாழ்வார் கோட்டியூர்ப் பெருமாளைத் தரிசனம் செய்கிறார்

"அன்பே தகளியா,
ஆர்வமே நெய்யாக,
இன்புருகு சிந்தை
இடுதிரியா – நன்புருகி,
ஞானச் சுடர்விளக்கு
ஏற்றினேன்..."

என்று பெருமிதத்துடன் பாடிய பூதத்தார் தீபாராதனையைக் கண்டு களிக்கிறார். அருள் ஞானத்தமிழ் செல்வர்களான இம்மூவருடனும் சேர்ந்து அவர்கள் கண்ட பரந்தாமனைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்ததே என்று பரவசமடைகிறோம். கிடந்த கோலத்தில் காட்சி தரும் பெருமானின் திருமேனியைக் காணும் போதே ஆழ்வார்களின் ஞானத் தமிழில் மனம் ஈடுபட்டு ஆனந்தமடையும் அதிசயத்தை உணர்கிறோம்.

மூவரும் தரிசனத்துக்கு நேரில் வந்திருப்பதாகவே பாவித்துப் பெருமானுக்கு அணிவித்த திருத்துழாய் மாலைகளை அவர்களுக்கு அணிவித்துப் பரிவட்டம் கட்டி மரியாதை செய்யும் போது மெய் சிலிர்க்கிறது.

பின்னர் மேல் தளங்களில் உள்ள மூர்த்திகளைத் தரிசனம் செய்யவும், ராமானுஜ முனிகள் உபதேசம் செய்த அஷ்டாங்க விமானத்தைத் தரிசிக்கவும் படியேறிச் செல்கிறோம். வழி குறுகலாகவும் இருட்டாகவும் இருந்தது. அது பரவாயில்லை. திருமகள் நாயகன் குடிகொண்டுள்ள வரலாற்றுப் பெருமை மிக்க இந்தக் கோயில் அசுத்தமாக இருப்பதைக் கண்டு மனம் புழுங்குகிறது.

நான்கு தளங்களாக அமைக்கப்பட்டுள்ள கருவறைகள். கீழ்த்தளத்தில் திருமாமகள் தாயார் சந்நிதியும் கூத்தாடும் கண்ணனின் சந்நிதியும் உள்ளன. இரண்டாம் தளத்தில் கிடந்த கோலத்திலும், மூன்றாவது தளத்தில் நின்ற கோலத்திலும் வயிற்றைப் புரட்டும் நாற்றத்தைப் பொறுத்துக் கொண்டு ஏறினால் அதற்கு மேல் தளத்தில் அமர்ந்த கோலத்திலும் பெருமாளைத் தரிசிக்கலாம். மேல் தளங்களில் பூஜை இல்லை. எம்பெருமான். பரமபதநாதன் தலைகீழாகத் தொங்கிக் கொண்டு தவம் செய்யும் நூற்றுக்கணக்கான வெளவால்களுக்கிடையே இன்முகத்துடன்வீற்றிருப்பதைப் பார்க்கும் போது, "அருவருப்பு உணர்ச்சியெல்லாம் நமக்குத்தான். வெளவாலும் நாமும் அவனுக்கு சமமான ஜீவன்கள்தான்" என்று சமாதானம் செய்து கொள்ளவேண்டியிருக்கிறது.

மேல் தளங்களில்வண்ணச் சித்திரங்கள் காணப்படுகின்றன. நித்திய சூரிகளாலும், தேவர்களாலும் வணங்கப்படும் தாயாரும், பெருமானும் இந்தச் சித்திரங்களில் காணப்படுகிறார்கள்.

மூச்சைப் பிடித்துக் கொண்டு ஏறி மேல்தளத்தில் வெளியே வந்து விட்டால் சுகமான காற்றும், வெளிச்சமும் பரமபதத்தைஅடைந்து விட்டதாகவே தோன்றுகிறது. அங்கே உள்ள ராமானுஜ முனிவரின் திருவுருவத்தை வணங்கி "ஓம் நமோ நாராயணாய" என்று உள்ளம் பாட அந்த இனிய உணர்வில் திளைக்கிறோம்.

மறுபடி இறங்கி வரவே மனமில்லாமல் வரவேண்டியிருக்கிறது. கடைசியாகக் கீழ்த் தளத்தை அடைந்து திருமாமகள் தாயார் சந்நிதியில் "ஹிரண்மயீம் லக்ஷ்மீம் ஸதா பஜாமி" என்று மனம் பாட குங்குமப் பிரஸாதம் பெற்றுக் கொண்டு கிளம்புகிறோம்.

திருக்கோட்டியூர் நம்பி, ராமானுஜ முனிகள் இருவருக்கும் சந்நிதிகள் இருக்கின்றன. ஸ்ரீ ஆண்டாளையும் சேவித்துக் கொண்டு, "பக்தி செய்தால் முக்தி பெறலாம்" என்று மிக எளிமையாக எல்லோருக்கும் உபதேசித்த உடையவரின் பெருமையை எண்ணி வாழ்த்திக் கொண்டேகிளம்பும்போது "பெருமானுக்கு அக்காரவடிசில் தான் இஷ்டம்" என்கிறார் மடைப்பள்ளிக் கண்ணன். அவருக்குத் தெரியாதா?

புகைப்படங்கள்:
மாடர்ன் ஸ்டுடியோ,
காரைக்குடி


ஓம் க்ரீம் க்ரைம்!
1
கதை: ஜே.எஸ்.ராகவன்
சித்திரம்: செல்லம்
வெள்ளைப் பெயிண்ட்டில் புரண்ட முள்ளம் பன்றியைப் போன்ற சதீஷின் நரைத்த தலையை மாதவி ஆராய்ந்து கொண்டிருக்கிறாள்.
சதீஷ்! உன் குணம் தங்கக் கம்பியாக இருக்கிறது போறாதா? தலை பூரா வெள்ளிக் கம்பியாக வேற இருக்கணுமா?
இது ஒரு குறையா? காலேஜ்லே படிக்கும் போதே பசங்க என்னை 'வாலிப-வயோதிக அன்பரே'ன்னு கேலி பண்ணுவாங்க! பழகிப் போச்சு, மாதவி.
சதீஷ்! எனக்கு இது ரொம்ப அவமானமா இருக்கு. உன் நரையைப் போக்க ஒரு வழி செய்யப் போறேன்.
என்ன? அசிங்கமான சினிமா போஸ்டர்ல சர்வோதயா பெண்கள் தார் பூசற மாதிரி என் தலையில பூசப் போறியா?
சீ! ஆல்ப்ஸ் மலையிலேர்ந்து ஒரு சாமியார் வந்திருக்காராம். அவர் குணப்படுத்தப் போறார், பாரு!
ஆல்ப்ஸ் மலையா? அது எங்கே இருக்கு? எனக்குப் பரங்கி மலையே சரியாத் தெரியாது!
அவர் கரடித் தோல் மேலே நிஷ்டையில் இருப்பாராம். திடீர்னு மறைஞ்சு கடப்பா, கல்கத்தா, கொரடாச்சேரிக்கு பறந்து போய் மறுபடியும் தோன்றுவாராம்.
நிஜமாவா? சுவாமி உடம்பிலே ஓடறது ரத்தமா? இல்லாட்டி ஏவியேஷன் பெட்ரோலா?
ஸ்ரீ சுவாமியைப் பத்தி உனக்குத் தெரியாது. அவர் கையிலே ஒரு துப்பாக்கி வெச்சிருக்கார் தெரியுமா?
பின்னே? இப்போ எல்லாம் போலீஸை விட சாமியார் கையிலே தானே துப்பாக்கி நெறைஞ்சு இருக்கு?
ஹூம்! அது சாதாரண துப்பாக்கி இல்லே, மிஸ்டர்! மந்திரத் துப்பாக்கி... ஒருத்தரைப் பாத்துச் சுட்டார்னு.....


ஐயோ! சுட்டாரு?
அதிலேர்ந்து மூலிகை மருந்து புஸ்வாணம் மாதிரி புஸ்ஸுன்னு பீச்சி அடிச்சு, சுடப்பட்டவரோட குறையை நிவர்த்திக்குமாம்.
ரியலி!
வருஷத்துக்கு ஒரு முறை தான் இந்த துப்பாக்கியை யூஸ் பண்ணுவாராம். இந்த வருஷம் உனக்காக ட்ரை பண்ணின்டு இருக்கேன்!
ஹூம்! நம்ப விட்டலாச்சாரியோட பைனான்ஷியர்கள் கூட இதை நம்ப மாட்டாங்க! ஆனா என்னோட மாதவி ஸ்வீட்டிக்காக நான் நம்பறேன்.
சதீஷ்! எது எப்படியோ, உன் முடி எனக்குக் கருப்பாகணும்.
மாதவி! இதோ பாரு! எனக்குக் 'கரடிக்குட்டி லேகியம், கறுப்புப் புலி குல்லாய், கறுப்புச் சாயம் இதெல்லாம் பிடிக்காது!
ஐ நோ! இந்த சாமியார் இதெல்லாம் குடுக்க மாட்டார்.
ஹோமச்சேன்! ஆமா, இந்த சாமியாரைப் பாக்கறதே கஷ்டம்னே! எப்படிக் காண்டாக்ட் பண்ணுவே?
அதுக்குத் தருந்த வழி இருக்கு. கிட்டே வா! சாமியாருக்கு ரொம்ப வேண்டிய ஆள் யார் தெரியுமா?
யாரு?
கவர்ச்சி நடிகை ஸ்ரீலஸ்ரீதான்.
மைகாட்! சாமியாரோட காண்டாக்ட் நடிகையா? அதுவும் ஸ்ரீலஸ்ரீயா? ஆமா, இந்த சாமியார் பேரு?
சுவாமி பிஸ்டலானந்தா!
தொடரும்

மாதிரிகள்

சீனியர் அட்வகேட் ராமதுரையின் பங்களா கேட்டைத் திறக்கும் போதெல்லாம் ஜூனியரின் மனதில் ஓர் எதிர்பார்ப்பு உண்டு. இன்று ஏதாவது சுவையான கேஸ் அவரிடம் வரலாம்! அதன் மூலம் சட்ட நுணுக்கங்கள் ஏதாவது தனக்குப் புரியக் கூடும்! அனுபவ ஞானத்தின் மூலம் தானே தானும் ஒருநாள் பிரபல சீனியர் வக்கீலாகத் திகழ முடியும்?

தினம் காலையில் பத்து மணிக்கு சீனியர் வீட்டில் ஆஜர் ஆவான். இன்று அவர் தகப்பனாரின் சிராத்த தினம். அதனால் அவர் கோர்ட்டுக்குச் செல்வதாக இல்லை. சில கேஸ்கள் விஷயமாக அவனிடம் கூற வேண்டியதைச் சொல்லவே இன்று அவனைச் சிறிது சீக்கிரமாகவே வரச் சொல்லி இருந்தார்.

மணி எட்டு.

வக்கீலின் பங்களாவை அவன் அடைந்த போது, பங்களா தோட்டத்தில் ஒரு கட்டை குட்டையான தடித்த மனிதர், மேல் துண்டு கூட உடம்பில் இராமல் வேஷ்டியை மடித்துக் கட்டி, இரண்டு கைகளிலும், சங்கிலியில் பிணைத்த இரண்டு பாமிரேனியன் நாய்களைப் பிடித்துக் கொண்டு பங்களாவை வலம் வந்து கொண்டிருந்தார். வேறு யாராவது பார்த்திருந்தால் அது வக்கீல் வீட்டுச் சமையல்காரனோ வேலைக்காரனோ என்று எண்ணி இருப்பார்கள்.

வக்கீலுக்கு நாய்கள் என்றால் உயிர்! அவற்றுக்கு வெறி பிடிக்காமல் இருப்பதற்காகத் தடுப்பு ஊசி மருந்தை ஸ்விட்சர்லாந்திலிருந்து ஐந்நூறு ரூபாய் செலவில் வரவழைக்கிற அளவுக்கு நாய்ப் பைத்தியம்.

அவர் பரம்பரையே பிரபல வக்கீல் பரம்பரை. தாத்தா வக்கீல், அப்பாவும் வக்கீல். தாத்தாவுக்கு ஜட்ஜ் முத்துசாமி அய்யரைத் தெரியும். அப்பாவின் பேச்சில் நார்ட்டன் துரை, நியூஜெண்ட் கிராண்ட், அல்லாடி இவர்கள் தான் அடிபடுவார்கள்! அவர் கலைஞர். அத்துடன் பரம ரசிகர். கருணை விலாச சபாவில் அங்கத்தினர். சம்பந்த முதலியார் நாடகங்களில் நடித்திருக்கிறார். நன்றாகப் பாடவும் செய்வார். முத்தையா பாகவதர், மாங்குடி, மகாராஜபுரம், டைகர், அரியக்குடி போன்ற சங்கீத ஜாம்பவான்களின் நண்பர் அந்தக் காலத்தில்.

ராமதுரைக்கு வழக்காடும் திறமையும், ரசிகத் தன்மையும் பரம்பரைச் சொத்துக்கள். நாய்ச் சங்கிலிகளைப் பற்றி இருந்த கைகள், சில பெரிய கிரிமினல் கேசுகளில் லட்சக் கணக்கில் பீஸ் வாங்கின கைகள்.

''ரூம்ல உக்காரு. நான் ஸ்நானம் பண்ணிப்பிட்டு வர்றேன். சாஸ்திரிகள் டான்னு பத்தாவது மணிக்கு வரேன்னு சொல்லி இருக்கார்'' என்றார் ராமதுரை.

அவன் வக்கீலின் அறைக்குள் சென்று அமர்ந்தான். டீபாயில் கிடந்த 'நியூஸ் வீக்'கை எடுத்துப் புரட்டினான்.

கனைத்துக் கொண்டே உள்ளே வந்து ஓர் இருக்கையில் அமர்ந்தார் ஒருவர்.

அவரும் ஒரு பிரபலமான வக்கீல் என்பதை ஜூனியர் அறிவான். ராமதுரை வந்தார்.

சற்று நேரம் குசலப்ரசனமும் உரையாடலும் நடந்தன.

முகக்ஷவரம் இல்லாமல் இருந்த ராமதுரையைப் பார்த்து நண்பர், ''என்ன விசேஷம் இன்னிக்கு?'' என்று கேட்டு, ''ஓ, சிராத்தமா? உடம்பு கிடம்புதான் சரியில்லியோன்னு நினைச்சேன்'' என்றார்.

''உடம்பு சரியில்லாத ஃபீலிங்கே வந்தது ஒருநாள் ஷேவ் பண்ணிக் காட்டா! அப்படிப் பழக்கத்துக்கு அடிமை ஆயிருக்கோம்!''

''என்ன பண்றது? பித்ருக்கள் கரையேறணுமே!''

''என்ன கரையேறறாளோ ஏறலையோங்காணும்! அப்பா காலமானச்சே எனக்கு வயது இருவது. இப்ப எழுவது. அம்பது வருஷமா சிராத்தம் பண்றேன். இன்னும் கரையேறின பாடில்லேன்னு. அவ்வளவு பாவமா பண்ணி இருக்கா நம்ம பித்ருன்னு தோணறது!''

''லண்டனுக்குப் போனீரே, அப்ப என்னமா சிராத்தம் பண்ணினீர்?''

''அதை ஏங்கேக்கறீர்? நான் போகவே படாதுன்னு அம்மா ஒத்தக் கால்லே நின்னு! நான் சொன்னேன், 'தெலுங்கு தேசத்துக்குப் போனா, தெலுங்கு பிராமணன் இருக்கான். கன்னட தேசத்துக்குப் போனா, கன்னட பிராமணன் இருக்கான். வடக்கே போனா, கோட் தலைப்பாவோட, வாயிலே

தி. ராமமூர்த்தி

''அநாவசியமா கவலைப்படாதே! உன் கணவரின் ஒட்டிக் கொண்டிருக்கும் கைகள் தேர்தல் முடிந்த மறுநாள் தானே பிரிந்துவிடும். டோண்ட் ஒர்ரி!''

—கதர்ஸன்.



சுருட்டுக்கூட வச்சிண்டு பண்டாக்கள் இருக்கான். அப்படியே லண்டன்லே இங்கிலீஷ் பிராமணன் இருப்பான், கவலைப்படாதே'ன்னேன். 'அப்படியாஞ, சரி'ன்னுட்டா! நீர் அதிர்ஷ்டசாலி அய்யா! அப்பா அம்மா ரெண்டு பேரும் இன்னும் ஜடாயு சம்பாதி மாதிரி தெடமா இருக்கா! ஹவ் ஆர் தே?''

''நிம்மதியா கிராமத்துலெ இருக்கா. இந்த சத்தமும் அசுத்தமும் புடிக்கலியாம் கேட்டா, அப்பா, 'சிம்பிள் லிவிங், ஹை திங்கிங்னு சொல்றார்!''

''கரெக்ட்! இங்கே கொஞ்ச நாழி கரண்ட் இல்லேன்னு, ஏ. சி. இல்லே, ஃபானும் இல்லே, ஃப்ரிட்ஜ் இல்லே, டீ.வி. இல்லே! பழக்கமானப்புறம், இதெல்லாம் இல்லேன்னு, கஷ்டமாயிருக்கு. கிராமத்துலே எப்பவும் ஒண்ணும் இல்லேன்னு, நிம்மதி தானே?''

நண்பர், வந்த காரியத்தை முடித்துக் கொண்டு சென்றதும்,வக்கீலின் பேரன் பாச்சா உள்ளே ஓடிவந்து, தாத்தா கையில் ஒருவிசிடிங் கார்டைக் கொடுத்தான். ''யாரோ மாமா வந்திருக்கா'' என்றும் சொன்னான்.

கார்டைப் பார்த்ததும், ''என்னது! ஆ ர ா வ ண அடிகாலா? பிரெஞ்சுக்காரன் பேர் மாதிரி இருக்கே!'' என்று வக்கீல் அதைக் கேரம்காயினைத்தள்ளு வதுபோல் ஜூனிய ரிடம் விரலால் சுண்டித் தள்ளி னார். அவனும் படித்தான்.

இங்கிலீஷில்,'' ARAVANA ADIGAL Book Sellers & Publishers'' என்று இருந்தது.

இதற்குள் பாச்சா வெளியே சென்று, அந்த மாமாவை உள்ளே அனுப்பி விட்டான்.

வயது ஐம்பத்தைந்து இருக்கலாம், நல்ல கறுப்பு நிறமான தடிமன் ஆசாமி, கருகரு மீசை; 'டை' போட்ட தலை; பாலிஸ்டர் வேஷ்டி; சில்க் ஜிப்பா; கழுத்தில் மைனர் சங்கிலி; கைவிரல்களில் மோதிரங்கள்.

''வணக்கங்க!''

''வணக்கம், உக்காருங்க.''

வந்தவர் அமர்ந்ததும், வக்கீல் சந்தேகத்துடன், ''நீங்க தான் ஆராவண அடிகாலா?'' என்று வினவினன்.

''அரவண அடிகளுங்க! நம்ப சிலப்பதிகாரத்துலே வருகுதுங்களே!''

''ஐ. ஸீ!''

''ஜெயசந்திரன்னு பேரு. தமிழ்ப் பேரா இருக்கட்டும்னு மாத்திக்கிட்டேன்.''

''அப்ப, தமிழ்லியே பிரிண்ட் பண்ணித் தொலைச்சிருக்கலாமே!'' என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டார் வக்கீல். வெளிப்படையாக, ''சரி, சொல்லுங்க, என்ன விஷயம்?'' என்றார்.

''எனக்கு ரெண்டு சம்சாரங்க!'' என்று தொடங்கினர் வந்தவர்.

''இப்ப திடீர்னு ரெண்டாவதோட கூடப்பொறந்தவங்க எங்கிட்ட வந்து, 'எங்கதங்கச்சியையும் ஒழுங்கா தாலி கட்டிக் கல்யாணம் செஞ்சுக்க.' அப்படிங்கிறாங்க.. ரவுடிப்பசங்க ஸார்!....''



''ரெண்டாவது சமுசாரம்?''

''பேப்புங்க.''

''ஐ. வி ... அப்புறம்?''

''இப்ப என்னோட பிரச்சனை என்னன்னு, அவளுக்குத் தாலி கட்ட முடியுங்களா?''

''முறையானமாக் கட்டுங்க ஆனு, சட்டப்படி மனைவின்னு சொல்ல முடியாது''

''அப்படித்தான் சொன்னுங்க! சட்டப்படி மனைவியாக்கணும்னு என்ன செய்யணும்?''

''முதல் மனைவியை விவாகரத்து பண்ணணும்.''

''அது முடியாத காரியமாச்சுங்களே. பெரிய பொண்ணுங்கள் புள்ளைங்க இருக்காங்களே.''

''ஐ. சீ!''

''வேற வழி என்னங்க?''

''இந்த ரெண்டாவதோட உங்களுக்கு எத்தனை காலமாத் தொடர்பு?''

''அதாச்சுங்க பதினஞ்சு வருஷம்.''

''அடேப்பா! இத்தனை வருஷம் சும்மா இருந்தவங்களா இப்ப வந்து கலாட்டா பண்றாங்க?''

''அதுக்குக் காரணம் இருக்குங்க. இத்தன்னை நான் சுமாரா இருந்தேன். இப்பத்தான் நல்லா வசதியா இருக்கேன். மொதல்ல பொட்டிக் கடைல ஆரம்பிச்சேன். திடீர்னு ஒரு ஐடியா தோணிச்சி. சிலப்பதிகாரம், திருக்குறள், ராமாயணம், திருமுருகாற்றுப்படை, திருப்புகழ்னு புஸ்தகம் போட ஆரம்பிச்சேன். நல்ல சேல்சுங்க. அப்பாலே சொந்தமா பிரஸ் வாங்கினேன். பள்ளிக்கூட புஸ்தகங்களுக்கு கைடுன்னு சொல்றாங்களே. அது போட ஆரம்பிச்சேன். அதுல நல்ல பணங்க. இப்ப அசோக் நகர்ல பங்களா இருக்கு, கார் இருக்கு, 'வான்' இருக்கு. இதெல்லாம் பார்த்துக்தான் இப்ப இவங்க வந்து வம்பு செய்றாங்க. சட்டப்படி கல்யாணம் செஞ்சுக்க முடியாதுன்னு, பங்களாவை அவ பேர்ல எழுதி வைம் பாங்க.''

''வாண்டாமே. அவளுக்கும் ஒரு பங்களா வாங்கித் தனியா வச்சிடுங்களேன்! ஒண்ணா இருந்தா எல்லாம் புடுங்கல்தானே சண்டை, சச்சரவு, குஸ்தி!''

''இப்பவே தனியாத்தாங்க வச்சிருக்கேன்! பொரசவாக்கத்துலே வாடகை வீட்டுலே! சொந்த பங்களா வாங்கித் தரேன்னு வச்சிக்குங்க. ரொம்பப் பிரச்சினைக்கு எடமாயிடும்! அதாங்க பயமாயிருக்கு!''

''ஏன்''

''ஏன்னு, இப்படி ராயப்பேட்டைல இன்னொண்ணு இருக்குங்க. அதுவும் ஒரு பங்களா கேக்குமே!''

திடுக்கிட்டுப் போன வக்கீல், பேசாமல் தலைகுனிந்து சற்று நேரம் சம்மர் ஸ்ராப்பைத் தடவினர். பிறகு, அரவணை அடிகளை நேருக்கு நேர் பாராமல், பக்கவாட்டில் பார்வையைச் செலுத்தியபடி, ''ராயப்பேட்டைல இருக்கறதோட சரியா, இல்லே வேறே பேட்டைகள்ளயும்...'' என்று சீரியஸாகவே கேட்க, அவரும், ''இல்லீங்க... வேறே கிடையாது'' என்று சீரியஸாகவே பதில் கூறினர்.

''அப்ப, ஒண்ணுக்கு ரெண்டா புது பங்களா வாங்கவேண்டியதுதான்! வாங்கிடுங்களேன். ஒங்க கிட்ட தான் பணம் இருக்கு. சிலப்பதிகாரம், திருக்குறள், ராமாயணம், மகாபாரதம் எல்லாம் இருக்கு. கைடுசளும் இருக்கவே இருக்கு!'' என்றார் வக்கீல்.

வந்தவருக்கு அரை மனசாக இருந்தாலும் வேறு வழியில்லை என்று தோன்றியதால் திருப்தி அடைந்தவர் போல் காணப்பட்டார். திப்பாப் பைக்குள் கைவிட்டு, ''ஒங்க பீசுங்க'' என்று கேட்க, ''ஒண்ணும் வேண்டாம். நான் என்ன உங்களுக்காகக் கோர்ட்டுக்குப் போனேனு, வாதாடினேனு!'' என்றார் ராமதுரை.

தடிமன் ஆசாமி பெரிய கும்பிடுபோட்டு வெளியே சென்றதும், வக்கீல் தம் ஜூனியரைப் பார்த்துச் சிரித்தார்.

''கோவலன் கண்ணகியைக் கல்யாணம் பண்ணிண்டு, மாதவியை வைப்பாட்டியா வைச்சிண்டான். அவ்வளவுதானே? இல்லே, பேட்டைக்கு ஒருத்தியை வச்சிண்டிருந்தானா?''

''இல்லே ஸார்.''

''தட்ஸ் ஆல் ரைட்...! இந்தக் கட்டுக்களை எடுத்துண்டு போ! நான் ரொத்தம் பண்ணி டயம் இருந்து, முடிஞ்சால் கோர்ட்டுக்கு வருவேன். இல்லேன்னு இல்லே..! இன்னிக்கு ஒரு மணி நேரம் வேஸ்டுன்னு நினைக்கறியா? வேஸ்ட் இல்லே, கேசுகள் எப்ப வேணும்னாலும் வரும்; வா பாயிண்டுகளைத் தெரிஞ்சிக்கலாம், இந்த மாதிரி அனுபவம் எப்பவும் கிடைக்காது!... மனுஷப்பிறவிலே எத்தனை ஸ்பெசிமெனுகள் பாத்தியா? என்னய்யா சிரிக்கிறே....? நம்ப சீனியரும் ஒரு ஸ்பெசிமென் தான்னு தோணறதோ...?''

ஹோ, ஹோ... என்று அவர் சிரிக்க, ஜுனியர் கேஸ் கட்டுக்களுடன் வெளியே சென்றான்.

''கமலா மார்க்கண்டேயா எழுதிய பாடப் புத்தகத்தைத் தடை செய்தாகி விட்டது என்று மந்திரி சொன்னபிறகு தான் நம்ப பையன் அந்தப் பாடப் புத்தகத்தை, விழுந்து விழுந்து படிக்கிறான்! இதே போல மற்ற பாடங்களையும் தடை செய்தால் தேவலாம், பரீட்சைக்குப் படித்துப் பாஸ் பண்ணி விடுவான் நம் மகன்!''

—சுதர்ஸன்.



காந்தி கிராமம் தயாரிக்கும் தரமான வீட்டு மருந்துகள் மற்றும் டானிக்குகள்

வீட்டு மருந்துகள்

ஓமநீர் — அஜீரணத்தை முழுக்க குணப்படுத்துகிறது.

இஞ்சி மற்றும் எலுமிச்சை சிரப் – பசியைத் தூண்டுகிறது.

இஞ்சி முரபா – (ஜிஞ்சர் முரபா) (அதரக்) – ஜீரண சக்தியை அதிகரிக்கிறது.

பாவன ஜீரகம் – தலைச் சுற்றலை நிறுத்துகிறது. வாயு உபாதையை போக்குகிறது.

பாவன கடுக்காய் – ஜீரண அபிவிருத்திக்கும் மலச்சிக்கலைப் போக்கவும் பயன்படுகிறது.

ஆயுர்வேத பற்பொடி – தேர்ந்தெடுக்கப்பட்ட மூலிகைகளிலிருந்து தயாரிக்கப் படுகிறது. வலிமையான பற்கள், ஆரோக்கியமான ஈறுகளைத் தருகிறது. வாய் நாற்றத்தை போக்குகிறது.

நீலி பிருங்காதி தைலம் – (கூந்தல் எண்ணெய்) - இள நரையையும் முடி உதிர்வதையும் தடுக்கிறது.



ஆரோக்கிய டானிக்குகள்

குல்கந்து – சிறந்த மலமிளக்கி. புதிய ரோஜாப் பூக்கள், சர்க்கரை, தேன் ஆகியவை கலந்து கொண்டு தயாரிக்கப் படுகிறது. கர்ப்பிணிகளுக்குச் சிறந்தது.

அஸ்வகந்தா லேகியம் – இரத்த சோகையைத் தடுக்கிறது. ரத்தத்தை சுத்தி செய்கிறது. உடலைத் தேற்றுகிறது.

சௌபாக்கிய சுண்டி – சிறந்த ஜீரண மருந்து. பிரசவத்திற்குப் பின் பயன்படுத்த சிறந்தது.

கருணை லேகியம் – மூலத்தை தடுக்கிறது.

தேத்தாங் கொட்டை லேகியம் – நோயால் பாதிக்கப் பட்டவர்கள் உடல் தேற சிறந்த டானிக்.

ரோஜாமொக்கு லேகியம் – இரைப்பை புண்ணை ஆற்றுகிறது.

கூஷ்மாண்ட் லேகியம் – பசியைத் தூண்டி ஜீரண சக்தியை அதிகரிக்கிறது பிரைமரி காம்ப்ளெக்ஸ் நோயைப் போக்கவும் பயன்படுகிறது.

சக்தி மால்ட் – மசாலா பொடிகளும் தயார் செய்யப்படுகின்றன.



காந்தி கிராமம் காந்தியின் லட்சியங்களின் வழியில் இயங்கி வருகிறது.

LSS

லெக்ஷ்மி சேவா சங்கம
காந்தி கிராமம் 624 302
மதுரை மாவட்டம் (தமிழ்நாடு)

காந்தி கிராம பொருட்கள் காந்தி கிராம் ஷோரூம்கள், (காந்தி கிராம், மதுரை, திண்டுக்கல், பழநி, திருநெல்வேலி, பன்னைப்பட்டி, அம்பாசமுத்திரம், கல்லிடைக் குறிச்சி, விக்கிரமசிங்கபுரம்) காதி கிராமோத்யோக பவன்கள், சர்வோதய சங்கங்கள், பிரபல மருந்து கடைகளிலும் கிடைக்கும்.

maa(s) 8325 TAM

முன்கதைச் சுருக்கம்

உயர் போலீஸ் அதிகாரி பரந்தாமனின் மகன் ராஜா. முரட்டு சுபாவம் உள்ளவன். தாராவை ஒரு காமாதுரனின் பிடியிலிருந்து தப்புவிக்கப் போக, கொலைக் குற்றத்தில் சிக்கித் தலைமறைவாகிறான். அதனாலேயே அவன் மீது சந்தேகம் வலுப்பட, பரந்தாமனை அவமானம் சூழ்கிறது. மேலதிகாரிகள் அவனைக் கண்டுபிடித்துத்தண்டனை பெற்றுத் தரும் பொறுப்பை அவரிடமே விடுகிறார்கள். பரந்தாமனும் மகனென்று பாராமல் கடமையாற்றத் தயாராகிறார்.

ராஜாவின் மனைவி உமா கருவுற்றிருப்பது தெரிய வருகிறது. குடும்பத்தைத் துயர் சூழ்ந்திருந்தாலும் உமாவின் வளைகாப்பு ஒரு குறையுமின்றி நடக்க வேண்டும் என்று பரந்தாமன் உத்தரவிடுகிறார். ராஜாவை அந்தரங்கமாகக் காதலித்து அதை வெளியிட முடியாமல் தவிக்கும் ஊமை, அவனுடைய முறைப்பெண் விஜி. அவளும் பரந்தாமனின் மனைவி மீனாட்சியும் வளைகாப்பைத் துயரம் அழுத்த விமரிசையாகவே நடத்துகிறார்கள். வளைகாப்பின் போதாவது ராஜா எப்படியும் வருவான் என்று எதிர்பார்க்கிறாள் விஜி. வளையல் அடுக்க ஒரு கிழவனும் கிழவியும் வந்து திரும்பிச் செல்கிறார்கள். வளையல் சுற்றி வந்த தாளில் இருந்த வாசகம் ஏதோ உணர்த்த முயல்வது போல் உணர்கிறாள் விஜி.

பரந்தாமனிடம் பணியாற்றும் டிரைவர் சத்திராஜ். போலீஸ் அதிகாரியின் கண்டிப்பான கடமை உணர்வு காரணமாகத் தன் தாயை இழந்து சிறு வயதில் துன்பப்பட்டவன். பரந்தாமனைப் பழி வாங்க ரகசியமாகத் திட்டமிடும் அவன் ராஜாவை எப்படியாவது பிடித்துப் போலீஸாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று திட்டம் போடுகிறான்.

தாராவோ தன்னைக் காப்பாற்றிய ராஜா போலீஸாரிடம் சிக்கக் கூடாதே என்று சதா கவலைப்பட்டுப் பிரார்த்தனை செய்கிறாள்.


இந்தச் சிக்கல்கள் விடுபடச் சொல் ஒன்று வேண்டும்... கிடைக்குமா?... எப்போது...? தொடர்ந்து படித்தால் தெரியும்!

14

பாபு செம்மலாவுக்குக் கிளம்பிப் போய்— நாலைந்து தினங்களுக்கு மேல் ஆகிவிட்டது. போய்ச் சேர்ந்த விவரத்துக்குக் கடிதமோ, தந்தியோ எதுவுமில்லை.

இதையெல்லாம் தாரா எதிர்பார்ப்பது -மில்லை. நாலு நாட்களாகச் சுதந்திரக் காற்றை அனுபவிக்கிறாள். புருஷனில்லாத இந்த வாழ்க்கை, அவளைப் பொறுத்தவரையில் திருப்தியாகவும், நிம்மதியாகவும் கூட இருப்பது போல.....

கல்யாணமான புதுசில் – தனியாக இருக்கவே பயப்படுவாள் இந்தத் தாரா. இருட்டும்,



சொல் ஒன்று வேண்டும்

அனுராதாரமணன்

தனிமையும் இவளுக்கு சத்ரு. பிறந்த வீட்டில் அம்மா, அப்பா தங்கை, தம்பியென்று சதா நாலு பேர்களுடன் பழகிவிட்டு, இந்த எலிவங்கின் இருளும், பாபுவின் பொறுப்பில்லாத்தனமும் இவளை, கதி கலங்கச் செய்திருக்கின்றன.


பாபு இல்லாத இரவு நேரங்களில், வீட்டிலுள்ள சொற்ப விளக்குகளையும் அணைக்க, விரும்பாதவளாய், நடுக் கூடத்தில், விளக்குக்கு நேர் கீழே படுத்துக் கொள்வாள்.

''எலக்ட்ரிக் சார்ஜை உங்க அப்பன் கட்டுவானா?''

பாபு, எத்தனையோ முறை எரிச்சல் மேலிடச் சொல்லியிருக்கிறான்.

ஆனால்—

இப்பொழுது இந்த இருட்டும், தனிமையும் அவளுக்கு மிகநெருங்கிய சிநேகிதிகளாகி விட்டன. பாபு இல்லாத நாட்களில்..



அவள் தன் வாய் ருசிக்கு ஏற்றாற் போலச் சமைத்துக் கொள்வாள். சினிமாப்பாட்டை இரைந்து பாடுவாள். முடிந்தால் —ஆபீசிலிருந்து நேரே வீட்டுக்கு வராமல், சினிமா, கடற்கரை, கோவில் என்று சுற்றிவிட்டு வருவாள்.

இதுபோன்ற சமயங்களில் – அந்த எலிவங்கு வீடு கூட, அவளுக்குச் சொர்க்கபுரியாகத் தோன்றும்...

இந்த முறை பாபு இல்லாத நாட்களை, அவள் சினிமா, கடற்கரைக்குப் போய்க் கொண்டாடவில்லை. தினமும் கபாலீஸ்வரர் கோவிலுக்குப் போய் – வெளிப் பிராகாரத்தில் ஒரு பக்கமாய் உட்கார்ந்து விடுவாள். இருட்டி வெகு நேரமாகியும் வீடு திரும்ப மனம் வராது.

மௌனமாய், கோபுரத்தை வெறித்தபடி, நெஞ்சுக்குள் அடைந்து கிடக்கும் ரகசியங்களைக் கடவுளின் எதிரில் பரத்தி வைத்து, 'மன்னித்துக் கொள், மன்னித்துக் கொள்'— எனத் தனக்குள் புலம்பி...

அது என்னவோ – கோவிலிலிருந்து வீடு திரும்பும் பொழுது மனசு கனம் குறைந்து, லேசாகி விட்டது போன்ற உணர்வு....

அன்று அவள் வீடு திரும்புகையில் இரவு மணி ஒன்பதாகி விட்டது. பஸ்ஸை விட்டு இறங்கி, மிக நிதானமாய், வீட்டை நோக்கி நடக்கிறாள் அவள்.

வீட்டில் பாபு இல்லை என்பதே பெருத்த நிம்மதியாய்...

பெரிய பங்களாவின் முன் பக்கத்து இருவாட்சியும், பவழ மல்லிகையும் கும்மெனப் பூத்து, மணம் பரப்ப... அந்தச் சுகந்தத்தை நாசி நிரம்ப இழுத்துக் கொண்டவள், கைக்கு எட்டிய ஒரு பூங்கொத்தைப் பறித்து, முகர்ந்தபடி, அவுட் ஹவுஸை நோக்கி விரிந்து கிடந்த சந்தில் 'சரசர' வென நடக்க...

காம்பவுண்டு சுவரோரமாய்ச் சாற்றி வைக்கப்பட்டிருந்த பேனர்களில் ஒன்றுமாத்திரம் மெல்ல அசைவது போல....

'சட்'டென நின்று இமைகளை இடுக்கி, கூர்ந்து பார்க்கிறாள். அவள்...

பிரமையோ...

பேனருக்குப் பின்னால், பெருச்சாளிப் பொந்துகள் உண்டு... ஒருவேளை —பெருச்சாளி போகிற போக்கில் பேனரை மோதிக் கொண்டு போயிருக்குமோ....

இருக்கலாம்...

தாரா, கையிலிருந்த பூங்கொத்தை விசிறி விட்டு நடக்கிறாள்...

ஆனால்...

இது என்ன... மிக அருகில் சருகுகள் மிதிபடும் சரசரப்பு... நின்று முழுசாய்த் திரும்பிப் பார்க்கும் அளவுக்குத் தைரியசாலி இல்லை அவள். விழிகளை மாத்திரம் சத்தம் வரும் பக்கமாய்ப் புரட்டிப் பார்க்கிறாள்.

நெஞ்சு திடுமென ஒரு கணம் ஸ்தம்பிக்கிறது.

நிஜம்தான். பேனர் — உயிரில்லாதபேனர் —மெல்ல அவளை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது... பங்களாவின் மேல் மாடியறை ஒன்றில் எங்கோ எரிந்து கொண்டிருந்த விடி விளக்கின் நீல நிற ஒளியில் —பேனர் உருவம் மசமசப்பாய் விளங்க...

அதில் சிவாஜி கணேசன் சால்வை போர்த்திக் கொண்டு, அழுதபடி இருகைகளையும் உயர்த்தி யாரையோ ஆசீர்வதித்துக் கொண்டிருந்தார்...

அவள் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே — எட்டடி சிவாஜிகணேசனிலிருந்து ஐந்தரையடிக்குள் ஒடுங்கிப்போன உருவம் ஒன்று பிரிந்து — அவள் முன் வழி மறித்து நிற்கிறது...

''ஏ... யாரு...?''

தாரா பெரிசாய்க் குரலெடுக்க முயல அந்த ஆளின் கரம், மிக வலுவாய் இவளது கழுத்தைச் சுற்றி வாயைப் பொத்த.... வியர்த்து, விறுவிறுத்துப் போய் விட்டாள் தாரா. இத்தனைக்கும் அந்த உருவம் — அப்படி யொன்றும் பலம் வாய்ந்ததாயில்லை. நோஞ்சான்தான்...

கறுப்போடு கறுப்பாய், இருட்டோடு இருட்டாய் எதுவுமே பளிரெனத் தெரியாததாய்.....

''இந்தா,சத்தம் கித்தம் போட்டே... இங்கேயே சமாதி கட்டிடுவேன். நேரே வீட்டைப் பார்க்க நட....''

குரலின் கரகரப்பு, வயிற்றுக்குள் இறங்கி, குடலைக் கலக்குவதாய்...

அவள், அவன் சொன்னபடி, செய்கிறாள்.

யூனிசெப் நிறுவனம் எடுத்த ஆய்வு புள்ளி விவரப்படி உலகில் சுமார் 15 மில்லியன் தொழுநோயாளிகள் இருக்கிறார்கள்.

இவர்களில் இந்தியாவில் 3.2 மில்லியன் இருக்கிறார்கள்.

இதில் 60 சதவிகிதம் தென்னிந்தியாவில் இருக்கிறார்கள்.

முதல் இடம்:
தமிழகத்துக்கு 7 இலட்சம்.
அடுத்தது: ஆந்திரம் 6 இலட்சம்.
ஆறுதல்: 80சதம்நோயாளிகள் தொற்று நோய்க்காரர்கள் அல்ல.

தொழுநோய் தடுப்புக்கு என்ன செய்யலாம்? சருமத்தில் யாருக்கேனும் சந்தேகத்துக்குரிய சிறுபகுதி வலி, அரிப்பு, எரிச்சல் இல்லாது மரத்துப் போவதாகத் தோன்றினால் உடனே டாக்டரை அணுகவும். ஆரம்பத்திலேயே குணப்படுத்தி விடலாம்.

தகவல்: வடிவீசுவரம் வள்ளி ரேவதி.



''உம்... கதவைத் திற ..'' அவன், தன் கைப்பையிலிருந்து சாவியைத்தேடி எடுத்துக் கதவைத் திறக்க....

அவளை ஒட்டி நடந்த மனிதன், விளக்கு ஸ்விட்சைத் தட்டி விட்டு, அதே சமயத்தில் வாசற் கதவையும் உட்பக்கமாய்த் தாழிடுகிறான்.

இப்பொழுது தான் தாராவுக்கு அவனைத் திரும்பிப் பார்க்க முடிகிறது. பார்க்கிறாள்.

அவன்...

நாலு நாட்களுக்கு முன்னால் பாபு இருக்கும்பொழுது, தன்னுடன் இரண்டு ஆட்களைக் கூட்டி வந்தவன்... 'விஜி அம்மா அனுப்பினாங்க' — இப்படிச் சொல்லி, இவளை ஆழம் பார்த்தவன்... பாபுவின் கோபத்தை அதிகரிக்கச் செய்து, அவனுக்கு அடி வாங்கித் தந்தவன். ஆம், எத்திராஜ்தான்.

போன முறை வந்த பொழுது, உண்மையைக் கறக்க முடியாது, போலீஸாரிடம் மூக்குடை பட்டுப் போன காரணத்தினால்— இப்பொழுது ஒற்றை ஆளாக வந்திருக்கிறான்.

இத்தனை நாள் இவன் பொறுத்ததே ஆச்சரியம் தான். மனசுக்குள் தாராவைப் பற்றி அழுத்தமான சந்தேகம் விழுந்து விட்டது.

இவனுக்கு ராஜாவைப் பற்றிய செய்தி ஏதோ ஒன்று தெரிந்திருக்கிறது....

மிரட்டினால் விஷயம் வெளியே வராமலா போய் விடும்....

அவன், தாராவின் கையைப் பின்புறமாக வளைக்கிறான்.

''ஆ!'' தாரா, தன்னை மீறிக் கூச்சலிட, அவன் மீண்டும் அவளது வாயை இறுக்கிப் பொத்த...

''ஷ்... கத்தி ஊரைக் கூட்டாதே... நிஜத்தைச் சொல்லு... அன்னிக்கு விஜிகிட்ட என்ன சொன்னே.''

''சத்தியமாச் சொல்றேன். விஜி யாருன்னே எனக்குத் தெரியாது...''

''அப்ப உமாவைத் தெரியும்... இல்லே.''

''உமா.. உமா... யாரது உமா?''

''ஊ.... இந்த நாடகமெல்லாம் உன் புருஷன்கிட்ட வச்சுக்க. சொல்லு. உமா கிட்ட என்ன பேசினே...?''

அவன், அவளது கையை மேலும் முறுக்குகிறான். வலியில், தாராவின் கண்களில் நீர் கனும்புகிறது.

''விடு... விடு என்னை.''

''இதோ பார், நான் கேட்டதுக்கு ஒழுங்கா பதிலைச் சொல்லிட்டா — நான் ஏன் இங்கே நிக்கறேன். விஜி கிட்ட — ஸாரி— விஜியை உமான்னு நினைச்சு, அன்னிக்குப் பேசிட்டிருந்தே... அப்படித்தானே...''

''.....''

''இந்த மாதிரி சண்டித்தனம் பண்ணினா.. குடலை உருவி மாலை போட்டுருவேன்...''

அவன், கையிலிருந்த கத்தியை, அவளது இடுப்பில் உரசும்படி வைக்க...

தேகமே ஒரு கணம் சிலிர்த்து அடங்குகிறது அவளுக்கு... அவனை ஒரு முறை ஊடுருவுவது போலப் பார்க்கிறாள்.

'நான் சொல்வதை இவன் எத்தனை தூரம் நம்புவான்...'



அவன் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே — பளீரெனக் கன்னத்தில் அறைகிறான் எத்திராஜ்.

பரவாயில்லே. ஆளைப் பார்த்தால் நரம்புத் தேள் மாதிரி இருக்கிறானே தவிர — அடி பிரமாதமாகத்தான் இருக்கிறது.

தாரா, தலையை ஒரு முறை உதறி, தன்னைச் சமாளித்துக் கொள்கிறான்..

''உமாவைப் பத்தி, எங்க ஆபீஸ்லே ஒர்க் பண்ற ரமாமணி நிறைய சொல்லியிருக்கா...''

''ரமாமணி... இது யார் புதுசா... சரி, சரி. விஷயத்துக்கு வா. அவ என்னென்னு சொல்லியிருக்கா?''

''பிள்ளைத் தாச்சிப் பொண்ணை இப்படித் தவிக்க விட்டுட்டு, அவ புருஷன் கண்காணாமப் போயிட்டான்னு... எனக்கு அதைக் கேட்கறப்ப எல்லாம் ரொம்பப் பாவமாயிருக்கும். ஒரு நாள் இந்த உமாவும் அன்னிக்கு நான் காருல பார்த்தேனே... அந்தப் பொண்ணும் ஜீப்லே போயிட்டிருந்தாங்க. ரமாமணி, இதுதான் உமான்னு தொலைவுல இருந்தபடியே காட்டிக்காட்டினா.. நான் — சரியாக் கவனிக்கலே. உமாவுக்குப் பக்கத்துல இருந்த பொண்ணுதான் ராஜாவோட பொண்டாட்டின்னு நெனைச்சுட்டேன்... அதனால வந்த தகராறுதான் அன்னிக்கு நான், உமான்னு நினைச்சு, அந்தப் பொண்ணு கிட்டப் பேசினது... அவ உமா இல்லேன்னு தெரிஞ்சதும் ஒரே ஓட்டமா ஓடிட்டேன்...''

''அவ கிட்ட என்ன பேசினே...?''

''என்ன பேசவேன்னு நினைக்கறீங்க? பொண்ணுக்குப் பொண்ணு. இந்த அளவுக்குக் கூடப் பாவம், பரிதாபம் பார்க்க மாட்டாளா... என்னம்மா, விஷயத்தைக் கேள்விப்பட்டேன். கேட்கவே ரொம்ப சங்கடமா இருக்கு. எதுக்கும் நீ கவலைப்படாதே. ஆண்டவன் உன்னைக் கைவிடமாட்டான்னு சொன்னேன்...''

''ப்பூ... இவ்வளவுதானா...?''

எத்திராஜுக்குச் சப்பென்றாகி விட்டது.

அவன் எவ்வளவு எதிர்பார்ப்புகளோடு இந்த வீட்டுக்குள் அடியெடுத்து வைத்தான்.

கடைசியில் — அன்றைக்கு போலீஸ் சொன்னது போல — தனக்குத்தான் மனிதர்களை எடை போடத் தெரியவில்லையோ...?

அவன், அவளையே முறைக்கிறான்.

அவளோ — 'இதற்கு மேல் என்னிடம் விஷயமே இல்லை என்பது போல, தலையைச் சாய்த்து அவனைப் பார்க்கிறாள்.

''ஏய்... ராஜாவைப் பத்தி உனக்கு ஒண்ணும் தெரியாது...?''

''அவன் என்னோட ஒர்க் பண்ணினான். அவ்வளவுதான் எனக்குத் தெரியும்...''

எத்திராஜ், அவளை ஆத்திரத்துடன் ஒருபுறம் தள்ளிவிட்டு, வாசற்கதவைத் திறந்து கொண்டு இருட்டில் கலக்கிறான்...

பங்களாவை ஒட்டிய காம்பவுண்டு சுவரில் ஏறிக் குதிக்க... அதே நேரத்தில் — அதே காம்பவுண்டுச் சுவரின் இன்னொரு முனையில் —தன்னைப் போலவே ஒரு உருவம் பதுங்கிப் பதுங்கி ஏறிக் குதிப்பதை அவன் கவனிக்கவே இல்லை..

சிந்திப்பதற்குச் சிறிது நேரம் ஒதுக்குங்கள். அது இதயத்தின் இசை. சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள். அது சக்தியின் பிறப்பிடம். விளையாட நேரம் ஒதுக்குங்கள்; அது இளமையின் ரகசியம். படிக்க நேரம் ஒதுக்குங்கள். அது அறிவின் ஊற்று. நட்புக்கு நேரம் ஒதுக்குங்கள், அது மகிழ்ச்சிக்கு வழி; உழைக்க நேரம் ஒதுக்குங்கள்; அது வெற்றியின் விலை.

-நபிகள் நாயகம்

—எஸ். மோகனசுந்தரம்.

கவனித்திருந்தால்...

தேடிப் போன மூலிகையே காலில் தட்டுப் பட்டாற்போலத் துள்ளிக் குதித்திருப்பான்

அவன். ஆம்... — அவன் — ராஜாதான்!

இவன் அந்த அவுட் ஹவுஸை விட்டு வெளியேறுகிற அதே சமயத்தில் — ராஜா, தாராவைப் பார்ப்பதற்காகச் சுவரேறிக் குதித்துக் கொண்டிருந்தான்.

காலையில், உமாவின் வளையல் காப்பிற்காகச் செய்யப்பட்ட இனிப்பு — வளையல்கார அம்மாள், மீனாட்சியைக் கேட்டு வாங்கிப் பொட்டலமாய்க் கட்டிக் கொண்ட இனிப்பு-இன்னமும் அவனது பேண்ட் பாக்கெட்டில் இருக்கிறது.

காலையில் நடந்த சம்பவங்கள் —

நெஞ்சுக்குள் மறைந்திருந்த உணர்ச்சிகளைக் கிளப்பி விட்டு, அவனைக் கண் கலங்க வைக்கிறது...

இது நாள் வரையில் அவன் அழுததில்லை. இன்றுதான் அழுகிறான்.

தன் மனைவியை நினைத்து... அவள் வயிற்றில் வளரும் தன் பிள்ளையை நினைத்து....

எல்லாவற்றையும் விட — அவனுக்குத்தக்க சமயத்தில் உதவிய வளையல்கார அம்மாளை நினைத்து...

படித்த — எல்லாம் தெரிந்த தாரா. அவனை வீட்டுக்குள் அரை நிமிஷம் கூடத் தங்க விடாமல் துரத்தியடித்தாள்; ஆனால், படிப்பு வாசனையே இல்லாத அந்த வயசான மூதாட்டி, விஷயத்தை மிகச் சுலபமாகப் புரிந்து கொண்டு, அவனைக் காட்டிக்கொடுக்காமல் உதவினாளே...

மனிதாபிமானத்தைக் கற்றுக்கொடுக்க எந்தப் பள்ளிக் கூடமும் இல்லையோ....

நெஞ்சுக்குள் ரோஷம் கொப்புளித்தது... நேரே — தாராவிடம் போய், மார்தட்டிக் கொள்ள வேண்டும் போல ஒரு வெறி.

''இதோ பார்... என் பொண்டாட்டியோட வளையல் காப்பை நேரே பார்த்து, ஸ்வீட்டும் வாங்கிண்டு வந்திருக்கேன்..... இந்தா — உனக்கும் ஸ்வீட் கொண்டு வந்திருக்கேன்... சாப்பிடு....''

அவன் — அவுட் ஹவுஸின் புறக்கடைப் பக்கக் கதவைத் தோளால் மோதி, 'பளீ' ரென்று உள்ளே பிரவேசிக்க.....

முறுக்கப்பட்ட கையை, குழாயைத் திறந்து, குளிர்ந்த நீரில் காட்டிக்கொண்டிருந்த தாரா — கதவு திறக்கப்பட்ட சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு நிமிருகிறாள்.

(தொடரும்)

ஒரு அநியாய எம். எல். ஏ. அவருடைய நேர் வாரிசான ஒரே பையன். ஒரு சாதுப் பெண். இந்த மூவரைச் சுற்றிப் பின்னப் பட்ட கதை.

அந்த முரட்டு வாலிபன், இந்தச் சாதுப் பெண் போடும் பூ விலங்கால் எப்படி அடங்கிப் போகிறான். அதுவும் கலைபி யாங்கா பாணியில் என் பதைத் தெளிவாய்ச்சொல் லும் திரைக்கதை.

அறிமுகங்கள் — இரு புது முகங்கள்.

குயிலி — கதாநாயகி. அந்த அகலமான பேசும் கண்கள். மோவாயில் இருக் கும் அற்புதமான வெட்டுக் குழி. இரண்டும் சரிதான். ஆனால் பத்து வருடங் களுக்கு முன்னால் திரையில் அறிமுகமாகியிருந் தால் ரசித்திருப்போமோ என்னவோ — டூ லேட்!

முரளி — சடார், சடா ரென்று நிமிர்ந்து பார்க்கும் போதெல்லாம் கண்களின் தீட்சண்யம் எதிராளியைத் துளைக்கிறது. ஸ்டெப்மாற்றி மாற்றி டான்ஸ் ஆடும் லாகவம் என்ன, பாய்ந்து பாய்ந்து சண்டை போடு வதில் காட்டும் துடிப்பு என்ன! சரியான கதா நாயகத் தேர்வு. நிச்சயம் மேலே ஏறி விடுவார்.

அமீர் ஜான் — பாலசந்த ரின் ஷிஷ்யப்பிள்ளை. இந்தப் படத்தின் டைரக்டர். குருவிடமிருந்து இவர் என்னென்ன கற்றுக்கொண் டிருக்கிறார் என்பதற்கு ஒரு லிஸ்டே போடலாம் போல.

பாத்திரங்களைக் குழப்ப மில்லாமல் உருவாக்கியிருக் கும் விதம் நம்பர் ஒன்று. முண்டும், முடிச்சுமாய் இல் லாமல் சீராக இருக்கிற திரைக்கதை நம்பர்இரண்டு. ஷொட்டு வைக்கத் தூண் டும்படியாய் அனைவரையும் நடிக்க வைத்திருப்பதுநம்பர் மூன்று. அந்தத் தண்ணி இல்லாக் காடு காவல்நிலைய மும், வேர்த்து விறுவிறுக் கும் இன்ஸ்பெக்டரும், தொங்கலாடும் இரு கான்ஸ் டபிள்களும் — செமர்த்தி யான பாலசந்தர் 'டச்.'

செந்தாமரை (இவ்வளவு அக்கிரமம் பண்ணுகிற எம். எல். ஏ. இன்று கூட இருக்கி றார்களா என்ன?) ராதா ரவி, ஒய். விஜயா, வாத்தி யார் ராமன் — குந்தகம் விளைவிக்காமல் நடித்திருக் கிறார்கள்.

முன் பாதிக் கதையில் காலேஜ், பையன்கள்கொட் டம் என்று ஆரம்பித்து, என்று ஆரம்பித்து, என்று ஆரம்பித்து — கிட்டத்தட்ட கொட்டாவி விடும்வேளைக்கு பையனுக்கும் பெண்ணுக் கும் காதல் என்கிற சமா சாரத்தைக் காதில் போடு கிறார்கள். கண்டதும்காதல் வர வேண்டாம் . தான். அதற்காக இப்படி ஒரு அனுமார் வால் நீள முன் னுரை அவசியமா என்ன?

சண்டைக் காட்சிகள் பலே ஜோர் என்று மனங் கோணாமல் சொல்லி விட லாம் என்றாலுங்கூட எந்தச் சண்டையுமே ஆரம்பித்து அரை மணி நேரம் வரை விடாமல் தொடர்ந்து கொண்டேயிருக்கிறதா— கிக் குறைந்து விடுகிறது. பாதாம் அல்வாவாகத் தான் இருக்கட்டுமே, துக் குணியூண்டு சாப்பிட்டுவிட்டு மிச்ச மீதி ஒட்டியிருக்கிற விரலைச் சூப்புவதில்தானே ஆனந்தம்!

இளையராஜாவின் இசை!

கிணற்றடியில் குயிலி குளிக்க — தோட்டத்தி லிருந்து அதைப் பார்த்துக் கொண்டே முரளி பாடு கிறாரே ஒரு பாட்டு — விச்சுவேஷனும் சரி, பாட் டும் சரி, இசையும் சரி — க்ளாஸ்!

அப்புறம்?

ஜவ்வு மிட்டாய் பாணி யில் இழுபடாமல் இருக் திருந்தால் இன்னும் நன்றாக ரசித்திருக்கலாம்.

-ஜெயமன்மதன்





நகைச்சுவை உள்ளவரை...

"பத்மா! பத்மா! அப்பா ரேடியோலேபேசறு. வந்து கேளு" என்று நான்கு வயதுக் குழந்தையான பத்மாவிடம் நான் கூறினேன்.

தன் தகப்பனாரின் குரல் ரேடியோவிலிருந்து வருவதை ஒரு நிமிடம் கவனித்துக் கேட்டாள் பத்மா. பிறகு விசும்பி விசும்பி அழத் தொடங்கினாள். பத்மாவின் தாயார் அவளை மடியில் வைத்துக் கொண்டு சமாதானம் செய்தார். "அப்பா இந்தப் பெட்டிக்குள்ளே போயிட்டாளே! எப்படி வருவா?" என்று கேட்டுவிட்டு மறுபடியும் அழ ஆரம்பித்தாள் பத்மா. ஆகக்கூடி அவள் பண்ணின ரகளையில் அன்று அவள் தகப்பனார் "துமிலன்" மாமாவின் ரேடியோ சொற்பொழிவை நாங்கள் கேட்க முடியாமலே போயிற்று. ஆனால் ரேடியோ நிலையத்திலிருந்து துமிலன் திரும்பி வந்த போது நான் அவசரமாகக் கதவைத் திறந்து, "இதோ அப்பா வந்துட்டா பாத்தியா?" என்று பத்மாவிடம் சொன்னதும், அவள் ஓடிப்போய் அவர் தூக்கிக் கொண்ட உடனே தோளில் முகத்தைப் புதைத்துக் கொண்டது நேற்று நடந்தது போல் ஞாபகம் இருக்கிறது.

இன்று துமிலன் அண்டப் பெருவெளியில் கலந்து விட்டார். அவருடைய ஒரே புதல்வியான திருமதி பத்மா ரங்கராஜனிடம் "அப்பா திரும்பி வந்துடுவாரும்மா" என்று சொல்ல முடியாதே என்று நினைக்கும் போது தொண்டையை அடைத்துக் கொள்கிறது.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்ப் பத்திரிகையுலகில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்ட போது பல புதிய எழுத்தாளர்கள் உருவானார்கள். நிஜமாகவே எழுத்தை ஆளும் சக்தி பெற்ற சில நல்ல எழுத்தாளர்கள் பத்திரிகையே படிக்காதவர்களையும், தமிழே படிக்காதவர்களையும் படிக்கத் தூண்டும் வண்ணம் புதிய புதிய உத்திகளைக் கையாண்டு எழுதத் தொடங்கினார்கள்.

இழையோடும் நகைச்சுவையுடன் முக்கியமாகப் பெண்மணிகளும், அம்மாமிகளும் கூட ரசித்துப் படிக்கும் வண்ணம் எழுதி ஒரு வாசகர் வட்டத்தை உருவாக்கியவர் துமிலன்.

அந்நாளில் அவர் ஆனந்த விகடனில் எழுதிய 'அப்பளக்கச்சேரி' பெண்கள் விரும்பிப் படித்த பகுதி. உளுந்து மாவைக் கல்லுரலில் அரைத்து, நெய்யில் பொரித்துச் சர்க்கரைப் பாகில் போட்டு ஊறவைக்கும் 'கல்கத்தா கப்பிப்' என்ற இனிப்பு செய்யும் முறையிலிருந்து அந்த நாள் வம்பு, தும்புகளையும் முக்கிய செய்திகளையும் சுவாரஸ்யமாக எழுதி வந்தார் துமிலன். இதை எழுத அவருடைய பத்தினியாகிய பாலாம்பாள் துணையாக இருந்தார்.

இந்தக் கட்டுரைத்தொடருக்கு மட்டுமின்றி துமிலனின் வாழ்க்கைத்தொடர் முழுவதற்கும் பாலாம்பாள் உறுதுணையாக விளங்கினார். துமிலன் மிக நல்ல நிலையில் வசதியாக இருந்ததும் உண்டு; வறுமையில் உழன்றதும் உண்டு. வாழ்க்கையில் மேடுபள்ளங்களைச் சமமாகப் பாவித்து நிலைகுலையாமலிருந்தார் துமிலன் என்றால் அதற்கு பாலாம்பாள் ஈடுகொடுத்துக் கொண்டு போனது முக்கிய காரணம். கணவன்–மனைவியிடையே உள்ள ஆழ்ந்த அன்பு எவ்வளவு மனோதைரியத்தை அளிக்க வல்லது என்பதற்கு இந்த ஆதர்ச தம்பதி சாட்சி.

பாலாம்பாளின் மறைவு துமிலனைத் தாக்கியது

※ காவல்துறை பற்றி துமிலன் எழுதிய நூலுக்காகப் பரிசும் பாராட்டும். பொன்னாடை போர்த்துகிறார் அமைச்சர் ஆர். எம். வீ. வலதுபுறம் 'அருணோதயம்' திரு. அருணன்.





போல் வேறு எதுவும் பாதித்ததாகக் கூற முடியாது. அப்போதிலிருந்தே அவர் உடல் சிறிது சிறிதாக நலிய ஆரம்பித்தது. இருந்தாலும் கடைசி மூச்சுவரை எழுதினார். அவர் இறந்ததற்கு மறுநாள் வெளிவந்த தினமணி கதிரிலும் வழக்கமான அவர் கட்டுரை இடம் பெற்றிருந்தது. கல்கி விடுமுறை மலருக்குக் கதை கேட்டு எழுதிய கடிதம் மறவாதிருக்க டயரியில் மடித்து வைக்கப்பட்டிருக்கிறது.

பாலாம்பாளுக்கும் மகள் பத்மாவுக்கும் அடுத்தபடியாக அவர் மனத்தை முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்ட விஷயம் நகைச்சுவை. துமிலனும் நகைச்சுவையும் இணைபிரியாத தம்பதி போல. கதையோ, நாவலோ, கட்டுரையோ, எதை எழுதினாலும் நகைச்சுவைக் கலப்பில்லாமல் எழுத அவருக்கு வராது!

எழுத்துலக ஜாம்பவானாகிய அவர் அண்மைக் காலமாக கனமான சீரியஸ் விஷயங்களைத் தமிழில் சொல்ல வேண்டும் என்ற நோக்கில் நிறைய நூல்கள் எழுதினார். போலீஸ்படை பற்றி, ரேடியோ, டெலிவிஷன் பற்றி, இன்னும் பல அரிய பெரிய விஷயங்களை எளிய தமிழில் அனைவரும் ரசிக்க எழுதிக்குவித்தார். அருணோதயம் பதிப்பகம் வெளியிட்டுள்ள இந்த நூல்கள் தமிழில் எதையும் கூற முடியும் என்று நிரூபித்துள்ளன.

மனைவி காலமான பிறகு தனிமை ரொம்பவும் வாட்டாமல் அவரைத் தம் இல்லத்துக்கே அழைத்து வந்து வைத்துக் கொண்டு அன்புடன் கவனித்துக் கொண்டார் மாப்பிள்ளை மணக்கால் ரங்கராஜன். அங்கே துமிலன் ஒரு பெஞ்சைத் தமது கட்டிலாக்கிக் கொண்டு பக்கத்திலேயே எழுத வசதியாக ஒரு மேஜையையும் போட்டுக் கொண்டிருந்தார். மேஜை இழுப்பறையில் முருகன் படம் ஒன்றும் அதோடு ஜெம் கிளிப்பால் இணைக்கப்பட்ட பாரதியாரின் பிரார்த்தனை ஒன்றும் காணப்பட்டது. எத்தனையோ பாரதி பாடல்கள் இருக்க இந்தப் பிரார்த்தனையைத் துமிலன் தம் கைப்பட எழுதி வைத்திருந்தது அவருடைய வாழ்க்கையின் குறிக்கோளாகவே அமைகிறது. அதன் நகலைக் கீழே காணலாம்.

ஆனந்த விகடன், கல்கி, தினமணிக்கதிர், முதலிய பத்திரிகைகளில் துணை ஆசிரியராகவும், ஆசிரியராகவும் பணியாற்றியதோடு இன்னும் சில பத்திரிகைகளிலும், இடைவிடாது எழுதி வந்தார். மாலதி, சுதாமணி ஆகிய சொந்தப் பத்திரிகைகளையும் சில காலம் நடத்தினார்.

அவருடைய வாழ்க்கைத் துணைவியார் நோய்வாய்ப்பட்டிருந்த போது அவரை ஒரு இருதய வைத்தியரிடம் காட்ட வேண்டியிருந்தது. பின்னால், என்னிடம் பேசும் போது அந்த வைத்தியரைப் பற்றி, 'அவரை இதயமில்லாத வைத்தியர் என்றல்லவா சொல்லுறார்கள்'' என்று கூறிச் சிரித்தார் துமிலன். அதில் கூடப் பொருள் பொதிந்த சிறு நகைச்சுவை.

தூய கதராடை அணிந்து சட்டைப் பையில் பேனாவும் கையில் ஒரு புத்தகமுமாகவே எப்போதும் காணப்படுவார், துமிலன். சென்னை மாநகரின் நூலகங்கள் எல்லாம் தமக்காகவே ஏற்படுத்தப்பட்டன போல் கருதி நான் தவறாமல் ஏதேனும் புத்தகங்கள் வாங்கி வந்து படிப்பார்.

காசி, சம்பத் என்று எத்தனையோ புனை பெயர்களில் எழுதித் தள்ளினார். தலையங்கத்திலிருந்து துப்பறியும் நாவல் வரை அவர் திறமையுடன் எழுதாதது எது?

நகைச்சுவை என்ற உணர்வு தமிழனிடம் இருக்கும் வரை துமிலன் என்ற பெயர் நிலைத்திருக்கும்.

—ஆனந்தி

பிரார்த்தனை

கிழவனுடைய அறிவு முதிர்ச்சியும்
நீ பயந்திருக்கின்ற மனத்திடமும்,
இளைஞனுடைய உற்சாகமும்
குழந்தையின் இருதயமும்
தேவர்களே,
எனக்கு எப்போதும்
நிலைத்திருக்கும்படி
அருள் புரியும்படி
வேண்டுகிறேன்

பாரதியார்



பரிதாபத்துக்குரிய வில்லன்

டி. வியிலே பெண் அறிவிப்பாளரைப் பார்த்து விட்டு அவளைத் தீர்த்துக் கட்டப் புறப்படுகிறான் கதாநாயகனான வில்லன் — மன நோயில் பாதிக்கப்பட்டிருப்பவன். வில்லனுக்குப் பயந்து அந்தப் பெண் ஒரு ஆஸ்பத்திரியில் சேருகிறாள். அங்கேயும் அவளை விடாமல் பின் தொடர்கிறான்...

இந்தத் திகில் படம் VISITING HOURS சென்னையில் இப்போது சக்கைப் போடு போடுகிறது. இந்தப் படத்தைக் கல்கிக்காகப் பிரத்தியேகமாகப் பார்த்து விட்டு விமர்சனம் செய்கிறார் பிரபல மன நல மருத்துவர் டாக்டர் என். மாத்ருபூதம்:

சிலுக்கையும் ஸ்ரீதேவியையும் பார்த்துப் பழகிப் போன என்னைப் படத்தின் ஆரம்பமே அசத்தி விட்டது. என் மனைவி என் கரத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். பலவீன இதய முள்ளவர்கள் இந்தப் படத்தைப் பார்க்க வேண்டாம் என்பது என் வேண்டுகோள்.

பொதுவாக மனநோய் உள்ளவர்கள் பார்க்கச் சர்வ சாதாரணமாகத்தான் இருப்பார்கள். இதிலும் வில்லன் கதாநாயகன் அப்படித்தான் தோன்றுகிறான். அவனுடைய ஆஜானுபாகுவான தோற்றம், எதற்கும் கவலைப்படாத சுபாவம், தான் குறி வைத்தவளைத் தீர்த்துக் கட்டும் வெறி எல்லாமே நம்பும்படியிருக்கின்றன. தன் லட்சியத்துக்குக் குறுக்கே நிற்கும் சிலரையும் புழுவை நசுக்குவது போல் கொல்கிறான். பி. எஸ். வீரப்பா சிரிப்பு இல்லை; எஸ். ஏ. நடராஜன்

கணவன்: உன் சமையல் எங்கம்மா சமையலைப் போல இல்லே.

மனைவி: அதுக்கென்ன, உங்கசம்பளம் கூடத்தான் எங்கப்பா சம்பளம் போல இல்லே!



வசனம் கிடையாது; என்னுடைய வில்லத்தனம் விஞ்சுகிறது. மருத்துவமனையின் 'பேஸ்மெண்ட்' அறையில் யாரும் காணாத போது வருந்துகிறானே, அது அருமை. மன நோயாளியை மிக இயல்பாகச் சித்திரித்திருக்கிறார்கள். 'எல்லோரையும் கொன்றவன் அந்தக் குழந்தையை மட்டும் உயிரோடு விட்டது என் மனைவிக்கு ஆறுதல்; ஏன் எனக்கும் தான்.

'வில்லன் ஹீரோ'வின் மனநோய்க்குக் காரணம் அவன் தந்தைதான்; அவனுடைய முரட்டு சுபாவம் தான். அன்பைக் காணாது ஏங்கும் சிறுவன் மனம் விஷமாக மாறுகிறது. முரடனாகவும் கொடூரமானவனாகவும் வளர்கிறான். உண்மையான குற்றவாளி படத்தில் வரும் வில்லன் ஹீரோ அல்ல; சூழ்நிலைதான் என்று தோன்றுகிறது. இவனைப் போல் பலர் இருக்கிறார்கள். வெளிப் பார்வைக்கு வெறியனாக, வீரனாக இருப்பார்கள். உள்ளூர பீதி கொண்ட கோழையாக இருப்பார்கள். என் தொழில் தொடர்பாக இவனைப் போல் பலரைப் பார்த்திருக்கிறேன். ஒருவன் பகை காரணமாகக் கொலை



✖ டாக்டர் என். மாத்ருபூதம்

செய்துவிட்டு ஆயுள் தண்டனை அனுபவித்துக்கொண்டிருந்தான். சிறையில் கலாட்டா செய்தானென்று மனநல மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். அவனிடம் பேசி அவனைப் பற்றிய விவரங்களைக் கேட்டறிந்த போது பரோலில் வெளியே சென்ற போதும் தன் பகைவர் இருவரைக்கொலை செய்து விட்டு வந்ததாகத் தெரிவித்தான். இளமையில் அன்பு, பாசம் கிட்டாமல் ஏங்கியதையும் மனைவியின் அன்பைப் பெற்று ஆரோக்கியமாய் இருந்ததையும் பிறகு அவளும் பிறர் சூழ்ச்சியால் இறந்த போது வெறியனாக மாறியதையும் என்னிடம் கூறினான். எங்களுடைய மன நோயாளிகள் காப்பகத்தில் அவன் பொறுப்போடும் பாசத்தோடும் நடந்து கொண்டான்.

இந்தப் படத்தை நிறையப் பெண்கள் பார்க்க வந்திருந்தது ஆச்சர்யம். 'திரில் எதிர்பார்த்து பிளாக்கிலே வேறு டிக்கெட் வாங்கியது வேஸ்ட்' என்று சில இளைஞர்கள் காதுபட முணுமுணுத்தனர். என்னைப் பொருத்த மட்டில் அந்த பிரும்மாண்ட மருத்துவமனையையும் அதன் வசதிகளையும் பார்த்த போது 'அடடா இப்படி ஒரு இடத்தில் பணியாற்ற நமக்குக் கொடுத்து வைக்கவில்லையே' என்று ஏக்கம் பிடித்துக் கொண்டது.

படத்தைப் பார்க்கும் பெற்றோர்கள் குழந்தைகளை அன்பான சூழ்நிலையில் வளர்க்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தால் நல்லது. வளமான வாழ்வைத் தம் மக்களுக்கு எல்லோராலும் தர முடியாது; ஆனால் அன்பை வழங்குவதில் என்ன கஷ்டம்?

பேட்டி: சிக்கி

கரும்புச் சக்கை காகிதமாகிறது



✕ 'தொழில்வளம் பெருகினாலே வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும்'

சர்க்கரை ஆலைகளின் ராட்சத இயந்திரங்கள் வண்டி வண்டியாய் மென்று 'துப்பிய' கரும்புச் சக்கைகளுக்கு நேற்று வரை எரிபொருள் என்கிற மதிப்பே இருந்து வந்தது. ஈரோடு பள்ளிப்பாளையத்தில் தொடங்கியுள்ள பொன்னி சர்க்கரை ஆலையில் சக்கைக்கும் வாழ்வு தந்து விட்டார்கள்.

கரும்புச் சாறு பிழிந்தான பிறகு ஒதுக்கப்படும் சக்கையைப் பஞ்சபஞ்சாக என்கிற மாதிரி அடித்துச் சிதைக்க இயந்திரங்கள் வந்து விட்டன. உமி வேறு தவிடு வேறு என்று கரும்புச் சக்கையிலிருந்து தக்கைப் பொருளைச் சலித்து ஒதுக்கினால் சக்கை இழை கிடைக்கிறது. சன்ன ரகச் சேமியா மாதிரி மின்னுகிற இந்தச் சக்கை இழைகள் அருகேயுள்ள சேஷசாயி ஆலையில் காகிதமாகப் புதுப் பிறவி எடுக்கின்றன.


இந்தியாவிலேயே சர்க்கரை ஆலையின் கழிவுக் குப்பையைக் காகிதமாக்குவது முதன் முதலாகப் பொன்னி — சேஷசாயி ஆலைகளில்தான். ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள்.

இப்போது நாடு முழுவதிலும் உள்ள காகித ஆலைகளின் மொத்த உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்குப் பத்தொன்பது லட்சம் டன்கள்தான். இந்த நூற்றாண்டின் இறுதியில் நாட்டின் மொத்த காகிதத் தேவையோ அறுபத்தோரு லட்சம் டன்கள் என்று சொல்கிறார்கள். முன்னேறிய நாடுகளின் தனி மனிதர் சராசரித் தேவை ஆண்டுக்கு 170 முதல் 420 கிலோ காகிதம். ஆனால் நமக்குக் கிடைக்கக் கூடியது நாலரைக் கிலோ மட்டுமே தான். காகித உற்பத்தியில் நாம் எவ்வளவு பின்னடைந்து இருக்கிறோம் என்பதைப் பொன்னி 'ஆலைத் தலைவர் திரு. என். விஸ்வநாதனின் வரவேற்புரையில் தெளிவாகவே கேட்க முடிந்தது.

காடுகளையும் மரங்களையும் மட்டும் நம்பி இந்தியாவில் காகிதப் பஞ்சத்தைச் சமாளிக்க முடியாது. வனச் செல்வத்தைப் பேணவும் பெருக்கவும் அவசியமேற்பட்டுள்ள வேளாண்மை நாட்டில், மாற்று ஏற்பாடுகள் செய்தாகவேண்டும். ஆண்டொன்றுக்கு என்பது லட்சம் கற்பூர மரங்கள் தேவை. வரும் எட்டு ஆண்டுகளில் 41 லட்ச ஏக்கர் நிலப்பரப்பில் தைல மரங்களைப் பயிரிட வேண்டும் என்கிறார்கள்.

மாற்று மூலப்பொருளின் அவசியம் உணரப்பட்ட போது, கரும்புச் சக்கை கைகொடுத்தது. பொன்னி உட்பட, பாரதத்தின் 330 சர்க்கரை ஆலைகளில், தினசரி 2500 டன் கரும்பைச் சாறு பிழியும் ஆலைகள் ஐம்பது உள்ளன. இவற்றில் கிடைக்கும் சக்கைகள் மட்டும் 68 லட்சம் டன்களாம். இது காகித உற்பத்திக்கான மூலப்பொருள் தேவையில் பாதி அளவுக்குக் கைகொடுக்கும் என்கிறார்கள்.

மாண்புமிகு தமிழகமுதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர்.



சென்றோம், பார்த்தோம், சொல்கிறோம்

நிலைமையில், பொன்னி சர்க்கரை ஆலையை மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சர் ஆர். வெங்கடராமன் திறந்துவைத்தார். கரும்புச் சக்கையைக் காகிதத் தயாரிப்புக்குப் பக்குவப்படுத்தித் தருகிற அமைப்பைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு எஸ். முத்துசாமி தொடங்கி வைத்தார்.

பொன்னி ஆலையிலிருந்து சேஷசாயி ஆலைக்கு 68 லட்சம் டன் சக்கை மூலப் பொருளாய்க் கிடைக்கும். ஆலைகளின் மிகப் பெரிய இயந்திரங்கள் எல்லாம் இந்தியாவில் தயாரானவைதான் என்பது கூடுதல் பலம்.

சர்க்கரை ஆலையைத் தொடங்கி வைத்த ஆர். வி. அவர்களின் உரை அருமையான ஒன்று. சிலபகுதிகள்:

● சேஷசாயி காகித ஆலையைத் தொடங்கும் போது ஆர். வி. தொழில் அமைச்சர். நூறு லட்சம் நிதி உதவி தரலாம் என்று அவர் குறிப்பு எழுதிய போது அதிகாரிகள் மிரண்டார்கள். பத்து லட்சத்துக்குத்தான் கூடுதலாய் ஒரு ஸைபரைச் சேர்த்து விட்டாரோ என்று சந்தேகப்பட்டுக் கேட்டார்கள். 'வந்த பைலுக்குக் கையெழுத்துப் போட்டு விட்டு வசதியாகப் பொழுதைக் கழிப்பதை விட்டு விட்டு வம்பில் ஏன் மாட்டிக் கொள்கிறீர்கள்? பின்னால் ஆடிட், பொதுக் கணக்குக் குழு என்று வந்தால் யார் பதில் சொல்வது?' என்றெல்லாம் கேட்டார்கள். கைகொடுத்தவர் அப்போதைய முதல்வர் காமராஜர்தான். ''பெரிய எடுப்பில் தொழில்களைத் தொடங்க வேண்டுமென்றால் ரிஸ்க் எடுக்காமல் முடியுமா? அப்படிச்செய்யாவிட்டால் பெரிய ஆலைகளை எப்படி உருவாக்குவதாம்?'' என்று கேட்டவர் காமராஜ். இப்போது சேஷசாயி ஆலை முதல் தரமான ஆலையாக வளர்ந்து விட்டது.

● இரண்டாம் உலகப் போருக்குப் பின் கருகிப் போன மேற்கு ஜெர்மனி பத்து ஆண்டுகளில் பிரமாதமாக வளர்ந்தது. ''இந்த அற்புதம் எப்படி நிகழ்ந்தது?'' என்று வியந்த போது சொன்னார்கள். ''யுத்தம் எங்கள் தொழிற்சாலைகளை மட்டும் தான் அழித்தது. ஆனால் எங்கள் திறமையை எந்த மகா யுத்தமும் அழிக்க முடியாது.''

● சர்க்கரையைத் துணைப் பொருளாகவே உற்பத்தி செய்து உப்பு மாதிரி மிகக் குறைவான விலையில் ஏன்



✕ 'தொழிற்சங்கங்கள் போக்கு விசனத்துக்குரியது.'

இலவசமாகக் கூட மக்களுக்குக் கிடைக்கச் செய்யும் நிலை உருவாக வேண்டும். மொலாஸஸ், சக்கை.... என்று உப பொருள்கள் எல்லாவற்றையும் வெவ்வேறு தொழில்களுக்குப் பயன்படுத்தும் போது சர்க்கரையின் விலை குறையும்.

● இங்கே வேலை தர வேளாண்மை மட்டும் போதாது. அதுவும் தண்ணீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்கிற நிலையில், நூறுக்கு எழுபது பேர் வேளாண்மையில் உள்ள நிலை நமக்கு ஏற்றதல்ல. இருபது சதவீதம் பேரை வேளாண்மைத் தொழிலிலிருந்து பிரித்துத்தொழில் துறையில் ஈடுபடுத்தியாக வேண்டும். அந்த அளவுக்குத் தொழில் வளம் பெருக வேண்டும்.

மாண்புமிகு முதல்வர் உரையாற்றும் போது ஆளுக்கு ஒரு வீடு, உழுபவனுக்கே நிலம் சொந்தம், போன்ற கோஷங்களின் போலித் தன்மையை அம்பலப்படுத்தினார். தொழிற் சங்கங்களில் எந்த அரசியல் கட்சிகளுக்கும் இடமிருக்கக் கூடாது. தொ. ச. தலைவராகத் தொழிலாளர்கள் தான் வர வேண்டும் என்றார்.

பின்னி ஊழியர்கள் நிராதரவாய் நின்ற நேரத்தில் அரசு கொடுத்த இருநூறு ரூபாய் உதவிப் பணத்தில் கூடத் தொழிற் சங்கங்கள் பத்து ரூபாய் பங்கு கேட்டு வாங்கிய கேவலத்தை முதல்வர் வேதனையோடு குறிப்பிட்டார்.

அமைச்சரும் முதல்வரும் பேசக் கேட்பதற்கு எல்லாம் நன்றாய்த்தான் இருக்கிறது. ஆனால் பூனைக்கு மணி கட்டப் போகிறவர் யார்?

—நிருபர்

✕ 'நாட்டில் எல்லா கரும்புச் சக்கையையும் காகிதம் தயாரிக்கப் பயன்படுத்தினால் பாதி உள்நாட்டுத் தேவை பூர்த்தியாகும்.'





தராசை பாதித்த டீ.வி.ஸ்பெஷல்



● ''டெலிவிஷன் ரேடியோவைப் பாதிக்கின்றதோ இல்லையோ அதுபற்றிக்கவலை இல்லை. ஆனால் டீ. வி. ஸ்பெஷல் நீங்கள் கேட்டவை (தராசு பதில்கள்) யைப் பாதித்து விட்டதே! ஊரூர் வெளிக்கடை.

டி. ராஜன்.

● உமாபதி. நாட்டு நடப்பை. நகைச்சுவையாக, 'நாட்டுச் சிறப்பு' நமுட்டுச் சிரிப்பு!' என்ற பெயரில் வழங்கியமை... மிகச் சிரிப்பாக இருந்தது!
குளச்சல்

எம். எம். இப்ராஹிம்


● புடவைக்குப் பின்னல் ஒளிபவர்களை நன்றாகவே அடையாளங் காட்டி விட்டார் ஜெரா. இக்கதையை இல்லத்தரசிகள் தம் கணவன்மார்களையும் கண்டிப்பாய்ப் படிக்க வைக்கவேண்டும்.
தஞ்சாவூர். அ. சம்பத்.

● 25.3.84 கல்கி இதழில் நீங்கள் கேட்டவை பகுதியில் பி. எச். இ. எல். இருக்க ஹங்கேரியிலிருந்து நெய்வேலிக்கு பாய்லர் தருவிப்பது ''ஸ்விஸ்பாங்க் நியாயம்'' என்று கூறப்பட்டுள்ளது. இது பொறுப்பற்ற பதில். பி.எச்.இ.எல் தயாரிக்கும் கொதிகலன்கள் நிலக்கரியை. மட்டுமே உபயோகித்துச் செயல் படுபவை. ஆனால் நெய்வேலியைப் பொறுத்த வரை குறைந்த கலோரி மதிப்புள்ள பழுப்பு நிலக்கரி உபயோகிக்கப்படும் பாய்லர்களே தேவை. இந்த டெக்னிக்கில் நாம் இன்னும் முழுமையாக தேர்ச்சிபெறாததால் இத்துறையில் சிறந்து விளங்கும் ஹங்கேரியநாட்டிலிருந்து பாய்லர்களைத் தருவிக்கும் கட்டாயம் உள்ளது.
நெய்வேலி. சண்ணபிரான்.

● சமீபத்தில் எங்களூரில் ஒரு மன்றத் திறப்பு விழாவும் அமைச்சருக்குபாராட்டு விழாவும் நடந்தது. இரவு 7 மணிக்கு என்றுசொன்ன கூட்டம் அமைச்சர் 8.45க்கு வந்த பிறகு தான் நடந்தது. அன்று மதியத்திலிருந்து அமைச்சர் வரும் வரை ஒலி பெருக்கியில் சினிமா பாடல்களும் கட்சிப் பாடல்களும் ஒலித்துக் கொண்டே இருந்தன. இந்த ஒலிபெருக்கித் தொல்லையினால் பரீட்சை சமயமாயிருந்தும் படிக்க முடியவில்லை.
வளவனூர்.

சி. ஆர். நாகராஜன்.

மேற்படி கடிதம் பரிசுபெறுகிறது



● மாணவர் பக்கங்களில் கவிதை எழுதிய ஒருமாணவியின் சொந்த அத்தைநான். முழு விலாசத்துடன்கவிதை வெளியிடப்பட்டுள்ளது. இதனால் பாராட்டுக் கடிதங்கள் என்று எழுதப்பட்டு, அருவரிய வார்த்தைகளும் அதில் சேர்க்கப்பட்டுள்ளன. மாணவி மன வேதனை அடைந்திருக்கிறாள். எனவே பெண்கள் பெயரை மட்டிலும் பிரசுரித்து கதை. கட்டுரை போன்றவற்றை வெளியிடுங்கள். முகவரி வேண்டாம்.
காவேரிப்பாக்கம்

ஆர். சகுந்தலா.

மேற்படி மாணவிக்கு ஏற்பட்டுள்ள மனத்துயர் அறிந்து நாமும் மிகவும் வருந்துகிறோம். முகவரி வெளியிடும் போதுதான் அந்த மாணவன் அல்லது மாணவி படிக்கும் கல்லூரியே பெருமையடைகிறது. பெயர் மட்டும் பிரசுரித்தால் யார் எழுதியது என்று யாருக்குத் தெரிய வரும்? எனவே சில அற்பர்களின் அசட்டுத் தனங்களைப் பொருட்படுத்தாமல் அத்தகைய கடிதங்களைக் கண்டதுமே கிழித்துப்போட்டு விட்டு நிம்மதியாய் இருக்குமாறு வேண்டுகிறோம்.


-ஆசிரியர்

● ஏப்ரல் முதல் நாளைய கல்கி இதழின் தலையங்கம் மிகவும் நன்று. இந்திராகாங்கிரஸார் எல்லா இடத்திலும் தனது மேலாதிக்கம் இருக்க வேண்டுமென நினைக்கின்றார்கள். இன்னும் இந்தியாவில் ஓரளவு நம்பிக்கை அளிப்பது நீதித்துறைதான். அதனையும் அழித்து விட நினைக்கிறார்கள். நீதியின் ஒளியை அணையாது காக்க வேண்டியது நமது இன்றியமையாத கடமையாகும்.
சென்னை-15.

'கோ. கவிவரதன்.

● இந்த இதழ் ''டீ. வி. ஸ்பெஷல்'' தான் பரத்திவிட்டது போங்கள்.
காரைக்குடி.

வி. எஸ். அனந்தராமன்



ரோஜாக் கனவுகள்

ஒரு புதிய அழைப்பு



நா. காமராசன்

இரவு — இருண்ட இரவு. மலைகளுக்கு நடுவில் ஒரு தொட்டிலைக் கண்டேன். அதனுள்ளே உயிரோட்டமுள்ள மனிதகுலம் கிடந்தது. மலைகளில் ஒன்றில் காலக்கிழவன் அமர்ந்து தொட்டிலை ஆட்டிக் கொண்டிருந்தான். அந்தக் குழந்தைகள் தூங்கட்டும் என்று ஒரு பாசுரம் பாடிக் கொண்டிருந்தான். வானமுகட்டில் ஒரு நட்சத்திரம் ஒளிவீசத் தொடங்கியது. அவன் மேலேறி அதை அணைத்து விட்டான். மினுமினுக்கும் அழகான ஒளிக்கதிர்கள் குழந்தைகளின் கண்களில் பட்டு விடக்கூடாதென அவன் நினைத்தான். அவன் எல்லா நட்சத்திரங்களையும் அணைத்து விட்டான். எங்கும் ஒரே இருள். புதைகுழியில் இருப்பதைப் போன்ற அமைதி நிலவுகிறது.

மிகத் தொலைவிலிருந்து மேகங்கள் வந்தன. ரோஜா வண்ணமுடைய கனவுகளைச் சுமந்து கொண்டு, சுதந்திரத்தையும் அனைத்துலக நேசத்தையும் போற்றும் பாடல்களை மேகங்கள் இசைத்தன. குழந்தைகள் பாடல்களைக் கேட்டபடி — அசைந்து கொடுத்துப் புன்முறுவல் பூத்தன. பாடல்கள் மிக இனிமையாக ஒலிக்கத் தொடங்கின. குழந்தைகள் விழித்துக் கொண்டு ரோஜா வண்ணமுடைய கனவுகளை நோக்கித் தம் கைகளை நீட்டின. காலக் கிழவனுக்குக் கோபம் வந்து விட்டது. குழந்தைகளைத் தொட்டிலில் போட்டுக் கட்டினான். சில பழைய மனிதர்களை அழைத்தான். அவர்கள் நீண்ட கருத்த உடைகளை அணிந்து முகங்கள் இருண்டு தோற்றம் காட்டினார்கள். மேகங்களைத் துரத்தி விட்டு — அவர்கள் குழந்தைகளைத் தூங்க வைத்தார்கள்.

கண்களை இறுக மூடிக்கொண்டு குழந்தைகள் தூங்கின. அந்த மேகங்களைக் கனவுகளில் தரிசனம் செய்தன. இதை அறியாமல் காலக் கிழவன் தொட்டிலை ஆட்டிக் கொண்டிருந்தான்.



என்ன படிக்கலாம் எங்கே படிக்கலாம்?

''மத்தவங்களிலிருந்து நான் கொஞ்சம் வித்தியாசமா இருக்கணும்னு ஆசைப்படறேன். வழக்கமான ஃபிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி, ஹிஸ்டரி, எகனு மிக்ஸ்னு படிக்காம, வித்தியாசமான படிப்புப் படிக்கணும்னு இருக்கேன்'' என்று ஆசைப்படுகிறஉஷா;

''கல்யாணப் பேச்சை எடுத்தாலே, பின்னே விட்டார் கேட்கிற முதல் கேள்வி. 'பொண்ணு வேலைக்குப் போறுனா?' என்பதுதான். என்ன படிச்சாக் கொஞ்சம் சுலபமாய் வேலை கிடைக்குமோ அதைத்தான் என் பொண்ணைப் படிக்கவைக்கப் போறேன்'' என்று சொல்கிற ஜானகி அம்மாள்;

''வெறுமனே டிகிரி வாங்கிட்டுச் சும்மாத்தானே இருக்க வேண்டி இருக்கு! எவன் வேலை கொடுக்கறுன். என்ஜினியரிங், மெடிக்கல்னு போனு. கோட்டா, ரிஸர்வேஷன் என்று ஏகப்பட்ட கட்டுப்பாடுகள். ஆசைப்பட்ட படிப்பைப் படிக்க வழியில்லையே'' என்று ஆதங்கப்படுகிற கணேஷ்;

''என் பெரிய பையன் ப்ளஸ்டூ படிக்கிறுன் இந்த வருஷம். என்ன படிக்க வைக்கறது? எங்க படிக்க வைக்கிறது? ஒண்ணும் புரியலே!'' என்று மண்டையை உடைத்துக் கொள்கிற அப்பா விஸ்வநாதன்.

ஒவ்வொரு வருடமும் மே, ஜூன் மாதங்களில் ஆயிரக்கணக்கான உஷாக்கள், ஜானகி அம்மாக்கள், கணேஷ்கள், விஸ்வநாதன்களைப் பயமுறுத்துகிற — குழப்புகிற பெரிய பிரச்னை இது.

காரணம்?

அவர்களோ, அவர்கள் வீட்டிலோ பையனே, பெண்ணே பள்ளிக்கூடத்தில் பிளஸ் 'டூ'வை முடித்து விட்டு, கல்லூரியில் காலெடுத்து வைக்க இருப்பதுதான்.

''எனக்கு எந்தக் கல்லூரியில் என்ன படிப்பு இருக்கிறது? என் பையனைஎன்ன படிக்க வைத்தால் நல்லது? எப்போது அட்மிஷனுக்கு அலைவது என்றெல்லாம் ஒரு ஐடியாவும் கிடையாதே! நாம் இதைப்பற்றி யாரிடமாவது போய் விவரமாய்ப் பேச வேண்டும் என்று தோன்றுகிறது. ஆனால் யாரிடம் போய்ப் பேச?'' இப்படி கவலைப்படுகிற தகப்பனர்கள் பலர்.

வெங்கடராமனுக்குப் பிரச்னை வேறு. ''என் பையனுக்கு எலக்டிரிகல், எலெக்டிரானிக்ஸ் இதில் எல்லாம் கொஞ்சம் இன்டரஸ்ட் உண்டு. ஆனல் ஓகோ என்று படிப்பு வராது. நான் அவனை என்ன செய்வது?''

ராமச்சந்திரனின் பிரச்னை கொஞ்சம் வித்தியாசமானது.'' என் பையன் ஜெயகுமார் நன்ருய் படம் போடுவான். ஸ்கூல் போட்டிகள் பலவற்றில் பரிசுகளாக வாங்கி வீட்டில் குவித்திருக்கிறுன். அவனை இதே லைனில் விடலாமென்று பார்க்கிறேன். இதற்கென ஏதாவதுதனிப் படிப்பு, கல்லூரி இருக்கிறதா?''

இவர்களுக்கெல்லாம் — இவர்களின் பிரச்னைகளுக்கெல்லாம் விடை சொல்லப் போவதுதான் இந்தத் தொடர். எங்கெங்கே என்னென்ன விதமான படிப்புக்கள் உள்ளன அவற்றுக்கான அட்மிஷன் விதிமுறைகள் என்னென்ன? அதில் என்னென்ன சொல்லித் தருவார்கள்? அதை முடித்த பிறகு என்ன வேலை வாய்ப்புக்கள் உள்ளன? என்றெல்லாம் விளக்கமளிக்கும் இந்தத் தொடர்.


உங்களுக்கு உபயோகமாக இருக்கப் போகும் இந்தத் தொடரை நாங்கள் எழுத, எங்களுக்கு உதவப் போகிறவர்கள் யார் யார்?

சமீபத்தில் ஓய்வுபெற்ற கல்வித் துறை உயர் அதிகாரிகள், ஓய்வு பெற்ற துணை வேந்தர்கள் என்று பலர். இவர்கள் தவிர சென்னைப் பல்கலைக் கழகத்தின் ''மாணவர் தகவல் மையம்.'' இதன் பொறுப்பாளரான திருமதி. சுசீலா மாரியப்பன், ''இந்தத் தகவல் மையம் அமைக்கப்பட்டதன் நோக்கமே இது போன்ற உதவிகளைச் செய்யத்தான். இந்தத் தொடரின் மூலம் பல உபயோகமான தகவல்களை நாங்கள் தர முடியும்'' என்கிறுர்.

அவரை அடுத்த வாரம் சந்திப்போமே!

-எஸ். சந்திரமௌலி





அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி-1984.



அமரர் கல்கி அவர்களின் நினைவாக ஆண்டுதோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் வழக்கம்போல் இந்த ஆண்டும் எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

முதல் பரிசு	**ரூ.**	**1000**
இரண்டாவது பரிசு	**ரூ.**	**500**
மூன்றாம் பரிசு (இரு கதைகளுக்கு தலா ரூ. 250 விதம்)	**ரூ.**	**500**

ஆக மொத்தம் ரூ. 2000 பரிசுகளாக வழங்கப்பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 100 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

❊ கதைகள் சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழி தேவை.

❊ அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தரவேண்டும்.

❊ நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்,

கதைகளை அனுப்பவேண்டிய கடைசி தேதி: ஜுன் 15

❊ உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.

❊ பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.

❊ கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

❊ எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.

❊ சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

❊ போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் கல்கி ஆகஸ்டு 5 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.

ஆசிரியர், கல்கி, சென்னை - 600 032.



வருகைதாரீர்
விழா
30 கைத்தறிக் கண்காட்சி
கோ-ஆப்டெக்ஸ் மைதானம்
பாந்தியன் சாலை.
எழும்பூர். சென்னை-8
DIPR-200/84 ELEGANT
சிறப்புத் தள்ளுபடி.
20%-40%
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி



விவாத மேஜை

இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில், 'ஒரு பெண்ணின் பார்வையில்' என்ற குறிப்போடு ஆங்கிலத்தில் மெலிதான நகைச்சுவையோடு, சுவாரசியமாகப் பல செய்திகளை எழுதி வருகிற மாலினி சேஷாத்ரி -

'வாய்ஸ் ஆ∴ப் அமெரிக்கா'விற்கு, இந்தியாவின் தென் பகுதி நிருபர்களில் ஒருவர்;

தூர்தர்ஷன், வானொலிக்கு அடிக்கடி விஷயதானம் செய்பவர்;

ஹைதராபாத் 'டைம்ஸ் ஆ∴ப் டெக்கான்' இதழில் உடல் நலம், மருத்துவம் பற்றி எழுதுகிறவர்;

'ஹிந்து' இதழில், குழந்தைகள் ஆண்டின்போது தொடர்ந்து குழந்தைகள் உரிமை பற்றிக் கட்டுரைகள் வழங்கியவர்;

'இந்தியா டுடே' இதழுக்கும் அவ்வப்போது எழுதி வருபவர்.

சில பொது நிகழ்ச்சிகளில், காரசாரமான பேச்சாளர் இடையே சரளமான ஆங்கிலத்தில் இவர் அமைதியாக- ஆனால் அழுத்தமாக, தம் கருத்துக்களைச் சற்றே நகைச்சுவை கலந்து பேசி வருபவர்.

மாலினி சேஷாத்ரி, கல்கிக்கு முதன்முதலாக எழுதுகிறார். உங்கள் பிரச்னைகள் கூட இவர் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை எழுதப்போகும் கட்டுரைகளில் பிரதிபலிக்கும். ''விவாத மேஜை'' என்று தலைப்பிட்டுப் பிரச்னையைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதுங்கள்.

-ஆசிரியர்



''ஐயையோ இதைப் படித்தாயோ அஞ்சலி?'' என்று கூவினார் ராஜகோபாலன் ஒரு கையால் அன்றைய தினசரியை மடித்துத் தட்டத்துக்குப் பக்கத்தில் வைத்துக் கொண்டு, மற்றொரு கையால் மூக்குக் கண்ணாடியைச் சரி செய்தபடியே.

''கொஞ்சம் இருங்கள்'' என்று ரசச் சொம்புடன் சமையலறையிலிருந்து வந்தாள் அஞ்சலி. அதைச்சாப்பாட்டு மேசை மீதுவைத்து விட்டு, ''ஆங்... இப்போது சொல்லுங்கள்; அப்படியென்ன இடுக்கிடும்படியான செய்தி? நானும்தான் காலையிலே பேப்பர் படித்தேன். ஒன்றும் காணவில்லையே'' என்றாள்.

''அரசாங்க மூத்த அதிகாரி ஒருவர், யாரிடமிருந்தோ தவறான வழியில் பணம் பெற்றுக் கொண்டதற்காக, தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்'' என்று வாசித்தார் ராஜகோபாலன். குரலில் கோபம் தெரிந்தது. ''சே... சே... நிலைமை எப்படி ஆகிக் கொண்டு வருகிறது...''

''சுற்றி வளைப்பானேன்? லஞ்சம் வாங்கினார் என்று சுருக்கமாகச்சொல்லிவிட்டுப் போவதுதானே?'' என்றான் விவேக். ''உனக்கு இதெல்லாம் ஒன்றும் தெரியாது ரஞ்சிதா''

''உனக்குத் தான் எல்லாம் தெரிந்த மாதிரி காட்டிக் கொள்ளாதே. எனக்கும் தெரியும். நானொன்றும் பச்சைக் குழந்தை இல்லை!''

''இதில் அதிர்ச்சியடைய என்ன இருக்கிறது?'' என்றாள் அஞ்சலி, கறியைப்பரிமாறியபடியே. ''எல்லோரும் லஞ்சம் கொடுக்கிறார்கள். எல்லோரும் லஞ்சம் வாங்கிக் கொள்ளுகிறார்கள். இதை எல்லோரும் செய்கிறார்கள் என்றும் எல்லோருக்கும் தெரியும். இதுதான் வாழ்க்கையின் ஓர் அம்சமாகி விட்டதே!''

''என்ன பேசுகிறாய் நீ? இவர் அரசாங்கத்தில் ஓர் உயர் அதிகாரி. ஏழை ஒன்றும் இல்லை. பணம் தேவையுள்ள குமாஸ்தாவும் இல்லை.''

நேர்மையே உன் விலை என்ன?

மாலினி சேஷாத்ரி



''ஒவ்வொருவருக்கும் ஒரு விலையுண்டு'' என்றாள் ரஞ்சிதா. ''புதன் கிழமை நான் படித்த நாவலில் கூட கதாநாயகன் அப்படித்தான் சொல்லுகிறான்.''

''அரசியல் வாதிகள் மட்டும் லஞ்சம் கொடுப்பதும் வாங்கிக் கொள்வதும் இல்லையாக்கும்?'' . என்று குறுக்கிட்டான் விவேக். ''இந்தக் காலத்தில் எல்லோருமே லஞ்சம் வாங்குகிறவர்கள்தான். அதுதான் வாழ்க்கையில் 'முன்னேற' ஒரே வழி.''

''உங்கள் ஸ்கூல்போதனை வகுப்பில் இதுதான் சொல்லித் தருகிறார்களா?'' என்று விவேக்கிடம் கடுமையான குரலில் கேட்டார் ராஜகோபாலன், கண்ணாடியின் மேல் பாகத்தால் அவனை அளந்தபடி. ''உன் மாதிரி இளைஞர்களை ஒன்றுக்கும் உபயோகமில்லாதவர்களாக வெறுப்பேற்றி விட்டு விடுவார்கள் போலிருக்கிறது!''

''மற்றவர்களைப் பற்றிச் சொல்லுவானேன்? நம் கதை ஞாபகம் இல்லை? ஜனவரியில் மதுரைக்குப் போக பாண்டியன் எக்ஸ்பிரஸில் நாலு பெர்த்ரிசர்வ் செய்திருந்தோம். ஸ்டேஷனுக்குப் போய்ப் பார்த்தால் ரெண்டு 'பெர்த்'தான் ரிசர்வ் செய்திருக்கிறீர்கள் என்றான். நீங்கள் அப்போது என்ன செய்தீர்கள்?''

''போர்ட்டரிடம் இருபது ரூபாயைக்கொடுத்துபாக்கிப் இரண்டு 'பெர்த்'தை எப்படியாவது சமாளிக்கச் சொன்னார் அப்பா. தெரியாதா?'' /என்றான் விவேக் எக்காளத்துடன்.

''அது ஒன்றும் லஞ்சம் இல்லை நமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியவை அவை. ரயில்வேக்காரர்கள் ஏதோ குளறுபடி பண்ணி விட்டார்கள். நமக்குச்சேரவேண்டியது நமக்குக் கிடைக்க நியாயமாக எவ்வளவு கொடுக்கணுமோ, அதற்கும் மேலேயே உண்மையில் கொடுத்திருக்கிறேன். தெரியுமா?''

''என்ன சொன்னாலும், போர்ட்டருக்குக் கொடுத்தது லஞ்சம்தான்'' என்றாள் அஞ்சலி அமைதியாக.

''ஆமாம். அன்றைக்குப் பாபு மாமாவை, வெப்பு சிக்னலில் இருக்கும் பொழுதே கார் ஓட்டிக் கொண்டு போனதற்குப் போக்குவரத்து போலீஸ்காரர் காரை நிறுத்திநம்பர் எல்லாம் குறித்துக்கொண்ட போது, நீங்கள் என்ன சொன்னீர்கள் அப்பா, நினைவில்லை? 'பாபு, நீ ரொம்ப சாது அந்தப் போலீஸ்காரருக்கு ஐந்தோ பத்தோ கொடுத்திருந்தால் உன்னைச் சும்மா விட்டிருப்பார்' என்று சொல்லவில்லை நீங்கள்?'' என்றாள் ரஞ்சிதா.

''ஆனால் அது ஒருசின்னசாதாரண — குற்றம் தானேம்மா! அப்போது விபத்துகிபத்து ஏற்பட்டதா என்ன! ஐம்பது ரூபாய் அபராதம் கட்ட வேண்டியதற்கு, ஐந்தோ பத்தோ கொடுத்து அந்தச் சமயத்தில் தப்பித்து வந்திருக்கலாமே?''

''அப்பா ரொம்பத்தான் ஓட்டுகிறார். அது லஞ்சம் மட்டுமல்ல. போலீஸ்காரர்களிடையே அவர்கள் கடமையைச் சரிவரச் செய்யாமல் தடுத்து, அவர்களிடையே லஞ்சம் பரவலாக வளர அப்பா செய்கிற உபகாரம் தான் அது'' என்றான் விவேக்.

''சரி சரி.... இவையெல்லாம் கூடத் தப்புத்தான். ஆனாலும் அதனால் யாருக்கும கெடுதல் இல்லை. ஆனால் இந்த அரசாங்க உயர் அதிகாரி யாரிடமோ நிறையப் பணம் வாங்கிக் கொண்டு, அவருக்குத் தாராளமாகச் சலுகை காட்டுகிறேன் என்று சம்பாதித்திருப்பார். உண்மையிலேயே அவர் ஒரு மோசமான பேர்வழியாக இருக்க வேண்டும்!''

''ஒருவேளை பெரும்பாலான மற்றவர்களைப் போல அல்ல என்றுவேண்டுமானால் சொல்லலாம்'' என்றாள் அஞ்சலி. ''மனிதர் அஜாக்கிரதையாக இருந்து மாட்டிக் கொண்டு விட்டார்.''

''நல்ல நடத்தையுள்ள நேர்மையான மனிதர்கள் உலகில் நிறையவே இருக்கிறார்கள். ஆனால், என்ன செய்வது? அவர்களைப்பற்றி யாரும் எந்தப் பத்திரிகையிலும் எழுத மாட்டார்கள். அதனால் உலகமே லஞ்ச லாவண்யத்தில் மூழ்கித் திளைக்கிறது என்று தான் எல்லோரும்நினைப்பார்கள்''

''அதனால்தான் பலரும் லஞ்சம் வாங்கி விட்டுப்பிடிபடாமலே தப்பித்து விடும் போது கூட 'அவர் லஞ்சம் வாங்கிக் கொண்டுமாட்டிக் கொள்ளவில்லையே நாமும் வாங்கினால் என்ன?' என்று எண்ண ஆரம்பிக்கிறார்கள்''

''யாரும் கண்டுகொள்ளவில்லை என்றால் நீ லஞ்சம் கொடுக்கவோ வாங்கிக் கொள்ளவோசெய்வியோ?'' என்று கேட்டாள் ரஞ்சிதா.

விவேக்கால் பதில் சொல்ல முடியவில்லை. ராஜகோபாலன்தான், ''எப்படியாவது சிரமம் இல்லாமல் நம் காரியம் ஆனால்போதும் என்று நாம்தான் ஒவ்வொரு சமயம் நினைக்கிறோம். அந்தக் குற்ற உணர்ச்சி இருக்கிறதனால்தானோ என்னவோ ஒருவர் இந்த மாதிரி செய்தது தப்பா சரியா என்று தீர்ப்பு வழங்குவதில்லை நாம்'' என்றார்.

''அப்பா சரியான போதனை வகுப்பு வாத்தியார் மாதிரியே பேசுகிறார்'' என்று கிண்டல் பண்ணினான் விவேக்.

''சர்... சரி... போதும். இரண்டு பேரும் பேச்சை நிறுத்துங்கள். கையைக் கழுவி விட்டுப் படுக்கப் போங்கள்'' என்றாள் அஞ்சலி கண்டிப்பும் கறாருமாக.

''நீ சொல்கிறபடிகேட்காவிட்டால், எங்களுக்கு ஏதாவது லஞ்சம் கொடுப்பாயோ?'' என்று குறும்புத்தனமாகக் கேட்டுவிட்டுச் சிரித்தாள் ரஞ்சிதா.

புகைப்படம்: சுபா.

வள்ளுவர் எடுக்கும் MBA வகுப்பு

எம். பி. ஏ. படிப்பு இன்று மிகப் பிரபலமாகி விட்டது. பி. காம் படித்தவர்கள், பி. ஏ. தேறியவர்கள், இன்ஜினியரிங் பட்டதாரிகள் போன்ற பலரும் எம். பி. ஏ. படிக்கிறார்கள். இவர்களுக்குப் பெரிய நிறுவனங்களில் வேலை வாய்ப்பு இருக்கிறது. ''எம். பி. ஏ. படிப்பின் அடிப்படைகளெல்லாம் வள்ளுவரின் நாலு குறள்களில் அடங்கி விடுகின்றன'' என்கிறார் பம்பாய் ஹிந்துஸ்தான் லீவரில் கார்ப்பரேட் அக்கௌண்டண்டாகப் பணியாற்றும் திரு. சுந்தரம். சென்னைப் புதுக்கல்லூரியில் பி.காம் படித்து சென்னைப் பல்கலைக் கழகத்தில் எம். பி. ஏ. தேறி, பிறகு I.C.W.A. முடித்து இன்று உயர் பதவியில் உள்ள சுந்தரம், சிறந்த மாணவர் என்பதால் பல தங்கப்பதக்கங்களைப் பெற்றவர். திருக்குறளைக் கருத்தூன்றிப் படித்துள்ள இவர் நாலு குறள்பாக்களையும் அவற்றுக்கு இணையான எம்.பி.ஏ. படிப்பின் அடிப்படையையும் பட்டியலிடுகிறார்:

1. Delegation of authority

''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல்.''

2. Planning

''எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு.''

3. Cost Control

''ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை போகாறு அகலாக்கடை''

(ஆகாறு — வருவாய்; போகாறு —செலவு; அகலாக்கடை — வரவுக்கு மேல் அதிகப்படாதிருந்தால்).

4. Communication

''சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச் சொல்லை வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து.''

''இந்த நான்கு திருக்குறள்களிலும் எம்.பி.ஏ. அடங்கி விடுகிறது'' என்கிறார் சுந்தரம்.



இந்தப் பயிற்சியை, தொழிற்புரட்சி காலத்தில் டெய்லர்என்பவர் விஞ்ஞான ரீதியான தொழில் நிர்வாகம் என ஒரு கலையாக அறிமுகப் படுத்தினார். இதையே அடிப்படையாகக் கொண்டு அதே கால கட்டத்தில் ஹென்றி ஃபேயால் என்பவர் நிர்வாகத் தத்துவங்களை வெளியிட்டார்.

''பி. ஏ., என்ஜினியர் போன்ற தொழில் கல்வி பயின்றவரும் ஏன் எம். பி. ஏ. படிக்கவேண்டும்?''

''எம்.பி.ஏ. படிப்பு இவர்களுக்கு கணக்குத்தணிக்கை, உற்பத்தித் துறையில் மட்டுமின்றி நிர்வாகத்துறையிலும் உதவி செய்கிறது. ஒன்றுக்கு ஒன்று அனுசரணை. இனி டாக்டர்கள் கூட ஆஸ்பத்திரி நிர்வாகத்துக்காக எம். பி. ஏ. படிக்கலாம். இன்னும் சில ஆண்டுகளில் எம். பி. ஏ. படிப்பு தேவைப்படாத துறையே இல்லை என்று ஆகலாம்!''

பத்தாண்டுகள் நிர்வாக அனுபவத்தில் பெறக்கூடிய அறிவு எம். பி. ஏக்களுக்கு இரண்டே ஆண்டுகளில் போதிக்கப்படுவதால் இவர்கள் உத்தியோகப் பொறுப்பேற்றதும் எந்த விதமான சிரமத்தையும் உணர்வதில்லை. ஜெட் வேகத்துடனும், கம்ப்யூட்டர்களோடும், இயங்கும் எம். பி. ஏக்களுக்கு நிறுவனங்களில் உள்ள பழமைவாதிகளால் தடை உண்டாகுமோ?


''இது ஒரு தற்காலிகமான பிரச்னை'' என்கிறார் திரு. சுந்தரம். ''சம்பிரதாயவாதிகளிடம் முதலில் எதிர்ப்பு இருக்கத்தான்செய்யும். பிறகு அவர்களே மனம் மாறி இவர்களுக்கு ஆதரவு தருவார்கள். இன்னும் பதினைந்து ஆண்டுகளில் பெரும்பாலான எல்லாத் தலைமைப்பதவிகளிலும் எம்.பி.ஏக்கள் வந்து விடுவார்கள். எம்.பி. ஏக்களுக்கு முக்கியமாக அளிக்கப்படும் போதனை அனுசரித்துப் போவது. அதாவது மற்றவர் கருத்துக்களுக்கு மதிப்பளித்து அதைப் புரிந்து கொள்வது. எனவே பழமைவாதிகளையும் இவர்கள் சமாளித்து விடுவார்கள்! தவிர இப்பயிற்சியைப் பெற்றவர்கள், நிறுவனங்களின், பிரச்னைகளைப் புரிந்து கொண்டு புதுநோக்குடன் அலசி ஆராய்ந்து தீர்வு காணும் திறமையைத் தங்கள் கல்வி மூலம் பெற்றுள்ளார்கள். தொழிலாளர்களின் பிரச்னைகளையும் புரிந்து கொண்டு பணியாற்ற முடிகிறது.''

பல மானேஜ்மெண்ட் கல்லூரிகளில் நிதி நிர்வாகம் பற்றி விரிவுரை ஆற்றுகிறார் சுந்தரம்.

-லட்சுமி கண்ணன்

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publication Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran


இணைந்த உழைப்பு...
சிறந்த பிணைப்பு!
பற்களை சுத்தம் செய்வதற்கு உறுதியான நீலக் குச்சங்கள்
ஈறுகளைத் தேய்த்துக் கொடுப்பதற்கு மென்மையான வெள்ளைக் குச்சங்கள்
போர்ஹென்ஸ் டபிள்-ஆக்ஷன் டூத்ப்ரஷ் போல. உங்கள் பற்களை சுத்தம் செய்யும்போதே ஈறுகளையும் தேய்த்துக் கொடுக்கிறது.
போர்ஹென்ஸ்
டூ-இன்-ஒன் டூத்ப்ரஷ்
ஆங்குலர் டீலக்ஸ், அடல்ட் மற்றும் ஜூனியர் சைஸ்களில் கிடைக்கின்றன.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka